கொழும்பு உயர் மறைமாவட்ட தமிழ் கத்தோலிக்க பத்திரிகை

(20.05.2018 - 20 வைகாசி 2018 - ஞாயிற்றுக்கிழமை) ஒளி - 08, கதிர் - 184, 20 பக்கங்கள் ரூபா: 30.00 பத்திரிகையாக பதிவு செய்யப்பட்டுள்ளது : QD /72 / NEWS / 2018

# ஞான ஒளி

ඥාන ඔලි GNANA OLI

ஆரம்பம் : 2010, புரட்டாதி – 05




# “குருத்துவம் கடவுளுக்கும், அவருடைய மக்களுக்கும் சேவை செய்வதற்கே”

## குருத்துவ திருநிலைப்படுத்தல் சடங்கில் கர்தினால் ஆண்டகை...




கொழும்பு உயர்மறைமாவட்டத்தைச் சேர்ந்த 12 திருத்தொண்டர்கள் இம் மாதம் 12ம் திகதி பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையினால் குருக்களாக திருநிலைப்படுத்தப்பட்டார்கள். அன்றைய தனது மறையுரையில் “குருத்துவம் என்பது கடவுளுக்கும் அவருடைய மக்களுக்கும் சேவை செய்வதற்காகவே அன்றி வேறு எந்த நோக்கத்தையும் கொள்ளவில்லை. இதனை எபிரேய மடலில் தெளிவாக குறிப்பிட்டிருப்பதை காணலாம். குருக்கள் இறைமக்களிடமிருந்தே கடவுளால் தேர்ந்து கொள்ளப்படுகின்றார்கள். இறைவன் தேர்வு செய்து தனது பணியினை மக்களிடையே ஆற்றுவதற்காக அவர்களை அனுப்புகிறார். கிறிஸ்து, மேன்மையான குரு. தன் தந்தைக்கு பலி நிறைவேற்றி மக்களின் இணைப்பாளரானார். எனவே குருக்களும் கடவுளுக்கும் மக்களுக்கும் சேவை புரிந்து இணைப்பாளராக இருக்க கடமைப்பட்டுள்ளார்கள்.

தொடர்ந்து கூறிய கர்தினால் ஆண்டகை “நீங்கள் என்னை தேர்ந்து கொள்ளவில்லை, நான் தான் உங்களை தேர்ந்து கொண்டேன். எனவே நீங்கள் என்னில் இணைந்திருங்கள்”... தொடர்ச்சி 15ம் பக்கம்..

# கொழும்பு உயர் மறைமாவட்ட ஆயரின் பதிலாளர்களும் அவர்களின் நியமனங்களும்



அதிவண. அருட்பணி.
தயா செல்டன் வெலிக்கடராச்சி
கொழும்பு மறைக்கோட்டம்



அதிவண. அருட்பணி.
சிஷ்வான் டி குரூஸ்
நீர்கொழும்பு மறைக்கோட்டம்



அதிவண. அருட்பணி.
ஜோசப் பெற்றிக் பெரேரா
துறவிகளின் பொறுப்பாளர்



அதிவண. அருட்பணி.
நிஹால் ஐவன் பெரேரா
அப்போஸ்தலிக்கபணி I, கல்வி

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் இந்நியமனங்கள் 12.05.2018 அன்று சனிக்கிழமை வழங்கப்பட்டன. இவை 01.06.2018 தொடக்கம் அமுலாகும்.

# இயேசுவின் நண்பர்களாய் வாழ அழைக்கப்பட்டுள்ளோம்



கிறிஸ்துவோடு நட்புணர்வு கொண்டிருப்பதே, நமக்கு வழங்கப்பட்டுள்ள கொடையும், அழைப்பு-மாகும். இயேசுவின் இதயத்திற்குள் நுழையும் அனுமதியையும், அவரது நட்பையும் கொடையாகப் பெற்றுள்ள நாம் ஒவ்வொருவரும், இக்கொடைக்கு இறைவன் எப்போதும் விசுவாசமாக உள்ளார் என்பதை உணர்ந்திருக்கவேண்டும்.

“அன்பில் நிலைத்திருங்கள்” என்ற நற்செய்தியில் கூறும் சொற்களை மையமாகக் கொண்டு தன் கருத்தைப் பகிர்ந்துகொண்ட திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இயேசு தன் சீடர்களை பணியாட்கள் என்று அழைக்கவில்லை, மாறாக, நண்பர்கள் என்றே அழைத்தார் என்பதைக் கூறி, தான் காட்டிக்கொடுக்கப்பட்ட வேளையிலும், யூதாசை நோக்கி, ”தோழா, எதற்காக வந்தாய்?” என்றே இயேசு அவரிடம் பேசினார் என்பதைச் சுட்டிக்காட்டினார்.

துன்ப வேளைகளில் விலகிச் செல்வது நட்பு அல்ல, ஏனெனில், நாம் பாவம் புரிந்து, இறைவனைவிட்டு விலகிச் சென்றாலும், அவர் நமக்காக என்றென்றும் காத்திருக்கிறார் என்று கூறியத் திருத்தந்தை, நாம் அன்பிலும், நட்பிலும் நிலைத்திருப்பதற்குத் தேவையான வரத்தை இறைவன் நமக்கு வழங்குமாறு மன்றாடுவோம் என்று தனது டுவிட்டர் செய்தியில் கூறினார்.


| பக்கம் 04 | பக்கம் 08 | பக்கம் XX |
|---|---|---|
| தூய ஆவியார் பெருவிழா | உகல தொடர்பாடல் தினம் | மிகவும் இரக்கமுள்ள தாயே |


ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் குருக்களுக்கான புதிய நியமனங்கள் – 2018

கொழும்பு உயர் மறைமாவட்டத்தின் பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகை அவர்களால் இந்நியமனங்கள் 12.05.2018 அன்று சனிக்கிழமை வழங்கப்பட்டன. இவை 01.06.2018 தொடக்கம் அமுலாகும்.

## ஆயரின் பதிலாளர்கள்

| | | |
|---|---|---|
| 01. | அதிவண. அருட்பணி. தயா செல்டன் வெலிக்கடராச்சி | கொழும்பு மறைக்கோட்டம் (பங்குத் தந்தை – தெஹிவளை) |
| 02. | அதிவண. அருட்பணி. சிஷ்வான் டி குரூஸ் | நீர்கொழும்பு மறைக்கோட்டம் (தங்குமிடம் – தம்மிட்ட) |
| 03. | அதிவண. அருட்பணி. ஜோசப் பெற்றிக் பெரேரா | துறவிகளின் பொறுப்பாளர் (தங்குமிடம் – தூய திருத்துவ நடுநிலையம் பத்தரமுல்ல) |
| 04. | அதிவண. அருட்பணி. நிஹால் ஐவன் பெரேரா | அப்போஸ்தலிக்கபணி ஐ. கல்வி (பங்குத் தந்தை – பொரளை] |

## புதிதாக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்தந்தையர்கள் [உதவிப்பங்குத்தந்தை]

| | அருட்தந்தையர்களின் பெயர்கள் | பங்கு |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. நிரஞ்சன் மார்ஷல் பீரிஸ். | படல்கம |
| 02. | அருட்தந்தை. பிரசாத் ரங்கன பெரேரா. | பல்லன்சேனை |
| 03. | அருட்தந்தை. பெத்தும் சின்தக்க பெரேரா | கடோல்கெலை |
| 04. | அருட்தந்தை. ரன்ஜித் கிளமன்த்த எதிரிசிங்க. | தெஹிவளை |
| 05. | அருட்தந்தை. S.D சனத் உதார | ஹங்வெல்லை |
| 06. | அருட்தந்தை. யொஹான் ப்லெசி பர்னாந்து | அவிசாவளை |
| 07. | அருட்தந்தை. கிஹான் நிலுஷன் பர்னாந்து | செக்கடித்தெரு |
| 08. | அருட்தந்தை. சமில கிரிஷாந்த பர்னாந்து | பலங்கத்துறை |
| 09. | அருட்தந்தை. சுமேத பெத்தும் பொன்சேக்கா | வத்தளை |
| 10. | அருட்தந்தை. அமில மதுரங்க ஜயதிலக்க | தளுபொத்த |
| 11. | அருட்தந்தை. சமேஷ் அன்தனி போல்ட்சிங் | கொட்டாஞ்சேனை |
| 12. | அருட்தந்தை. ஹிருஷான் ஹசன்த்த பர்னாந்து | பெரியதெரு |

## உதவிப் பங்குத் தந்தையர்கள்

| | | |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. T.S. செபஸ்ரியன் சுதர்ஷன் | கடற்கரைத்தெரு |
| 02. | அருட்தந்தை. ஹசங்க மாலன் மெண்டிஸ் | போலவளானை |
| 03. | அருட்தந்தை. பிலிசியன் நிஷால் மதுஷன் | சீதுவை |
| 04. | அருட்தந்தை. சுதர்ஷன சமிர ரொட்ரிக்கோ | கட்டுவாப்பிட்டிய |
| 05. | அருட்தந்தை. D. ராஜித லியானகே | தோப்பு |
| 06. | அருட்தந்தை. டெஷான் பிரியதர்ஷன | ஹல்பே |
| 07. | அருட்தந்தை. மோரியஸ் கிறிஸ்டியன் பீரிஸ் | கந்தவளை |
| 08. | அருட்தந்தை. கிஹான் பிரியசாந்த பீரிஸ் | தெஹியகாத்த |
| 09. | அருட்தந்தை. N. பிரசங்க ரொட்ரிக்கோ | கந்தானை |
| 10. | அருட்தந்தை. ஹர்ஷா டினீத் ராஜகருணா | கந்தானை |
| 11. | அருட்தந்தை. ரெக்ஸ் வின்சென்ட் ஜெயசீலன் | பட்டகமை |
| 12. | அருட்தந்தை. ஜோசப் சுராஜ் பீரிஸ் | வத்தளை |
| 13. | அருட்தந்தை. சுசன் இஷார பர்னாந்து | ராகமை |
| 14. | அருட்தந்தை. அஜித் சுரங்க அப்புஹாமி | ராகமை |
| 15. | அருட்தந்தை. டிலீப் சம்பத் சார்லஸ் | தளுகமை |
| 16. | அருட்தந்தை. ருவன்த குமார பர்னாந்து | தேவத்தை |
| 17. | அருட்தந்தை. துலிப் கமல் பிரியசாந்த | ராகமை (மருத்துவமனை நோயாளர் பராமரிப்பு) |
| 18. | அருட்தந்தை. ருவான் தாரக்க அல்விஸ் | பொரளை |
| 19. | அருட்தந்தை. ரவீன் தர்ஷன பர்னாந்து | தலங்கமை |
| 20. | அருட்தந்தை. அன்ரன் சமித் சொய்சா | ராவத்தவத்தை |
| 21. | அருட்தந்தை. செமான் விக்கிரமசிங்க | வில்லோரவத்தை |
| 22. | அருட்தந்தை. நிலந்த ரஞ்சுல பர்னாந்து | கடலானை |
| 23. | அருட்தந்தை. ஜனக்க ஜயமால் கொஸ்ரா | நிட்டம்புவ |
| 24. | அருட்தந்தை. நிலின் குமார பர்னாந்து | பாணதுரை |
| 25. | அருட்தந்தை. மரியதாஸ் ரெனால்ட் ரூபன் | கொட்டாஞ்சேனை (ஆவணி 2018ல் இருந்து) |

## பங்குத்தந்தையர்கள் – நியமிக்கப்பட்ட பங்குகள்

| | | |
|---|---|---|
| 01. | அதி.வண. அருட்பணி. தயா செல்டன் வெலிக்கடராச்சி | தெஹிவளை |
| 02. | அருட்தந்தை. ப்பீலிக்ஸ் சாந்த | கம்பஹா |
| 03. | அருட்தந்தை. சமந்த துசார பெரேரா | படேபொல |
| 04. | அருட்தந்தை. சுமித் குமார் பர்னாந்து | படல்கமை |
| 05. | அருட்தந்தை. பிரசாத் பெரேரா | மாக்கவிட்ட |
| 06. | அருட்தந்தை. என்ரன் கிஹான் குணதிலக்க | பட்டகமை |
| 07. | அருட்தந்தை. மனோரஞ்சன் டி சில்வா | வாவலை |
| 08. | அருட்தந்தை. நிலந்த ஹேஷான் பர்னாந்து | கலஎலிய |
| 09. | அருட்தந்தை. தரங்க சம்பத் பெரேரா | என்டேரமுள்ளை |
| 10. | அருட்தந்தை. கமல் நிஷாந்த பர்னாந்து | கிரிமெட்டியாகார |
| 11. | அருட்தந்தை. என்டன் ஜெயலத் பர்னாந்து | குருகுலாவை |
| 12. | அருட்தந்தை. ஹேமன்த உதயகுமார | எல்டெனிய |
| 13. | அருட்தந்தை. ஜோய் மரியரட்ணம் CMF | புதுச்செட்டித்தெரு |
| 14. | அருட்தந்தை. சமன்த்த குரேரா | புனித யாக்கோபு, முகத்துவாரம். |
| 15. | அருட்தந்தை. ஜூலியன் பெற்றிக் பெரேரா | கொள்ளுப்பிட்டி |
| 16. | அருட்தந்தை. நிமால் பொன்வீரா | சேதவத்தை |
| 17. | அருட்தந்தை. அன்ரனி மார்சிலியார் OMI | புதுக்கடை |
| 18. | அருட்தந்தை. டொரன்ஸ் பர்னாந்து | பாணதுரை |
| 19. | அருட்தந்தை. ரஞ்சன் பிரியதர்ஷன பர்னாந்து | நாகொட - களுத்துரை |
| 20. | அருட்தந்தை. S.A. டிரோன் அஜித் | வக |
| 21. | அருட்தந்தை. தினேஸ் பிரியசாந்த பர்னாந்து (சிரேஸ்ட) | தோப்பு |
| 22. | அருட்தந்தை. வசன்த்த பிரசன்ன பர்னாந்து | யட்டியன |
| 23. | அருட்தந்தை. பிரான்சிஸ் பொன்சேக்கா | காமராகொடை |
| 24. | அருட்தந்தை. பிரகீத் சாமர பெரேரா | ரத்மலானை (அங்கத்தவர் - அக்குவைனாஸ் கல்லூரி) |

## உயர்கல்வி நிலையங்கள் — நியமனம் பெற்ற இடங்கள்

| | உயர்கல்வி நிலையங்கள் | நியமனம் பெற்ற இடங்கள் |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. செரோன் டயஸ் | அதிபர் புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகம் - சிங்களம் (தங்குமிடம் ஜோன் மேரி வியானி குருமடம்) |
| 02. | அருட்தந்தை. லியோ கெமிலஸ் ஹெட்டியாராச்சி | இயக்குனர் புனித யோசேவ்வாஸ் இறையியல் கல்வியகம் - நீர்கொழும்பு |
| 03. | அருட்தந்தை. பேட்ரம் பர்னாந்து | பொருளாளர் - அக்குவைனாஸ் கல்லூரி |
| 04. | அருட்தந்தை பெனடிக் ஜோசப் | அங்கத்தவர் - அக்குவைனாஸ் கல்லூரி (தங்குமிடம் அக்குவைனாஸ் கல்லூரி) |
| 05. | அருட்தந்தை. நிரோஷன் பெரேரா | அங்கத்தவர் - சுபோதி நிறுவனம் |
| 06. | அருட்தந்தை ருவான் தேசப்பிரிய | அங்கத்தவர் - 16ம் ஆசீர்வாதப்பர் கத்தோலிக்க உயர்கல்வி நிறுவனம் |
| 07. | அருட்தந்தை. ரசிக்க பெரேரா | தங்குமிடம் 16ம் ஆசீர்வாதப்பர் உயர்கல்வி கத்தோலிக்க நிறுவனம். |

## கல்லூரிகள் — நியமனம் பெற்ற இடங்கள்

| | கல்லூரிகள் | நியமனம் பெற்ற இடங்கள் |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. ஜெயசாந்த சோவிஸ் | இயக்குனர் - புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல கிளை |
| 02. | அருட்தந்தை. பிரசாத் நிரஞ்சன் | இயக்குனர் புனித சூசையப்பர் கல்லூரி, எந்தேரமுள்ளை கிளை |
| 03. | அருட்தந்தை. சமித் குமார நெத்தசிங்க | அங்கத்தவர் - புனித சூசையப்பர் கல்லூரி, கொழும்பு 10. |
| 04. | அருட்தந்தை. அசித்த நிரஞ்சன் பர்னாந்து | அங்கத்தவர். - புனித சூசையப்பர் கல்லூரி, கடோல்கெலை |
| 05. | அருட்தந்தை. நதீக டில்ஷான் மாஞ்சநாயக்க | அங்கத்தவர் - புனித பேதுரு கல்லூரி, உடுகம்பொல |
| 06. | அருட்தந்தை. இந்துனில் சம்பத் பெரேரா | அங்கத்தவர் - புனித செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவை |
| 07. | அருட்தந்தை. டெனிஷ்கா இசிர ஜெயசூரிய | அங்கத்தவர் - லொயலா கல்லூரி, நீர்கொழும்பு |
| 08. | அருட்தந்தை. நொயல் ஷானக்க மென்டிஸ் | அங்கத்தவர் - புனித நிக்கோலஸ் சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு |
| 09. | அருட்தந்தை. மலிந்த சத்துரங்க சந்திறசிறி | அங்கத்தவர் - புனித. தோமையார் சர்வதேச பாடசாலை, நீர்கொழும்பு |
| 10. | அருட்தந்தை. வின்சென்ட் ஆஷ்லி | அங்கத்தவர் - தூய திருச்சிலுவை கல்லூரி, களுத்துரை |
| 11. | அருட்தந்தை. அமில ரவீந்த வன்டவோல் | அங்கத்தவர் - தூய திருச்சிலுவை கல்லூரி, களுத்துரை |

## மறைமாவட்ட நிறுவனங்கள் மற்றும் ஆன்மீகப் பணிகள்

| | | |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. செல்டன் டயஸ் | இயக்குனர் பொதுநிலையினர் மறைப்பணி நிலையம் |
| 02. | அருட்தந்தை. பிரசன்ன டில்றுக் பர்னாந்து | நீர்கொழும்பு மருத்துவமனை (தங்குமிடம் கடற்கரைதெரு) |
| 03. | அருட்தந்தை. அந்தனி பூபாலராயன் | விசுவாச உயிரூட்டல் குழு |

## குருமடங்கள் — நியமனம் பெற்ற இடங்கள்

| | குருமடங்கள் | நியமனம் பெற்ற இடங்கள் |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. பிரதீப் சமிந்திர பெரேரா | பொருளாளர், கண்டி தேசிய குருமடம் |
| 02. | அருட்தந்தை. லலீத் எக்ஸ்பெரிட்டஸ் | ஆன்மீக இயக்குனர், கண்டி தேசிய குருமடம் |
| 03. | அருட்தந்தை. வில்லம் இவான்ஸ் லியனாராய்ச்சி | தலைவர் - புனித அலோசியஸ் குருமடம் |
| 04. | அருட்தந்தை. சஷிக்க மனோஜ் ரொட்ரிகோ | அங்கத்தவர் - புனித அலோசியஸ் குருமடம் |

## மறைமாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் மற்றும் சிறப்புப் பணிகள்.

| | | |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. பீரிலி முத்துகுடாராச்சி (தங்குமிடம் ஆயர் இல்லம்) | இயக்குனர் - குருத்துவ உருவாக்கல் அமைப்பு ஒருங்கிணைப்பாளர், குருத்துவ அழைப்புக்கள், இணைப்பாளர் சிறைச்சாலை மறைப்பணி மற்றும் பங்கு புதுப்பித்தல் |
| 02. | அருட்தந்தை. கெமுனு டயஸ் ஜயவர்த்தன (தங்குமிடம் ஆயர் இல்லம்) | உதவி இயக்குனர் - கல்வி |

## வதிவிடக் குருக்கள்

| | | |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. பிரசாத் பொன்னம்பெரும | பம்புகுளிய (தோப்பு) |
| 02. | அருட்தந்தை. பிரியந்த சில்வா | மா-எலிய |
| 03. | அருட்தந்தை ஜோசப் அந்தனி பெரேரா | கொட்டாஞ்சேனை |
| 04. | அருட்தந்தை. க்ளீக்டஸ் பர்னாந்து | ராஜபக்ஷ வலவ்வ, துடெல்ல |
| 05. | அருட்தந்தை. கீதால் ஆன்ஸ்லி | புனித. செபஸ்தியார் கல்லூரி, மொறட்டுவ |
| 06. | அருட்தந்தை. நிஷால் செபஸ்ரியன் | சுதுவெல்ல, துடெல்ல |

## வெளிநாடு செல்லும் குருக்கள் [கல்வி / பணிகள் / விடுமுறை]

| | | |
|---|---|---|
| 01. | அருட்தந்தை. கிருஷான் ஜயசாந்த பர்னாந்து ஆனந்தன் | உரோமாபுரி |
| 02. | அருட்தந்தை. சுதம் பெரேரா | இங்கிலாந்து |
| 03. | அருட்தந்தை. அன்டன் தினேஷ் பிரியசாத | உரோமாபுரி |
| 04. | அருட்தந்தை. பிரகீத் S. டில்ஷன் | உரோமாபுரி |
| 05. | அருட்தந்தை. ஜூட் பீரிஸ் | விடுமுறை |
| 06. | அருட்தந்தை. சுனில் டி சில்வா | விடுமுறை |

**தகவல் : அருட்பணி. டெனிஸ்டன் சுபசிங்க**

**12 வைகாசி, 2018**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஞான ஒளி
GNANA OLI ඥාන ඔලි
இல. 02, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், கொழும்பு 08,
தொ.பே.இல : 0112695984, 0114899611
பெக்ஸ் : 0112692586
மின்னஞ்சல் : cgnanaoli@yahoo.com
இணையத்தளம் : www.colomboarchdiocesancatholicpress.com
20 வைகாசி, 2018 ஞாயிற்றுக்கிழமை.

# “மூவொரு இறைவனின் வாழ்வென்பது தந்தை மகன் தூய ஆவியின் அன்பு உறவாகும்”.

பரிசுத்த திருச்சபையானது இம்மாத இறுதியில் தூய ஆவியாரின் பெருவிழாவையும், மூவொரு இறைவன் பெருவிழாவையும், அன்னை மரியாள் எலிசபெத்தம்மாளை சந்தித்த தினத்தையும் நினைவுகூர்கின்றது.

கிறிஸ்து இவ்வுலகில் பிறந்தது முதல் அவர் மரித்து பிதாவிடம் செல்லும் வரையும் அவரது சொல், செயல் எல்லாமே தூய ஆவியை நோக்கியே இருந்ததை நற்செய்திகளில் ஆழ்ந்து நோக்கினால் புரிந்து கொள்ளலாம். அதுமட்டுமல்லாது பரிசுத்த ஆவியைப் பெற்றதன் பின்னர் திருத்தூதர்களின் போக்கை அவதானிக்கும்போது கிறிஸ்துவோடு கூட வாழ்ந்த காலத்தை விட வித்தியாசமான, வேகமான, துணிச்சலான நடவடிக்கைகளைக் காணக்கூடியதாகவிருக்கிறது. எனவே நாமும் எமது வாழ்வின் ஒவ்வொரு கணத்திலும் தூய ஆவியை பற்றிக்கொள்ளவேண்டும்.

“நீங்கள் போய் எல்லா மக்கள் இனத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை மகன் தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்” (மத்.28:19). திருமுழுக்கு எனும் அருளடையாளம் தண்ணீருக்குள் மட்டுமல்ல மாறாக நம்மை தமதிருத்துவத்திற்குள் மூழ்கடிக்கிறது. நாம் மூவொரு இறைவனுக்குள்ளும் மூவொரு இறைவன் நமக்குள்ளும் உறைகிறோம். எனவே கிறிஸ்தவ வாழ்வு என்பது மூவொரு இறைவனுக்குள் சங்கமிப்பதாகும். மூவொரு இறைவனின் வாழ்வென்பது தந்தை மகன் தூய ஆவியின் அன்பு உறவாகும். மூவொரு இறைவன் பற்றிய வெளிப்பாடு வெறும் கோட்பாடு அல்ல. மாறாக அது அன்புறவில் எழும் தெய்வீக வாழ்க்கை முறையாகும். மூவொரு இறைவன் மூன்று ஆட்களாக இருந்தாலும் ஒரே இறைத்தன்மையை கொண்டவர்கள். தனித்துவத்தை மதித்துச் சமத்துவம் பேணப்பட வேண்டும் என்பதே மூவொரு இறைவன் பெருவிழா கூறும் செய்தியாகும்.

திருச்சபையானது இம்மாதம் இறுதித்தினத்தன்று அன்னை மரியா எலிசபெத்தை சந்தித்த நாளை நினைவுகூர்கின்றது. அன்னை மரியாள் வானதூதரின் வாழ்த்தைப் பெற்றதும் தனது உறவினளான எலிசபெத் கருத்தாங்கி இருப்பது அறிந்து மகிழ்வுற்று அவரை சந்தித்து பணிவிடை செய்ய மலைநாட்டிற்கு விரைந்து செல்கின்றாள். இவ்வேளையில் அன்னை மரியாவும் கருவுற்றிருக்கின்றாள். தன்னிலை மறந்து செல்கின்றாள். எத்தனை தூய்மையான சுயநலமற்ற அன்பு. அன்னை மரியாளின் வாழ்த்தைக் கேட்டு எலிசபெத்தின் வயிற்றிலுள்ள குழந்தை துள்ளியதாக திருவிவிலியத்தில் வாசிக்கின்றோம். அவ்வாறாயின் அன்னை மரியாள் எவ்வளவு தூய்மை நிறைந்தவள் என்பதை காண்கின்றோம். ஒருவரை வாழ்த்துவதும் வணங்குவதும் என்பது எம்மிடம் இல்லாத உயர் பண்புகளை குறித்த மனிதர் கொண்டிருப்பதாலேயே ஆகும். “உம் வாழ்த்துரை என் காதில் விழுந்ததும் என் வயிற்றிலுள்ள குழந்தை பேருவகையால் துள்ளிற்று..” (லூக்.1:44). அந்தவகையில் இயேசுவின் தாயான அன்னை மரியாவும் வாழ்த்துதலுக்கும் வணங்குதலுக்கும் உரியவராக காணப்படுகின்றார். இவ்வாறு அன்னை மரியாவை நாமும் வாழ்த்தி வணங்கும்போது நமது வாழ்வும் மகிழ்ச்சி நிறைந்த வாழ்வாக மாறும்.

**இறையாசீருடன் ஆசிரியர்**



# உலக தொடர்பாடல் தினம் -2018

ஒவ்வொரு வருடமும் உலகத் தொடர்பாடல் தினமானது பெந்தக்கோஸ்தே தினத்திற்கு முன்வரும் ஞாயிறு நினைவுகூரப்படுகின்றது. அந்த வகையில் இவ்வருடம் உலக தொடர்பாடல் தினமானது வைகாசி மாதம் 13ம் திகதி அனுஷ்டிக்கப்பட்டது. அதனையொட்டி திருத்தந்தை பிரான்சிஸ் பின்வரும் செய்திகளை வெளியிட்டுள்ளார். “உண்மை உங்களை விடுதலையாக்கும்” (யோவா 8:32) என்ற இறைவார்த்தைக்கு ஏற்ப “பொய்யான செய்திகளை களைந்து உண்மையைக் கூறுவதே இதழியலாகும், சமாதானத்திற்காகவே இதழியல்” என்ற தொனிப்பொருளே அவரது செய்தியில் அடங்கியிருந்தது.

உலக தொடர்பாடல் தினத்தை உலகளாவிய ரீதியில் கொண்டாட, நினைவுகூர வேண்டுமென்ற நோக்கிலே இரண்டாம் வத்திக்கான் சங்கம் இதனை எடுத்தியம்பியது. (Inter Mirifica 1963) ஒவ்வொரு வருடமும் திருத்தந்தையின்



தொடர்பாடல் தினம் பற்றிய செய்தி தை மாதம் 24ந் திகதி வெளியிடப்படுவதுண்டு (இதழியலின் பாதுகாவலரான தூய பிரான்சிஸ் டி சேவின் திருநாளின் போது) அந்த வகையில் முதலாவது உலக தொடர்பாடல் தினமானது 1967ம் ஆண்டு வைகாசி மாதம் 7ந் திகதி திருத்தந்தை 6ம் சின்னப்பரின் செய்தியோடு தொடங்கியது. 52வது உலக தொடர்பாடல் தினத்தை இவ்வாண்டு நினைவுகூருகின்றோம்.

தொடர்பாடல் என்பது இறைவனின் திட்டத்தின் ஒரு பகுதியானது. இதனை நாம் எமது வாழ்வில் அனுபவிக்க வேண்டும். இதனை நாம் நாளாந்தம் அனுபவிக்க வேண்டும். உண்மையை, நன்மையை, அழகாவதை நாம் தொடர்பாடலின் மூலம் வெளிப்படுத்த வேண்டும். அதற்கு மாறாக, சுயநலத்தோடும், பெருமையோடும் அதனைக் கையாண்டால் இதனால் அழிவே ஏற்படும். இதனையே நாம் உலகப் படைப்பின் தொடக்கத்தில் காயீன் ஆபேலின் சம்பவத்தின் மூலமும், பாபேல் கோபுர நிகழ்வின் மூலமும் அறியலாம். (தொ.நூ 4:4-16, 11:1-2) இறைவனின் திட்டத்திற்கு நாம் பிரமாணிக்கம் உள்ளவர்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் எமது தொடர்பாடல் உண்மை உள்ளதாகவும், பொறுப்புள்ளதாகவும் மாறும்.

இன்றைய மாறிவரும் அதிவேக தொடர்பாடல் வலயத்தின் மூலம் கூடுதலான வேளைகளில் பொய்யான தகவல்கள் பரிமாறப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எனவே இதுபற்றி ஆழமாகச் சிந்திக்க நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். எனவே இதைப்பற்றி இவ்வருடத் தொடர்பாடல் தினத்திலே நான் சில விடயங்களை முன்வைக்க விரும்புகிறேன். இது எனக்கு முன்பிருந்த திருத்தந்தையர்களாலும் வலியுறுத்தப்பட்டிருக்கின்றன. திருத்தந்தை 6ம் சின்னப்பர் 1977ம் ஆண்டு தனது செய்தியிலே தொனிப்பொருளாக “சமூகத் தொடர்பாடலானது உண்மையை வெளிப்படுத்தும் பணியில் ஈடுபட வேண்டும்” என்பதைக் கொண்டிருந்தார். அதை இன்னும் மெருகூட்டும் வகையிலே பொய்யான செய்தியை கண்டறிவதோடு இதழியலின் மேன்மையை மீண்டும் கண்டுணர்ந்து அதன்மூலம் இதழாசிரியர் தனது தனிப்பட்ட பொறுப்பை, கடமையை சரிவர செய்வதோடு உண்மையை எடுத்துரைக்கும் வகையிலே செயற்பட அழைத்து நிற்கின்றேன்.

## 1. பொய்யானை செய்தி என்பது என்ன?

இது பற்றி பல உரையாடல்களும், விவாதங்களும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. இருப்பினும் பொதுவாகப் பார்த்தால் மிகவேகமாக இணையத்தளங்களிலும், சமூகவலய அமைப்புக்களிலும் பரவும் போலியான தரவுகள் வாசகர்களை மிகவும் உணர்வுபூர்வமான நிலைமைக்கு ஆளாக்குகின்றன. அரசியல், பொருளாதார நிலைமைகளின் மாற்றத்துக்கு வாசகர்களை இவை அடிபணிய வைக்கின்றன. இதன் விளைவு பழிவாங்கும் உணர்வு, குதர்க்கத்துக்கு உள்ளாகும் நிலை, முரட்டுப் பிடிவாதம் என்பவற்றுக்கு இந்த பொய்யான செய்தி வழிசமைக்கும்.

## 2. எப்படி நாம் பொய்யான செய்தியை இனம் காண்பது?

இந்த பொறுப்புணர்வில் இருந்து யாருமே சாட்டுப் போக்குச் சொல்ல முடியாது....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

## உண்மை உறைக்கும் கமிலஸ்




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தூயஆவியார் பெருவிழா

உலகில் பிறக்கின்ற ஒவ்வொரு மனிதனுக்கும், ஒரு துணை என்பது மிகவும் அவசியம். குடும்பத்தில் கணவனுக்குத் துணை மனைவி, மனைவிக்குத் துணை கணவன். குழந்தைக்கு துணை பெற்றோர்கள். பாடசாலையில் மாணவர்களுக்கு துணை ஆசிரியர்கள்.

இவ்வாறு துணையாளர்களின் வழியில் வாழ்கின்றவர்கள் வாழ்வில் பாதுகாப்பைப் பெற்று எல்லா நலன்களையும், எல்லா வெற்றியையும் அடைவர். ஆகவே துணையாளர்கள் வழிநடத்தல், ஆலோசனைகள் கூறுதல், பாதுகாப்பு அளித்தல், நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்ளுதல் இவையெல்லாம் ஒரு மனிதனின் சமூக வாழ்வில் தேவையானவை.

அதேபோல ஆன்மீக வாழ்விலும், ஒரு மனிதனுக்குத் துணை என்பது இன்றியமையாதது. அந்தத் துணையாளர் வேறுயாருமல்லர். தூய ஆவியானவர்தான். இவரே திருத்துவத்தின் மூன்றாம் ஆளாகிய கடவுள். இந்த துணையாளர்கள் தான் ஒரு மனிதனை ஆன்மீக வாழ்வில் வழிநடத்தி ஆலோசனை கூறி, நல்ல பண்புகளைக் கற்றுக் கொடுத்து, தீமைகளிலிருந்து பாதுகாத்து பராமரிப்பவர். இவரைப் பற்றி தான் இயேசு அழகாகக் கூறியிருக்கின்றார்.


"உங்களோடு என்றும் இருக்கும்படி மற்றொரு துணையாளரை உங்களுக்குத் தருமாறு நான் தந்தையிடம் கேட்பேன். தந்தை அவரை உங்களுக்கு அருள்வார். அவரே உண்மையை வெளிப்படுத்தும் தூய ஆவியார்" (யோவா. 14:16-17).

இன்று நாம் தூய ஆவியாரின் வருகையின் விழாவைக் கொண்டாடுகின்றோம். இயேசு வாக்குறுதியிட்டு சொன்னது அவர் விண்ணகம் சென்ற பத்தாவது நாள் அதாவது அவர் உயிர்த்த ஐந்தாம் நாள் நிறைவேறியது.
தூய ஆவியானவர் நெருப்பு நாவடிவில் அன்று கூடியிருந்த திருத்தூதர்கள் மீது இறங்கினார். அவரது வருகையானது பயந்து நடுங்கிக் கொண்டிருந்த திருத்தூதர்களுக்கு தைரியத்தையும் வீரத்தையும், துணிச்சலையும் கொடுத்தது. அவரது வருகை படிக்கவும், பேசவும் தெரியாத மீனவர்களாகிய திருத்தூதர்களுக்கு பன்மொழிப் புலமைப் பெற்று துணிவாகப் பேசும் ஆற்றலை அளித்தது.

அந்த ஆவியின் வழியில் அவர்கள் நடந்தபோது, பல அற்புதங்களையும், அதிசயங்களையும் நிகழ்த்தினார்கள். அன்று பெந்தகோஸ்தே விழாவிற்கு வந்திருந்த எண்ணற்ற அயல் நாட்டினர் தத்தம் மொழிகளில் இறை நற்செய்தியைக் கேட்டனர். பலர் இயேசுவில் விசுவாசம் கொண்டு திருமுழுக்குப் பெற்றார்கள்.

இதே தூய ஆவி திருத்தூதர் பிலிப்புவை வழிநடத்தி எத்தியோப்பிய அமைச்சனை திருமுழுக்குப் பெற வைத்தார். தூய ஆவியார் பிலிப்பிடம் "நீ அந்த தேரை நெருங்கிச் சென்று அதனோடு கூடவே போ" (தி.ப 8:29) என்றார்.

தூய ஆவியானவர் நமக்குக் கொடைகள் ஏழும், கனிகள் பன்னிரெண்டும், வரங்கள் பலவற்றையும் தந்து நம்மை வழிநடத்துகிறார். அவர் வழியில் செல்லும் போது, வாழ்வில் மகிழ்ச்சி, அமைதி, துணிவு, தைரியம் இவைகளைப் பெறுகிறோம். இதையே பவுலடிகளார், "அருட்கொடைகள் பலவகையுண்டு, ஆனால் தூய ஆவியார் ஒருவரே" (1கொரி. 12:4) என்று சொல்லி



ஆவியின் வரங்களைப் பற்றி தெளிவாக எடுத்துரைக்கின்றார்.

### தூய ஆவியாரைப் பற்றி இவர்கள்:-

தூய ஆவியின் கொடைகளைப் பெற்றவர்கள் உறக்கத்திலும் முன்னேறிச் செல்வார்கள்.

**சகோ. லோரன்ஸ்**

"தூய ஆவியாரின் உடனிருப்பு இல்லையெனில் ஒருவருக்கு குறிக்கோள் இருக்காது. தேர்ந்து தெளிதல் இருக்காது, புனிதம் இருக்காது, தூய்மை இருக்காது."

W.A. **கிறிஸ்வேல்**

தூய ஆவியானவர் ஓடும் நீரைப்போல உள்ளார். காரணம் ஓடும் நீரில் அசுத்தம் இருக்காது. சுத்தம் இருக்கும், நாற்றம் இருக்காது, மணம் வீசும், செத்தவைகள் இருக்காது, உயிரானவை இருக்கும். கலக்கம் இருக்காது, தெளிந்தவைதான் இருக்கும். இந்த ஆவியின் அருவியிலே மூழ்கி எழுகிறவன் புத்துணர்ச்சியும், புதுத் தெம்பும், புது வாழ்வும் கொண்டிருப்பார்.

எனவே பெந்தகோஸ்தே பெரு விழாவைக் கொண்டாடும் நாமும் ஆவியில் மூழ்கி ஆவியின் கொடைகளைப் பெற்று ஆவியில் தேர்ந்து தெளிந்து அவர் வழியில் செல்வோம்.

# ஆதிமுதல் அனைத்தையும் ஆளும்

**ஆண்டவர் யேசுவின் அன்பின் அருக்கொடையே!**
**ஆதிமுதல் அனைத்தையும் ஆண்ட அருளின் திருவுருவே!**
**ஆவியாய் தேவ ஆவியாய் அப்போஸ்தலர் மேல் எழுந்த அக்கினி நாக்கே!**
**ஆண்டருளும் இவ்வுலகை ஆண்டருளும், அனைத்தையும் உமதாய் ஆக்கியருளும்!**

**உயிருக்குயிராய் உண்மையின் வடிவாய் வருவீரே!**
**உமதாற்றல் பொழியவும், உன் உறவை வளர்த்திடவும் வருவீரே!**
**உன்னத வல்லமையை உலகிற்கு அளிக்க உவப்புடன் வருவீரே!**
**உலர்ந்து போன உள்ளங்களுக்கு உயிர்தரும் ஆவியாய் வருவீரே!**

**அருள் மழை பொழிய ஆனந்த மழையாய் வாருமையா!**
**அடியோர் எம்மை ஆட்கொண்டு ஆள வாருமையா!**
**அன்பின் வடிவமாய் அமைதியின் ஊற்றாய் வாருமையா!**
**அன்றும் இன்றும் என்றும் எழுந்தருளி அடியோரை புதுப்பிக்க வாருமையா!**

**மாயைகளால் மயக்கிடும் உலகின் மயக்கங்கள் தீர்ந்திட வருவீரே!**
**மனத்தின் புண்களை ஆற்றி எம்மை மகிழ்ச்சியில் நிரப்பிட வருவீரே!**
**மாசுகளை கழுவி மனம் வருந்தும் காயங்களை ஆற்றிட வருவீரே!**
**மங்கா மகிமையில் மனிதம் வாழ்ந்திட மாண்புடன் எழுந்து வருவீரே!**

**தெய்வீகக் கொடை ஏழும் எமக்கீந்திட எழுந்தருளுமையா**
**தேவனின் திருவடிவாய் தேடிவந்து ஆளுமையா**
**தெய்வமே, மூவொரு இறைவனே முடிவில்லா பேரொளியே**
**தேசமெங்கும் உன் திருவருள் பொழிந்து பரிசுத்தமாக்கிட வாருமையா!**

# பரமனின் ஆவியே வருக!!



**தந்தையும் தாயுமாய், தலைவனும் வேந்தனுமாய் வாருமையா**
**தந்தையின் அரசை நிலை நாட்ட தரணிக்கு எழுந்து வாருமையா**
**தவறிடும் உலகில் வாழும் தாய் திருச்சபையை தாய் போல் காத்திட வாருமையா,**
**தாசர்கள் நாம் மாசின்றி வாழ்திட வழியும் ஒளியுமாய் வாருமையா!**

**புதுப்படைப்பாய் மாறி புத்துயிர் பெற புத்தொளியை எமக்கருளுமையா**
**புனிதம் சிறந்தோங்க, புவியெங்கும் உன்னொளி பரப்பிட வந்தருளுமையா**
**புண்ணியங்கள் பெருகிட உம் புனித அரசு செழித்தோங்க எழுந்தருளுமையா**
**புதுவாழ்வு வாழ, புவியில் மானிடர் சாட்சிய வாழ்வு வாழ, வாருமையா!**

**வந்தருள்வாய் வள்ளலே, வரம் தருவாய் தூய ஆவியே**
**வரவேண்டும் வரமருள்வாய், வைகறையின் ஒளியாம் தூய ஆவியே**
**வரங்கள் அனைத்தும் ஈந்து எம்மை வாழச்செய்வாய் தூய ஆவியே**
**வந்தனைகள் பலபுரிந்து உம்மை வாழ்த்தினோம், வரமருள்வாய் தூய ஆவியே!**
**தூய ஆவியே! திருநல் ஆவியே! வருவாய் வரமே அருள்வாய்!**

**தூய ஆவியே உம்மை கூவியழைக்கிறோம், எழுவாய் வரமே அருள்வாய்!**
**தூய ஆவியே தேவ ஆவியே! துணைதந்து காப்பாய் வரமே அருள்வாய்!**
**தூய ஆவியே பரிசுத்த ஆவியே! பரிசுத்தமாய் நாம் வாழ**
**எம்மை ஆட்கொண்டு வழிநடத்தும் வல்லப ஆவியே வரமே அருள்வாய்!**

*அருட்சகோதரி. டெலாறோஸ். அ.கா*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தூய ஆவியால் நிரப்பப்படுவதற்கும் பகிர்வதற்கும்

இயேசுவுக்காகக் குறிக்கப்பட்ட ஒரு மனிதர், ஒரு கிறிஸ்தவர் சாதாரணக் கிறிஸ்தவ வாழ்க்கையில் நிறைவடையக் கூடாது. கடவுள் அவனிடமிருந்து அதிகமாக காரியங்களை எதிர்பார்க்கின்றார். கடவுள் நம்மில் வசிக்கிறார் என்னும் உண்மையில் விழிப்புடன் இருத்தல் வேண்டும். நாம் தெய்வீக அனுபவம் கொண்ட மக்களாய் இருக்கவேண்டும் என்பதே இதன் பொருள். நம்முள் உள்ள தெய்வீக பிரசன்னத்தைப் பற்றி இயேசு நமக்கு நினைவூட்டுகிறார். அதற்கு இயேசு பின்வருமாறு கூறினார். "என்மீது அன்பு கொண்டுள்ளவர் நான் சொல்வதைக் கடைப்பிடிப்பார். என் தந்தையும் அவர்மீது அன்பு கொள்வார். நாங்கள் அவரிடம் வந்து அவருடன் குடிகொள்வோம்" (யோவா 14:23).

தொடக்கநூலில் நாம் இவ்வாறு வாசிக்கின்றோம். "அப்பொழுது ஆண்டவராகிய கடவுள் நிலத்தின் மண்ணால் மனிதனை உருவாக்கி, அவன் நாசிகளில் உயிர் மூச்சை ஊத, மனிதன் உயிர் உள்ளவன் ஆனான்" (தொ.நூ 2:7) பூமியில் பலவிதமான வாழ்க்கை முறைகள் இருக்கிறது. மனிதனுடைய முடி, நகங்கள் போன்றவை பூமியில் உள்ள தாவரயினத்தை ஒத்துள்ளது. மனித உடல் அமைப்பு, மிருகங்களின் உடல் அமைப்பை ஒத்துள்ளது. எனவே, நாம் மனிதனை பொதுவாக அறிவுள்ள மிருகம் என்று கூறுகிறோம்.

எனினும், நாம் கடவுளின் குழந்தைகளாக இருப்பதினால், தாவர மற்றும் மிருக அமைப்பில் இருந்து வெகுதூரத்தில் இருக்கிறோம். நம்முள் கடவுளின் ஆன்மா உள்ளது. பரிசுத்த ஆவி நம்முள் வசிக்கிறார். நாம் கடவுளின் ஆலயம் என்பது சாதாரண விஷயம் அல்ல. "கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது. நீங்களும் அவரோடு இணைந்து தூய ஆவி வழியாகக் கடவுளின் உறைவிடமாகக் கட்டப்பட்டு வருகிறீர்கள் (எபே 2:21-22).

நமது ஆதிபெற்றோர்கள் ஏதேன் தோட்டத்தில் கடவுளுடன் இணைந்து இருந்தபொழுது எல்லா ஆசீர்வாதங்களையும் மகிழ்ச்சியுடன் அனுபவித்தார்கள். வார்த்தைக்கூறுவதுபோல தினமும் மாலை கடவுள் அவர்களுடன் இணைந்து உலாவிவந்தார். அவர்கள் தோட்டத்தில் எல்லாவிதமான சுதந்திரத்தைப் பெற்றிருந்தாலும் ஒரே ஒரு காரியத்தை செய்ய கடவுள் தடைசெய்திருந்தார். "ஆண்டவராகிய கடவுள் மனிதனிடம் தோட்டத்தில் இருக்கும் எந்த மரத்திலிருந்தும் உன் விருப்பம் போல் நீ உண்ணலாம். ஆனால் நன்மை தீமை அறிவதற்கு ஏதுவான மரத்திலிருந்து நீ உண்ணும் நாளில் சாகவே சாவாய்" என்று கட்டளையிட்டுச் சொன்னார் (தொ.நூ 2:16-17) என்று அவர் கூறியிருந்தார்.

ஆனால் ஆதாமும் ஏவாளும் கடவுளுடைய கட்டளையை மறந்து கடவுள் வேண்டாம் என்று கூறியதைச் செய்தார்கள். இவ்வாறு கடவுளுடன் உள்ள நட்புறவை இழந்தார்கள். ஆண்டவரின் பிரசன்னத்திலிருந்து தூரமாய் அகற்றப்பட்டார்கள். அதன் பிறகு நிகழ்ந்த சம்பவங்கள் நம்மால் நம்பமுடியாத சம்பவங்களாகவும் மனதில் அச்சத்தைத் தூண்டுபவையாகவும் இருந்தன. கடவுள் மனிதனுக்கு தெய்வீகத் தன்மையை மீண்டும் தர மனித உருவெடுத்தார். தனது கீழ்த்தரமான கீழ்ப்படியாமையால் இழந்த தெய்வீகத்தன்மையை மனிதனுக்கு மீண்டும் கொடுக்க கடவுள் மனித உருவெடுத்தார்.

"என் வார்த்தையைக் கேட்டு என்னை அனுப்பியவரை நம்புவோர் நிலை வாழ்வைக் கொண்டுள்ளனர். அவர்கள் தண்டனைத் தீர்ப்புக்கு உள்ளாக மாட்டார்கள். ஏற்கனவே சாவைக் கடந்து வாழ்வுக்கு வந்துவிட்டார்கள் என உறுதியாக உங்களு-க்குச் சொல்கிறேன் (யோவா 5:24) என்று இயேசு கூறுகின்றார்.

தூய ஆவியால் புதுப்பிக்கப்பட்ட மனிதனின் வாழ்க்கை அவரால் வழிநடத்தப்படுகிறது. இவ்வாறு புதுப்பிக்கப்பட்ட அந்த மனிதர், தான் விரும்புவதுப் போல் எல்லா காரியங்களையும் செய்ய முடிவதில்லை. "நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள். ஆனால் தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள்" (உரோ 8:13-14). நாம் ஆண்டவரின் ஆவியால் வழிநடத்தப்பெற வேண்டும் என்று முழு மனதோடு விரும்பினால் நமது முழு வாழ்க்கையையும் - ஆன்மா, உடல், எண்ணங்கள், செயல்கள் அனைத்தையும் கடவுளுக்கு சமர்ப்பிக்க வேண்டும். நமது கனவுகள் அவரது கனவாக இருக்க வேண்டும் சுருங்கக் கூறின் நாம் இயேசுவை நமது ஆன்மாவிலும், மனதிலும் அணிந்து கொள்ள வேண்டும். எனவே புனித பவுல் கூறுகிறார் "ஆகவே இனிமேல் நாங்கள் எவரையும் மனித முறைப்படி மதிப்பிடுவதில்லை, முன்பு நாங்கள் கிறிஸ்துவையும் மனித முறைப்படிதான் மதிப்பிட்டோம். ஆனால் இப்போது அவ்வாறு செய்வதில்லை (2கொரி 5:16). வார்த்தை மறுபடியும் கூறுகிறது "உண்மையான ஒரே கடவுளாகிய உம்மையும் நீர் அனுப்பிய இயேசு கிறிஸ்துவையும் அறிவதே நிலைவாழ்வு (யோவா 17:3)

இங்கு யோவான் உலகம் சார்ந்த அறிவை பற்றிப் பேசவில்லை. அந்த அறிவு மட்டும் இருந்தால் நிலைவாழ்வைப் பெறமுடியாது. உதாரணமாக அப்போஸ்தலர்கள் தொடக்க காலத்தில் இயேசுவை அறியத் தங்களின் கூரிய அறிவை உபயோகித்தார்கள். ஆனால், அவர்களுக்குத் தலையும் வாலும் புரிபடவில்லை. "இயேசு அவரிடம் கூறியது. பிலிப்பே, இவ்வளவு காலம் நான் உங்களோடு இருந்தும் நீ என்னை அறிந்து கொள்ளவில்லையா? என்னைக் காண்பது தந்தையைக் காண்பது ஆகும். அப்படியிருக்க, "தந்தையை எங்களுக்குக் காட்டும் என்று நீ எப்படிக் கேட்கலாம்?" (யோவா 14:9) என்று பிலிப்பிடம் இயேசு கூறினார்.

ஆண்டவருடைய உயிர்த்தெழுதலுக்குப் பின் குறிப்பாக பெந்தக்கோஸ்து நாளிற்குப் பின் அப்போஸ்தலர்களால் இயேசுவை ஆவியானவரின் மூலம் புரிந்துக்கொள்ள முடிந்தது. எனவே இன்றைய வாழ்க்கையில் நம்முடன் வாழும் இயேசுவை புரிந்துக் கொள்ளவும், அனுபவிக்கவும், அவரது வெளிப்பாடுகளைப் பற்றிய அறிவுள்ள மனிதர்களாக நாம் இருக்கவேண்டும். எனவே புனித பவுல் கூறுகிறார். "சகோதர சகோதரிகளே, உங்களுக்கு ஒன்று தெரிவிக்க விரும்புகிறேன். நான் உங்களுக்கு அறிவித்த நற்செய்தி மனிதரிடமிருந்து வந்ததல்ல, எந்த மனிதரிடமிருந்தும் நான் அதைப் பெற்றுக் கொள்ளவில்லை. எந்த மனிதரும் அதை எனக்குக் கற்றுக்கொடுக்கவில்லை. மாறாக இயேசு கிறிஸ்து அருளிய வெளிப்பாட்டின் வாயிலாக அது எனக்குக் கிடைத்தது" (கலா 1:11-12)

**"நீங்கள் ஊனியல்புக்கு ஏற்ப வாழ்ந்தால், சாகத்தான் போகிறீர்கள். ஆனால் தூய ஆவியின் துணையால், உடலின் தீச்செயல்களைச் சாகடித்தால், நீங்கள் வாழ்வீர்கள். கடவுளின் ஆவியால் இயக்கப்படுகின்றவர்களே கடவுளின் மக்கள் (உரோ 8:13-14).**

நாம் கடவுளோடு இணைந்து செபத்தில் இருக்கும்போது தூய ஆவியின் செயல்பாடுகளை நாம் உணர்ந்து கொள்ள முடியும். தூய ஆவியானவர் நம்முடன் பேசுவதைப் புரிந்து கொள்ளவும், அதன் அர்த்தத்தை முழு ஆழத்தோடு உணர்ந்துக் கொள்ளவும் நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கின்ற வேலைகளைச் செய்ய தைரியத்தை பெறவும் தொடர்ந்து செபிக்க வேண்டும்.

"இப்போதும் தூய ஆவியாருக்குக் கட்டுப்பட்டு நான் எருசலேமுக்குச் செல்லுகிறேன். அங்கு எனக்கு என்ன நேரிடுமென்று தெரியாது. சிறை வாழ்வும், இன்னல்களும் எனக்காகக் காத்திருக்கின்றன என்று தூய ஆவியார் ஒவ்வொரு நகரிலும் என்னை எச்சரித்து வருகின்றார். (தி.ப 20:22-23) என்று திருத்தூதர் பணியில் பார்க்கின்றோம்.

புனித பவுல் அவருக்கு நேரப்போகிறவற்றை நினைத்து ஆவலுடனோ, கவலையுடனோ, கோழைத்தனமாகவோ ஒரு பொழுதும் இருந்ததில்லை. எப்பொழுதும் தூய ஆவியார் அவரிடம் தூண்டும் செயல்களையே அவர் செய்து வந்தார். நாமும் இயேசு அனுபவத்தைப் பெறவேண்டும். "உங்களை அழைக்கும் அவர் நம்பிக்கைக்குரியவர். அவர் இதைச் செய்வார்" (1 தெச 5:24)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தமதிரித்துவத்தின் திருவிழா

## மூவொரு கடவுள்

### நம்பிக்கை ✝ அடைக்கலம் ✝ பாதுகாப்பு

உலகில் மூன்றெழுத்து சொற்களுக்கு அதிக கவர்ச்சியும் அதிக நாட்டங்களும் உண்டு. அன்பு, அமைதி, அழகு இவை மூன்றும் ஒரு மனிதனுக்குள் இருந்துவிட்டால் அவனே சிறப்புடையவன்.

இன்று நாம் கொண்டாடும் திருத்துவ திருவிழாவும், இம்மூன்றைப் பற்றித்தான் பேசுகிறது. மூன்று என்பது ஒரு பொருளோ, சொல்லோ கிடையாது. மாறாக மூன்று ஆட்கள். இந்த மூன்று ஆட்களும் முறையே தந்தை, மகன், தூய ஆவி என்று அழைக்கப்படுகின்றனர். ஆனால் மூவரும் ஒருவராக இருப்பதுதான் கிறிஸ்தவ விசுவாசத்தின் சாரம் அது எப்படி என்று பார்ப்போமா?

அன்பு, அமைதி, அழகு ஆகிய மூன்றும், தனித் தனி பண்புகளாக இருந்து எப்படி ஒரே மனிதனிடத்தில் நிறைந்திருக்கின்றனவோ, அதுபோலவே, அழகான உலகைப் படைத்த தந்தையும், அன்பே உருவாக விளங்கும், மகனும் அமைதியையே உலகில் நிலை நாட்டுபவருமான தூய ஆவியானவரும் ஒரே ஆளாக இருக்கின்றார்கள்.

அன்பும், அமைதியும் அழகும் ஒரு மனிதனிடத்தில் எப்படி வெளிப்படுகின்றனவோ, அதுபோலவே, தந்தையும், மகனும், தூய ஆவியானவரும், ஒரே ஆவியானவரும், ஒரே கடவுளின் மூன்று வெளிப்பாடுகள். படைப்பின் அழகை வெளிப்படுத்தும்போது, தந்தையாகவும், அன்பை வெளிப்படுத்தும்போது மகனாகவும், ஆற்றலை வெளிப்படுத்தும்போது தூய ஆவியானவராகவும் செயல்படுகின்றார்கள்.

இந்த மூவொரு கடவுள் நற்செய்தியில் இரண்டு முக்கிய அனுபவங்களில், நிகழ்வுகளில் வெளிப்படுகின்றார். இயேசுவின் திருமுழுக்கு அனுபவத்திலும் உருமாற்ற அனுபவத்திலும், தந்தையாகிய இறைவன், தன் மகனைப் பற்றிய சாட்சியத்தை தூய ஆவியானவரின் வழியாக வெளிப்படுத்துகின்றார்.

**“என் அன்பார்ந்த மகன் நீரே, உம் பொருட்டு நான் பூரிப்படைகிறேன்” (லூக் 3:22)**

**“இவரே என் மைந்தர். நான் தேர்ந்துகொண்டவர் இவரே, இவருக்குச்செவிசாயுங்கள்” (லூக்9:35)** இதைவிட மேலாக இயேசுவே இம்மூவரைப் பற்றிப் பேசுகிறார் **“எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள். தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள்” (மத் 28:19)**

மூவெரு கடவுளின் பெயரால் நாம் அனைவரும் திருமுழுக்குப் பெற்றிருக்கின்றோம். எனவே நம்மில் இம்மூவொரு கடவுளின் தன்மையாகிய அழகு, அன்பு, அமைதி குடிகொள்ள வேண்டும். படைப்புக்களுக்கு அன்பு செலுத்தி அப்படைப்புக்களை அமைதியில் வாழச் செய்வதே நமது கடமை. நாமும் எமது செபங்களின் தொடக்கத்திலும், முடிவிலும் இதையே சொல்லுகின்றோம். திருச்சபையும் திருப்பலியின் தொடக்கத்தில் வாழ்த்தொலியாக இதை கூறுகிறது. ஆகவே, தந்தையாகிய இறைவன் நம்மீது நம்பிக்கை கொண்டு, மகனாகிய இயேசுக்கிறிஸ்துவில் அடைக்கலம் புகுந்து, தூய ஆவியானவரின் பாதுகாப்பில் வாழும்போது மூவொரு கடவுளின் அருளை நாம் அடைகின்றோம்.

---

# ஏழைகளுக்கு உதவி செய்வோம்



## குடும்பம் பெற்றோர் பிள்ளை உறவு

155



**“எமது குடும்பங்களில் நாம் எப்படி வாழ்கிறோம்? எமது பிள்ளைகளுக்கு இறை அச்சத்தைக் கொடுக்கிறோமா?”**

ஆமோஸ் இறைவாக்கினரின் காலத்தில் மூன்று வகையானோருக்கு இறைவாக்குரைத்தார். (ஆமோஸ் 6.·.1-10) நீதி மன்றங்களில் ஏழைகளை விலைக்கு வாங்கினர். அதாவது ஏழைகளை விலைக்கு வாங்கும் சந்தையாக நீதிமன்றங்கள் இருந்தன. அதேபோன்று பணக்காரர்கள் ஏழைகளின் காணிகளை வாங்கிப் பெரிய பெரிய கட்டிடங்களைக் கட்டினார்கள். நகரங்களில் வசதிகளைக்கூட்ட கிராமங்கள் அழிக்கப்பட்டன. மக்கள் விவசாயம் செய்யவும் நிலம் இல்லாது இருந்தனர். அது மட்டுமல்ல ஆலயங்களில் குருக்கள் எல்லோருக்கும் காட்டும் விதத்தில் ஆடம்பரமாக வழிபாடுகளைச் செய்தனர்.

இதைக் கவனித்த ஆமோஸ் ஏழைகளை மறப்பது இறைவனை மறப்பதற்குச் சமமாகும் என்றார். அங்கு யானைத்தந்தங்களில் கட்டில்கள் செய்து பஞ்சணை மெத்தையில் படுத்துறங்கினர். மல கூடத்தில் அமர்ந்திருக்கும் இருக்கைகளைத் தங்கத்தால் செய்தனர். ஆனால் ஏழைகளோ சேரிகளில் வாழ்ந்தனர்.

“பெருமை வாய்ந்தவர்களே! உங்களுக்கு ஐயோ கேடு. தீய நாளை இன்னும் தள்ளி வைப்பதாக நீங்கள் நினைக்கிறீர்கள். ஆனால் வன்முறையின் ஆட்சியை அருகில் கொண்டு வருகிறீர்கள். தங்கத்தாலான கட்டிலில் பஞ்சணைமீது சாய்ந்து கிடப்போருக்கும் ஐயோ கேடு. கோப்பைகளில் திராட்சை இரசம் குடிக்கிறார்கள். உயர்ந்த நறுமண எண்ணெயைத் தடவிக் கொண்டிருக்கிறார்கள். ஆகையால் தான் முதலில் நாடுகடத்தப் படுவார்கள். அவர்களது இன்பக்களிப்பும் இல்லாது ஒழியும்” என்று ஆமோஸ் கூறுகிறார்.

ஏழைகளை உருவாக்கம் முறைமைக்கு வேதாகமத்தில் எதிர்ப்புத் தெரிவிக்கப்படுகிறது. நகரமயமாக்கலில் ஏழைகளுக்கு இடமில்லாமல் அவர்கள் சேரிப்புறங்களில் வாழ நேரிடும். இப்படிப்பட்ட சூழலில் செல்வந்தருக்கு அகங்காரம் உருவாகும். அதேபோன்று செல்வந்தருக்கு அதிக காணிகளும் சொத்துக்களும் இருக்கும்.

“மம்மோன்” என்பது சொத்தை இறைவனாக்கி முதலாம் கற்பனைக்கு எதிராகப் பாவம் செய்தனர் என்பதே அர்த்தம். இறைவனில் பாதுகாப்பைத் தேடாது சொத்து செல்வத்தில் மட்டும் பாதுகாப்பைத் தேடுவது தவறாகும் என்பது தெரிகிறது.

எமது குடும்பங்களில் நாம் எப்படி வாழ்கிறோம்? எமது பிள்ளைகளுக்கு இறை அச்சத்தைக் கொடுக்கிறோமா? விசுவாச வாழ்வை எம்மிடம் கற்கக்கூடிய விதத்தில் வாழ்கிறோமா? பணத்துக்கும், பிரசித்தத்துக்கும் முதலிடம் கொடுத்து எமது வழிபாடுகளைப் போட்டி மனப்பான்மையில் செய்கிறோமா?

இன்று பல விதமான ஏழைகள் உள்ளனர். சிலர் மேலும் மேலும் மற்றவர்களால் ஏழைகள் ஆக்கப்படுகின்றனர். சிலர் தமது அறியாமையால் குடிக்கும், ஆடம்பரச் செலவுக்கும் அடிமையாகி கடன்பட்டு கடனையும் வட்டியையும் செலுத்த முடியாமல் ஏழைகள் ஆகின்றனர். சிலர் தமது தற்பெருமையால் சில தொழில்களைச் செய்வது தரக்குறைவு எனத் தாழ்வு மனப்பான்மையில் சோம்பேறிகளாக ஏழையாகின்றனர். சிலர் வியாபாரத்துக்காகப் பிச்சை எடுக்கின்றனர். இப்படிப் பல வழிகளில் ஏழைகளாகின்றனர்.


நாம் மற்றவர்களுக்கு அறிவைக் கொடுக்க வேண்டும். வீணான ஆடம்பர வாழ்வை ஒதுக்கி எமது வாழ்வை எளிமையாக வாழப் பழக வேண்டும். கொண்டாட்டங்களில் மற்றவர்கள் என்ன நினைப்பார்கள் என்ற தாழ்வு மனப்பான்மையை நீக்கி தேவையற்ற ஆடம்பரச் செலவுகளை நீக்கி அத்தியாவசியமான செலவுகளை மட்டும் செய்யப்பழக வேண்டும். இருப்பவர்கள் தம்மிடம் உள்ளவற்றை இல்லாதவர்களுக்கும் பகிர்ந்து வாழப் பழக வேண்டும். இது கடினமானதுதான். இறைவனது வல்லமையைக் கேட்டுச் செபிக்க வேண்டும். அது மட்டுமல்ல மனம் மாறி இறைவனுக்கு விருப்பமான விதத்தில் வாழப்பழக வேண்டும்.

ஆன்மீகம் என்பது அறிவோடும் சுதந்திரத்தோடும் அன்பு செய்வதே. அன்பு செய்யப்பழக வேண்டும். மன்னித்து மறக்கப் பழகுவோம். எளிமை வாழ்வு வாழ்வோம். சமத்துவத்துடன் எல்லோரையும் சமமாக மதிக்கப் பழகுவோம். நீதி நேர்மையோடு வாழப் பழகுவோம். பகிர்ந்து வாழப் பழகுவோம். இவையே ஆன்மீகப் பெறுமதிகளாகும். கிறிஸ்துவின் படிப்பினைகளுக்கேற்ப இவற்றை வாழும் போது அது கிறிஸ்தவ ஆன்மீகமாகும். அவ்வாறே இவற்றை ஏனைய மதப் பெறுமதிகளின்படி வாழும் பொழுது அந்தந்த மத ஆன்மீகமாகும். ஆன்மீகம் என்பது எல்லா மதத்துக்கும் பொதுவானது. இதை உணர்வோம். இறையரசின் பெறுமதிகளை எம்மிடையே வளர்ப்போம்.

தொடரும்

**பேராசிரியர் எஸ். ஜே. யோகராசா**
**உளநல ஆலோசகர், களனிப் பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இறைவாக்கைக் கேட்பதால் திருச்சபை கட்டியமைக்கப்படுகிறது

# இறைவார்த்தை வழிபாடு

## தூய ஆவியார் பெருவிழா (20.05.2018)

## பேதுரு

**வாசக விளக்கம்:** அன்புள்ளம் கொண்ட இறைமக்களே! மனிதனை இயங்க வைப்பது மூச்சுக் காற்று. அதைப் போலத் திருச்சபையை இயங்க வைப்பது தூய ஆவி. இன்று தூய ஆவியாரின் பெருவிழாவாகிய, பெந்தகோஸ்தே பெருவிழாவைக் கொண்டாடுகின்றோம். அத்துடன் கிறிஸ்தவ சமூகத்தின் வெளிப்பாடும், பிறப்பும், தூய ஆவியார் அப்போஸ்தலர் மீதும், மரியன்னை மீதும் இறங்கியதையும், திருச்சபையின் பிறந்த நாளையும் நினைவு கூருகின்றோம். தூய ஆவியானவர் எமது துணையாளர். அவர் நமக்கு மட்டுமல்ல பாதை தவறியவர்களின் துணையாளர், தோல்வியுற்றவரின் துணையாளர், துன்பப்படுபவரின் துணையாளர், ஆறுதல் அற்றவரின் துணையாளர் இந்தத் துணையாளரைத்தான் இயேசு "நான் சென்ற பின் என் துணையாளரை உங்களுக்கு நான் அளிப்பேன். அவர் உங்களுடன் இருந்து உங்களை வழிநடத்துவார்" என்று கூறுகின்றார். இந்த ஆவியானவர் இல்லாமல் நாம் நம்முடைய கிறிஸ்தவ வாழ்வை வாழ முடியாது. இன்றைய நுகர்வுக் கலாச்சாரத்தின் மத்தியில் நாம் திருமுழுக்கின் வழியாகப் பெற்றுக்கொண்ட ஆவியாரை நம்முள் கொண்டுள்ளோமா? அல்லது தொலைத்துவிட்டுத் தேடுகின்றோமா? சிந்தித்து செயல்பட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : தி.ப 2:1-11**

தூய ஆவியின் தூண்டுதலால் அவர்கள் ஒவ்வொருவரும் பேசத் தொடங்கினார்கள்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவரே உம் ஆவியை அனுப்பி மண்ணகத்தின் முகத்தைப் புதுப்பிக்கின்றீர்.

**இரண்டாம் வாசகம் : 1கொரி 12:3-7, 12-13**

நாம் எல்லோரும் ஒரே தூய ஆவியால் ஒரே உடலாய் இருக்கும்படி திருமுழுக்குப் பெற்றோம்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா தூய ஆவியே எழுந்தருளி வாரும் உம்மில் நம்பிக்கை கொண்டோரின் இதயங்களை நிரப்பியருளும். அவற்றில் உமது அன்பின் தீ பற்றியெரியச் செய்தருளும். அல்லேலூயா.

**நற்செய்தி வாசகம் : யோவா 20:19-23**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

கிறிஸ்தவ சமூகத்தின் விசுவாசத்தின் வெளிப்பாடும் பிறப்பும் ஆன தூய ஆவி பெருவிழாவை மகிழ்வுடன் கொண்டாடும் இன்றைய நாளிலே திருஅவையும், திருத்தந்தையும் மற்றும் ஆயர்கள், குருக்கள், துறவியர் அனைவருக்கும் வாழ்த்துக் கூறுவதுடன் இறைமக்களாகிய நாம் அவர்களின் நற்செய்திப் பணிகளுக்காக எமது செபங்களை ஒப்புக்கொடுக்கும் நல் மனதைத் தந்தருள வேண்டுமென்று...

"நான் உங்களை திக்கற்றவர்களாக விடமாட்டேன்", "நான் உங்களுக்கு ஒரு துணையாளரை அனுப்புவேன்" போன்ற வார்த்தைகளை சிந்திக்கும் நாம் திரு அருட்சாதனங்கள் வழியாக எம்முள் வந்துள்ள ஆவியார் நம்மில் செயல்பட இடம்கொடுத்து அவர் காட்டும் பாதையில் நாம் நடக்கவேண்டிய வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

தூய ஆவியாரின் பெருவிழா எமது புதுப்பிறப்பின் திருவிழா என்பதைப் புரிந்து கொண்டவர்களாக ஆவியாருக்கு விரோதமான பாவங்களை விட்டுவிட்டு ஒப்புரவு அருட்சாதனத்தை பெற்று நம்மோடும் இறைவனோடும், அயலவருடனும் ஒப்புரவாகி செப வாழ்வில் நிலைத்து வாழ்ந்திடத் தேவையான வரங்களைத் தந்தருள வேண்டுமென்று...

## மூவொரு கடவுள் பெருவிழா (27.05.2018)

**வாசக விளக்கம்:** அன்புத் திருச்சபையின் திருக்கூட்டமாக மூவொரு கடவுள் என்னும் மறையுண்மைப் பெருவிழாவைக் கொண்டாட ஒன்றுகூடி வந்திருக்கும் அன்பின் இறைமக்களே! நாம் அனைவரும் கிறிஸ்து இயேசுவில் தந்தையாகிய கடவுளின் பிள்ளைகள் என்பதும், பரிசுத்த ஆவியின் நட்புறவால் இணைக்கப்பட்டவர்கள் என்பதும், நாம் வரையும் சிலுவை அடையாளத்தினால் உணர்ந்து கொள்ளுகின்றோம். சிலுவை அடையாளமானது நமது விசுவாசத்தின் அடிப்படையாகவும் நமது வாழ்வின் ஆணிவேராகவும் இருக்கின்றது. பிதாவின் பெயரானது அவரது ஈடு இணையற்ற இரக்க உணர்வை குறிக்கின்றது. இயேசுவின் பெயரானது அவரது அளவில்லா அன்பை வெளிப்படுத்துகின்றது. தூய ஆவியின் பெயரானது அவரது வல்லமையை எடுத்துரைக்கின்றது. இத்திரித்துவமகிமையைப் பற்றி சிந்திக்க இன்று நாம் அழைக்கப்பட்டிருக்கின்றோம். பிதா, சுதன் தூய ஆவி என்ற குடும்பமாக இறைவன் தன்னை வெளிப்படுத்தியுள்ளார். இவர்களது வாழ்வை நாம் நமது குடும்ப வாழ்வில் பிரதிபலிக்கவேண்டும். நாம் ஒற்றுமையுடனும், சமாதானத்துடனும் வாழ்ந்து மற்றக் குடும்பங்களுக்கு மூவொரு இறைவனை வெளிப்படுத்த வேண்டும். அனைத்து மக்களையும் சமூகங்களையும் அன்புடனும் புரிந்துணர்வுடனும் சமமாகவும், சரியாகவும் நடத்த வேண்டும். தமத்திருத்துவத்தை வெறும் அடையாளமாக அல்ல, அர்த்தமுள்ளதாக மாற்றுவோம். இதற்கு வேண்டிய வரங்களைப் பெற்றிட பலியில் இணைவோம்.

**முதல் வாசகம் : இ.ச 4:32-34, 39-40**

மேலே விண்ணிலும் கீழே மண்ணிலும் ஆண்டவரே கடவுள்.

**பதிலுரைப் பாடல் :**

ஆண்டவர் தமது உரிமைச் சொத்தாகத் தெரிந்தெடுத்த மக்கள் பேறுபெற்றோர்.

**இரண்டாம் வாசகம் : உரோ 8:14-17**

கடவுளின் பிள்ளைகளுக்குரிய மனப்பான்மையையே பெற்றுக் கொண்டீர்கள்.

**நற்செய்தி முன் வாழ்த்தொலி :**

அல்லேலூயா அல்லேலூயா இருந்தவரும் இருக்கின்றவரும் வருகின்றவரும் எல்லாம் வல்லவருமான கடவுள் தந்தை மகன் தூய ஆவியாருக்கு மகிமை உண்டாகுக. அல்லேலூயா

**நற்செய்தி வாசகம் : மத் 28:16-20**

### விசுவாசிகளின் மன்றாட்டு

ஆண்டவரே எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.

திரித்துவம் என்னும் மூவொரு கடவுளால் வழிநடத்தப்படும் திருஅவையானது மூவொரு இறைவனின் பண்புகளான கையளிப்பு, தியாகம், ஒற்றுமை ஏற்றுக்கொள்ளுதல், நிலைத்திருத்தல் என்பவற்றை கைக்கொண்டு திருஅவையை வழிநடத்தி செல்ல வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

மூவொரு கடவுளிடம் விளங்கும் பண்புகளை நமது குடும்பங்களில் உள்ள ஒவ்வொருவரும் கைக்கொண்டு அன்பிலும், ஒற்றுமையிலும் சிறந்தோங்கி வீட்டையும், நாட்டையும் முன்னேற்றப்பாதையில் வழிநடத்தத் தேவையான வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று...

படைத்தவர், மீட்டவர், வழிநடத்துபவர் என்ற நிலையில் மூவொரு கடவுளை சிலுவை அடையாளத்தால் நாளும் பொழுதும் நினைவுகூரும் நாம், சிலுவை அடையாளம் எமது விசுவாசத்தின் அடிப்படையாகவும் ஆணிவேராகவும் இருக்கிறது என்பதை புரிந்து கொண்டு அதற்கேற்ப வாழ வேண்டிய வரங்களைப் பொழிந்தருள வேண்டுமென்று,...



# தாயன்பு

"அம்மா என்பது தமிழ் வார்த்தை. அதுவே குழந்தையின் முதல் வார்த்தை" என்பது நாம் அனைவருமே அறிந்த பாடல் வரிகள். தாயே தெய்வம். தெய்வத்தின் வடிவமே தாய் என்பதெல்லாம் நாம் தாய்மைக்குக் கொடுக்கிற சிறப்பு. அனைத்தையும் படைத்த ஆண்டவனைக் கூட விவரம் தெரிந்த பிறகுதான் மனிதன் தேடுகிறான். ஆனால், அவன் பிறந்து, கண் திறந்த பின் உற்றுப் பார்க்கும் முகம் அம்மாவின் முகம்தான். கவிஞனாக, பேச்சாளனாக, உலகையே இசையால் மயங்கும் பாடகனாக இப்படி வாயினால் புகழ்பெறும் பெரிய மனிதர்களின் வாய்கூட முதலில் உச்சரிக்கும் வார்த்தை அம்மா.

"அன்னையைப் போல் ஒரு தெய்வமில்லை, அரவணைப்பில் அவளுக்கு நிகர் எவருமில்லை!"

அன்னையின் அரவணைப்பில் வளர்பவன் நல்லவனாக, நான்கு பேர் மதிக்கும் பெரியவனாக உயர்வான்!

நிலவென்றும், தாமரை மலரென்றும், மானென்றும், தேனென்றும் பெண்களை வர்ணித்து கவிபாடும் கவிஞர்களும், பெண் தாய்மை நிலைக்கு வரும்போது அவளை தெய்வ நிலைக்கு உயரத்தில் பாடத் தொடங்குகிறான். தாயை தெய்வ நிலைக்கு உயர்த்தும் வழக்கம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே நமது மத்தியில் ஊறிப்போன வழக்கம்தான் இயற்கை சக்திகளை தாய் தெய்வமாகப் போற்றி வணங்கினர் நமது முன்னோர். தாய் நாடு, தாய்மொழி, பூமித்தாய் என்றும், நதிகளுக்குத் தாய் தெய்வங்களின் பெயர்களைச் சூட்டியும், தாய்மையைப் போற்றுவது நமது பண்பாடு.

பெண்கள் ஒரு தினையை விதைத்தால் இரண்டு அல்லது மூன்று காம்புள்ள தினை விளையும். ஒரு மரவள்ளிக்குச்சியை நட்டால் மூன்று கூடை மரவள்ளிக் கிழங்கு கிடைக்கும் என்பது நம்மவர்களின் நம்பிக்கை. படைப்புத் தொழிலில் கடவுளுடன் இணைந்து மனித குலத்தைப் படைக்கும் தெய்வமாக தாய் மதிக்கப்படுகிறாள்.

அனைத்து உயிர்களையும் தமது படைப்புக்களாகக் கருதுவது கடவுளின் பண்பு. இந்தப் பண்பு நமது தாயினத்தின் இரத்தத்தில் ஊறிப்போன ஒன்று. தனது ஒரு மார்பில் குழந்தைக்கும், மற்றொரு மார்பில் தாயை இழந்த குட்டிப் பிராணிகளுக்கும் பாலூட்டும் பண்பு இன்றும் சில ஆதிவாசிப் பெண்களிடம் காணப்படுகிறது.

உலகத்தைப் படைத்த இறைவன்தான் இன்னும் உலகத்தைக் காத்து இயக்கிக் கொண்டிருக்கிறார் என்று நாமாகக் கற்பனை செய்து கொள்கின்றோம். ஆனால், உலகத்தைப் படைத்து முடித்துவிட்டு, அதைப் பராமரிக்கும் பொறுப்பை தாயினத்திடம் விட்டுவிட்டார் இறைவன் என்கிறார் ஒரு ஞானி.

இப்படித் தாய்மையைப் போற்றும் நம்மில் தாய்மையை அலட்சியப்படுத்தும் நிலையும் காணப்படுகிறது. பாசத்தைப் பொழிந்து வளர்த்த தாய் தனது இறுதி நாள்களில் பராமரிப்பின்றி முதியோர் இல்லங்களை நாடும் நிலை பரவலாகக் காணப்படுகிறது. கூட்டுக் குடும்ப வாழ்க்கை முறை மறைந்து வருகிறது. பிழைப்பிற்காகப் பிறந்த மண்ணை விட்டு பட்டணங்களுக்கும், வெளிநாடுகளுக்கும் செல்கிறவர்கள் பெற்றோர்களை தனிமைப்படுத்துகிறார்கள். ஒரு தாய் பத்துக் குழந்தைகளைப் பராமரிப்பாள். அவளது கடைசி கால வாழ்வில் பத்துக் குழந்தைகளில் ஒருவராவது அவரைப் பராமரிப்பார் என்று எதிர்பார்க்க முடியவில்லை.

நான்கு மக்களைப் பெற்று அவர்களை நல்ல நிலைக்கு கொண்டு வந்தார் ஓர் அன்னை. அவளைக் கடைசி காலத்தில் யார் பராமரிப்பது என்கிற பிரச்சினை வருகிறது. ஒவ்வொருவர் வீட்டிலும் ஆறு மாதங்கள் என்று முறைவைத்து உணவு கொடுக்கின்றனர். தனது மகன் வீட்டில் நிரந்தர வேலைக்காரர்கள் இருக்கிறார்கள். உயர்ந்த சாதி நாய்கள் வளர்க்கப்படுகின்றன. இவர்களுக்கு நிரந்தர பராமரிப்பு உண்டு. ஆனால் பெற்றவளோ ஆறு மாதக் கெடு முடிந்தவுடன் அடுத்த வீட்டுக்குப் புறப்பட்டாக வேண்டிய நிலை. நோய் வந்து மருத்துவமனையில் சேர்க்கப்பட்டால் செலவைப் பகிர்ந்து கொள்வதில் சகோதரர்களுக்குள் சண்டை. இறுதியில் அவள் முதியோர் இல்லத்தில் தஞ்சமடைகிறாள்....

தொடர்ச்சி 15ம் பக்கம்..

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின்

# உலகத்தொடர்பாடல் தினச்செய்தி – 2018

"உண்மை உங்களுக்கு விடுதலை அளிக்கும்" (யோவான் 8:32)

13.05.2018

## போலியான செய்தியும் சமாதானத்திற்கான பத்திரிகைத்துறையும்




### அன்பான சகோதர, சகோதரிகளே,

தொடர்பாடல் கடவுளின் திட்டத்தில் ஒன்றாகவும், எமது நட்புறவு அனுபவத்தின் ஒரு முக்கிய பாதையாகவும் அமைகிறது. கடவுளின் சாயலாகவும் பாவனையாகவும் படைக்கப்பட்டதன் விளைவாக நாம் சகல உண்மையையும், நன்மைத்தனத்தையும், அழகானவற்றையும் வெளிப்படுத்தும் ஆற்றல் பெற்றிருக்கிறோம். எம்மைச்சூழவுள்ள உலகத்தையும், எமது சொந்த அனுபவத்தையும் விபரிப்பதுடன், நடப்பவைகளை விளங்கிக்கொண்டு வரலாற்று ரீதியான நினைவை உருவாக்கக் கூடியவர்களாகவும் இருக்கிறோம். ஆனால் எமது சுயநலத்துக்கும் தற்பெருமைக்கும் இடம்கொடுக்கும்போது எமது தொடர்பாடல் ஆற்றலைப் பிழையான வழியிலும் பயன்படுத்த முடியும். இவற்றை நாம் தொடக்க காலத்திலிருந்தே காயின் ஆபேல், பாபேல் கோபுரம் போன்ற விவிலிய வரலாற்றில் கண்டுகொள்ளமுடியும் (தொடக்கநூல் 4:4-16, 11: 1-9). தனிப்பட்ட முறையிலும், சமூகமாகவும் உண்மையைத் திரித்துக்கூறுவது நமது இயல்பாக இருக்கிறது. ஆயினும் கடவுளின் திட்டத்திற்கு விசுவாசமுள்ளவர்களாக நாம் செயற்படும்போது, உண்மையை அறியும் எமது பொறுப்புள்ள தேடலில், தொடர்பாடல் மிகவும் சிறப்பான செயற்பாடாக அமையும்.

தீவிரமாக மாறிக்கொண்டிருக்கும் இன்றைய தொடர்பாடல் உலகில், போலிச்செய்திகள் பரப்பப்படுவதை நாம் கண்கூடாகக் காண்கின்றோம். இது எம்மைச் சிந்திக்க அழைக்கின்றது. அதனால்தான் இன்றைய உலகத்தொடர்பாடல் தினத்தில் உண்மை என்ற பதத்தைத் திரும்பவும் எடுக்க முடிவு செய்துள்ளோம். எமது முன்னாள் திருத்தந்தை ஆறாவது பவுல் 1972ல் "உண்மையின் சேவையில் சமூகத்தொடர்பாடல்" என்ற பதத்தில் உரையாற்றியுள்ளார். அந்தவகையில் நாம், போலிச்செய்திக்கு முடிவுகண்டு ஊடகத்தின் மாட்சியையும், உண்மையைப் பரப்புவதில் ஊடகத்தின் பொறுப்பையும் திரும்பவும் கண்டுபிடிப்பதில் எம்மை அர்ப்பணித்துள்ளோம்.

### 1. போலிச்செய்தியில் உள்ளடங்கும் 'போலி' என்ன?

"போலிச்செய்தி" என்ற பதம் பெரிய விவாதங்களுக்கும், தர்க்கங்களுக்கும் உள்ளாகி இருக்கிறது. பொதுவாக இச்சொல்லானது மாறுபட்ட கருத்துக்களைப் பாரம்பரிய தொடர்புசாதனங்களிலும், நிகழ்நிலை (Online) தொடர்புசாதனங்களிலும் பரப்புவதைக் குறிக்கிறது. போலிச்செய்திகளைப் பரப்புவது குறிப்பிட்ட இலக்குகளை அடையவும், பொருளாதார இலாபங்களையும், அரசியல் நோக்கங்களையும் முன்னெடுப்பதற்கும் சாதகமாகப் பாவிக்கப்படுகிறது.

உண்மைச் செய்தியை மௌனமாக்கும் ஆற்றலில்தான் ஆரம்பக்கட்டத்தில் போலிச்செய்தி வலுப்பெற்றது. இரண்டாவதாக இந்தத் தவறான, ஆனால் நம்பமுடியாத செய்தி மக்கள் மற்றும் பொதுவான சமூக முரண்பாடுகளைக் கவர்ந்து மக்களின் கவனத்தை ஈர்த்து, கவலை, அவமதிப்பு, கோபம் மற்றும் விரக்தி போன்ற உடனடி உணர்வுகளைச் சுரண்டுகிறது. இத்தகைய போலிச்செய்திகளைப் பரப்புவதற்கான திறமையானது பெரும்பாலும் தவறாகப் பயன்படுத்தப்படும் சமூக வலையமைப்புக்களையும் அவை செயற்படும் விதத்தையும் நம்பியிருக்கிறது. உண்மைச் செய்திகளைப் போலவே வேடமிட்டு வரும் பொய்ச்செய்திகள் மக்களுக்குப் பழக்கமான முற்சார்பு எண்ணங்களைச் சுமந்து வருவதால் அவை மக்களால் விரும்பி ஏற்கப்படுகிறது. அதிகாரபூர்வமான மறுப்புக்கள் சொல்லப்பட்டாலும் பொய்யான செய்திகள் மக்களிடையே விரைவில் ஊடுருவிச் செல்கின்றன.

சமுதாயத்தில் பழக்கத்தில் இருக்கும்படி டிஜிட்டல் கருவிகளைப் பயன்படுத்தி, இத்தகையச் செய்திகளை எவ்வித தயக்கமும் இன்றி மக்கள் பரப்பி வருவதால் பொய்யான செய்திகளின் வேடம் கலைக்கப்படுவதில்லை.

### 2. நாம் எவ்வாறு போலிச்செய்திகளை இனம்காண முடியும்?

நாம் ஒருவருமே பொய்மையை எதிர்க்கும் எமது பொறுப்பிலிருந்து விலகிக்கொள்ள முடியாது. இது இலகுவான காரியமல்ல. ஏனென்றால் மாறுபட்ட தகவல்கள் விளங்கமுடியாத, தந்திரமான முறையில் பிழையான வழிகளையும் உளவள சாதனங்களையும் அடிப்படையாகக் கொண்டு செயற்படுகின்றன. தவறான தகவல், நுட்பமான தவறான வழிகாட்டுதல் மற்றும் சில நேரங்களில் அதிநவீன உளவியல் இயக்கங்களின் பயன்பாடு ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது. ஊடகங்கள் வழங்கிய தகவலை விளக்குவதற்கும், மதிப்பீடு செய்வதற்கும் மக்களுக்கு உதவுவதற்கும், தவறான தகவல்களின் பரவலுக்கு ஒத்துழைப்பு வழங்காமல் இருக்கவும் அவர்களுக்கு உதவுவதன் நோக்கத்தோடு கல்வித்திட்டங்களை உருவாக்கும் பாராட்டும்படியான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மாறுபட்ட தகவல்கள் செயற்படும் வழிகளைத் தடுப்பதற்கும், இனம்காணவும் சக்தியுள்ள, கவனமான ஆராய்வுக்கு அழைக்கப்படுகின்றோம். எந்த நேரத்திலும் எந்த இடத்திலும் உட்புகுந்து நச்சுப்பாம்பாக நாசகாரியங்களைச் செய்பவர்களின் முகமூடிகளை நாம் அகற்ற வேண்டும். இந்தச் செயற்பாடுதான் தொடக்கநூலில், மனித வரலாற்றின் தொடக்கத்தில் சதிகாரப்பாம்பினால் உருவாக்கப்பட்ட முதல் போலிச்செய்தியாகும் (காண்க தொடக்க நூல் 3: 1-15). இதுதான் அபாயகரமான வரலாற்றின் முதலாவது பாவமாகும். கடவுளுக்கும், அயலவர்க்கும், சமூகத்திற்கும் எதிரான எண்ணிலடங்காத தீமைகள் இதைத்தொடர்ந்துதான் மேற்கொள்ளப்பட்டன. தேர்ச்சிபெற்ற பொய்களின் தந்தையாகிய சாத்தானின் கொள்கை ஏமாற்றுதலாகும் (யோவான் 8:44).

வரலாற்றில் இடம்பெற்ற முதல் பாவத்தில் சாத்தான் ஏவாளின் நண்பனாகவும், அவளின் நன்மைகருதிச் செயற்படுபவனாகவும் நடித்து அவளை அணுகி உண்மையைத் திரித்துக்கூறுகிறான். "கடவுள் தோட்டத்திலுள்ள எந்த மரத்தின் கனியையும் சாப்பிடவேண்டாமென்று கூறினாரா? (தொநூ 3:1) உண்மையில் தோட்டத்திலுள்ள எந்த மரத்தின் கனியையும் உண்ணவேண்டாமென்று கடவுள் கூறவில்லை. ஒருமரத்தின் கனியை மட்டும் உண்ணவேண்டாமென்று கூறினார்" (தொநூ 3:2). ஏமாற்றுக்காரனின் சொல்லை நம்பியதால் அவளுடைய பதில் எதிர்மாறாக்கப்பட்டு அவள் ஏமாற்றப்பட்டாள். அவள், "நீ சாகமாட்டாய்" என்று அவன் கூறிய ஏமாற்று மொழியை நம்பினாள் (தொநூ 3:4).

சோதனையாளரின் "சீரழிவு" உண்மையின் தோற்றத்தை எடுக்கும். "நீங்கள் சாப்பிடும் நாளில் உங்கள் கண்கள் திறக்கப்படும். நீங்கள் நன்மை தீமை அறியத்தக்கவர்களாய் தெய்வங்களைப்போல இருப்பீர்கள் என்று இறைவன் அறிவார்" (தொநூ 3:5). அவர்களுடைய நன்மைக்காகக் குறிக்கப்பட்ட கடவுளுடைய தந்தைக்குரிய கட்டளை எதிரியின் கவர்ச்சியூட்டுகிற உற்சாகத்தால் அவமதிக்கப்பட்டது. "அந்தக் கனி உண்பதற்கு சுவையானதாகவும், கண்களுக்கு களிப்பூட்டுவதாகவும், அறிவு பெறுவதற்கு விரும்பத்தக்கதாகவும் இருந்தது" (தொநூ 3:6) இந்த விவிலியக் கதையானது நமது சிந்தனைக்கு ஒரு முக்கிய விடயத்தை வெளிப்படுத்துகின்றது. தீமை விளைவிக்காத மாறுபட்ட தகவல் என ஒன்று இல்லை. மாறாக பொய்யானவற்றை நம்புவது மோசமான விளைவுகளை ஏற்படுத்தலாம். ஒரு சிறியளவு உண்மைத் திரிவுபடுத்துதல்கூட பாரிய விளைவுகளைக் கொண்டுவரும்.

பிரச்சினை என்னவென்றால் நமது பேராசைதான். போலிச்செய்தி மிகவும் விரைவாகப் பரவக்கூடியதினாலும் மிக இலகுவாக எழக்கூடிய மனித ஆசைகளைப் பூர்த்திசெய்வதனாலும் அதைத் தடுப்பது மிகவும் கடினமானது. பொய்த்தகவல்களைப் பூர்த்திசெய்யும் பொருளாதாரமும் அதைக் கையாளும் வழிகளும் அதிகாரத் தாகத்தையும், பற்றிக்கொள்ளும் ஆசையையும் அதிகமாக்கி எம்மை ஆபத்தான சூழலுக்கு இட்டுச்செல்லும். அதனால்தான் உண்மையைப் புரிந்துகொள்வதன் மூலம், நம்முடைய ஆழ்ந்த ஆசைகளையும் மனோபாவங்களையும் புரிந்துகொள்ளவும், மதிப்பிடவும் மக்களுக்குக் கற்பிப்போம்.

### 3. "உண்மை உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32)

தொடர்ந்து அசுத்தப்படுத்தும், ஏமாற்றும் மொழி நம் உட்புற வாழ்க்கையை இருளாக்கிவிடும். டோஸ்டோ-வ்ஸ்கி என்ற அறிஞரின் அவதானிப்பு நமக்கு ஒரு வெளிச்சமாகும். அவர் கூறுகின்றார்;"தங்களுக்குப் பொய்யுரைக்கிறவர்கள், தங்கள் பொய்களுக்கு செவிசாய்ப்பவர்கள் தங்களுக்குள்ளேயோ அல்லது தங்களைச் சுற்றியோ உள்ள உண்மையை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உணரமுடியாமல் மற்றவர்களிடமிருந்தும் மரியாதையை இழந்துவிடுகிறார்கள். மரியாதையற்றவர்களாக, அன்பு செய்வதை நிறுத்தி, அதிலிருந்து விடுபடுவதற்காகத் தங்கள் உணர்ச்சிகளைத் தூண்டிவிடுவதன் மூலம், தங்களைத் திசைதிருப்பிவிடுகிறார்கள்".

ஆகவே நாம் எப்படி நம்மைப் பாதுகாக்க வேண்டும்? பொய்யின் தொற்றுநோயானது உண்மையினால் தூய்மையாக்கப்படுகிறது. கிறிஸ்தவத்தில், உண்மை என்பது உண்மை எது அல்லது பொய் எது என்பதை வரையறுக்கும் ஒரு யதார்த்தம் மட்டுமல்ல, மறைந்திருக்கின்ற விடயங்களை ஒளிக்குக் கொண்டுவருவது மட்டுமல்ல மாறாக "உண்மையை வெளிப்படுத்துவது!" பண்டைய கிரேக்ககால உண்மை நம் வாழ்வு முழுவதிலும் அடங்கியுள்ளது. திருவிவிலியத்தில் அது ஆதரவு, உறுதிப்பாடு மற்றும் நம்பிக்கை ஆகியவற்றின் கருத்தினைக் கொண்டுள்ளது. இது எமது வழிபாட்டின் "ஆமென்" என்பதன் மூலம் வெளிப்படுத்தப்படுகின்றது. உண்மை என்பது நீங்கள் விழாமல் தாங்கி நிற்கக்கூடியது. இந்த அடிப்படையில் உண்மையைக் கண்டுகொள்ளக்கூடியவர் ஒருவரே. அவரே உயிருள்ள கடவுள். நம்மை அன்பு செய்பவரின் விசுவாசத்தையும் நம்பகத்தன்மையையும் அனுபவிப்பதன் மூலம் உண்மையை நாம் கண்டுபிடிப்போம். உண்மை மட்டுமே நம்மை விடுவிக்கமுடியும். "உண்மை உங்களை விடுதலையாக்கும்" (யோவான் 8:32).

எமது வார்த்தைகளும் செயற்பாடுகளும் உண்மையாக இருக்கவேண்டுமென்றால் பொய்யிலிருந்து உண்மை மற்றும் உறவுக்கான தேடல் ஆகிய இவை இரண்டுமே எம் வாழ்க்கையில் இரு முக்கியமான அம்சங்களாக அமையவேண்டும். உண்மையைப் புரிந்துகொள்வதற்கு, ஒற்றுமையை உற்சாகப்படுத்துகிற எல்லாவற்றையும் நாம் புரிந்துகொள்வதுடன், நன்மைகளைத் தனிமைப்படுத்தி பிரித்து எதிர்ப்பதைத் தவிர்ப்பது அவசியம். எனவே உண்மை வெளியிலிருந்து புகுத்தப்படுவது அல்ல, இது ஒருவர் ஒருவருக்கு செவிசாய்ப்பதிலிருந்து உள்ளார்ந்தரமாக, சுயாதீனமாக வளரும் ஒரு உறவு. நாம் உண்மையைப் பேசுவதை நிறுத்திவிட முடியாது. ஏனென்றால் பொய்யானது நாம் உண்மையைப் பேசும்போது அதற்குள் நுழைந்துவிடக்கூடியது. ஒரு குற்றமற்ற வாதம் உண்மையில் மறுக்க முடியாத உண்மைகள்மீது தங்கியுள்ளது. ஆனால் அது மற்றொரு நபரை காயப்படுத்தவும் மற்றவர்களின் பார்வையில் அந்த நபரை இழிவுபடுத்தவும் பயன்படுத்தினால் அது சரியாகாது. அது உண்மையல்ல. உண்மையின் அறிக்கையிலிருந்து அவற்றின் கனிகளை நாம் உணரமுடியும். விட்டுக்கொடுத்தல் மற்றும் முதிர்ந்த பிரதிபலிப்பை ஊக்குவிக்கும்வகையில் ஆக்கபூர்வமான உரையாடல் போன்றவை பயனுள்ள முடிவுகளுக்கு வழிவகுக்கும்.

### 4. அமைதி என்பது உண்மையான செய்தி

பொய்களுக்கு சிறந்த நிவாரணி உத்திகள் அல்ல. மாறாக மக்களே ஆவார். அதாவது பேராசையற்ற, அதேவேளை கேட்கத் தயாராக உள்ள மக்கள், உண்மையை வெளிப்படுத்தும் வகையில் உண்மையான உரையாடலில் ஈடுபட முயற்சிக்கும் மக்கள், நன்மைகளால் ஈர்க்கப்பட்ட மக்கள், மொழியைப் பயன்படுத்துவதில் பொறுப்புள்ள மக்கள், போலிச் செய்திகளின் பரவலுக்குரிய பதில் பொறுப்புணர்வு என்றால், இதில் ஒரு முக்கியமான பொறுப்பு தகவல்களை வழங்கும் பொறுப்பைத் தம் தோள்களில் கொண்டுள்ளவர்களுக்கு - அதாவது பத்திரிகையாளர்களுக்கு உரியது. இன்றைய உலகில் அவர்கள் செய்வது ஒரு தொழில் மட்டுமல்ல ஆனால் ஒரு பாரிய பணியுமாகும். தகவலின் இதயம் அது அறிவிக்கப்படும் வேகம் அல்ல, அதன் பார்வையாளர்களின் தாக்கமும் அல்ல ஆனால் நபர்கள் (மக்கள்) என்பதை நாம் நினைவிற்கொள்ள வேண்டும். மற்றவர்களுக்குத் தெரியப்படுத்துவது என்பது மற்றவர்களை உருவாக்குவதிலும் அம்மக்களின் வாழ்வில் உறவில் இருப்பதையும் அர்த்தப்படுத்துகிறது. அதனால்தான் ஆதாரங்களின் துல்லியம் மற்றும் ஒற்றுமையைப் பாதுகாப்பது ஆகியவை நன்மையை ஊக்குவிப்பதற்கும், நம்பிக்கையை உருவாக்குவதற்கும் ஒற்றுமை மற்றும் சமாதானத்திற்கான வழியைத் திறப்பதற்குமான அம்சங்களாக அமையும்.

எனவே ஒரு சமாதானம் பரப்பும் ஊடகத்தை உருவாக்க நான் அனைவரையும் அழைக்கின்றேன். முக்கியமான பிரச்சினைகளை ஏற்க மறுக்கின்ற உறுதியற்ற ஊடகத்தையல்ல நான் விரும்புவது. மாறாக, உண்மையுள்ள, பொய்களை எதிர்க்கக்கூடிய, உணர்ச்சிவசப்படாத தலையங்கங்களை வெளிப்படுத்தும் ஊடகத்தையே நான் குறிக்கின்றேன். ஒரு ஊடகம் மக்களுக்காக, மக்களால் உருவாக்கப்பட்ட ஊடகமாக, எல்லோருக்கும் பணிசெய்யும் ஊடகமாக, குரலற்ற பெரும்பான்மை மக்களின் குரலாக இருக்கவேண்டும். மோதல்களின் அடிப்படைக் காரணங்களை ஆய்வு செய்வதைவிட முரண்பாடுகளின் காரணத்தை ஆராய்ந்து ஆழமான புரிந்துணர்வுகளை உருவாக்க வேண்டும். பத்திரிகைகள், போட்டிகள் மற்றும் வாய்மொழி வன்முறை அதிகரிப்புக்கு மாற்றுவழிகளைச் சுட்டிக்காட்டி அர்ப்பணத்தோடு பணிசெய்யவேண்டும்.

**மனிதரிடமுள்ள உண்மையைக் கண்டறியும் வரத்தைப் பெற்றுக்கொள்ள அசீசியாருடைய செபத்தின் வழியாக வேண்டுவோம்.**

ஆண்டவரே உமது அமைதியின் கருவியாக எங்களை ஆக்கியருளும். ஒற்றுமையை உருவாக்காத ஒரு தகவல்தொடர்பின் தீமையை நாம் அறிந்துகொள்ள எங்களுக்கு உதவிசெய்யும்.

எங்கள் தீர்ப்புகளிலிருந்து விஷத்தை அகற்ற எங்களுக்கு உதவும். மற்றவர்களைக் குறித்து சகோதர சகோதரிகளாகப் பேச எங்களுக்கு உதவி செய்யும்.

**நீங்கள் உண்மையும் நம்பகத்தன்மையுடையவராகவும் இருக்கிறீர்கள். நம்முடைய வார்த்தைகள் உலகில் நன்மையின் விதைகளாக இருக்கட்டும்!**

எங்கே கூச்சல் உள்ளதோ
அங்கு செவிமடுக்கும் பண்பை வளர்ப்போமாக.

எங்கே குழப்பம் நிலவுகிறதோ
அங்கே அமைதியை ஊக்குவிப்போமாக.

எங்கே தெளிவின்மை உள்ளதோ
அங்கு தெளிவைக் கொண்டுவருவோமாக.

எங்கே புறக்கணிப்பு உள்ளதோ
அங்கு ஏற்றுக்கொள்ளுதலை வழங்குவோமாக.

எங்கே பரபரப்பு உள்ளதோ
அங்கே நிதானத்தைக் கடைப்பிடிப்போமாக

எங்கே மேம்போக்குத்தன்மை உள்ளதோ
அங்கே உண்மையான கேள்விகளை எழுப்புவோமாக.

எங்கே முன்சார்பு எண்ணம் உள்ளதோ
அங்கு நம்பிக்கையை ஏற்படுத்துவோமாக.

எங்கே விரோதம் உள்ளதோ
அங்கே நட்பைக் கொண்டுவருவோமாக.

எங்கே பொய்மை உள்ளதோ
அங்கு உண்மையைக் கொண்டுவருவோமாக.
ஆமென்.

** ** ** ** ** ** **

**தமிழாக்கம் :**
**அருட்பணி. தமிழ்நேசன் அடிகள்**

## இந்திய (சாலக்குடி) டிவைன் தியான இல்ல அருட்தந்தை. என்டோ கன்னம்புழா அவர்களால் வழிநடத்தப்பட்ட புகழ்ச்சி வழிபாடு, திருப்பலி, நற்கருணை ஆராதனை, குணமாக்கல் வழிபாடு ஆகியவற்றின் நிகழ்வுகள்



கொழும்பு உயர்மறைமாவட்ட தமிழ் அப்போஸ்தலிக்க பணிக்கு பொறுப்பான ஆயரின் துணையாளரும், ஞான ஒளி பத்திரிகையின் ஆசிரியருமான அருட்பணி. மனோகுமாரன் நாகரட்ணம் அவர்களின் மேற்பார்வையின் கீழ் இந்திய (சாலக்குடி) டிவைன் தியான இல்ல அருட்தந்தை. என்டோ கன்னம்புழா அவர்களால் "அன்னை மரியாள் தியானம்" என்ற தலைப்பில் மறையுரையும் அதனைத் தொடர்ந்து புகழ்ச்சி வழிபாடு, நற்கருணை ஆராதனை, குணமாக்கல் வழிபாடு, திருப்பலியினை தொடர்ந்து மெழுகுவர்த்தி பவனியும் வைகாசி மாதம் 7ந் திகதி காலை 8.30 மணி முதல் 5.30 மணி வரை நாகம தேவத்தை பெசிலிக்காவில் புதிதாக நிர்மானிக்கப்பட்ட கெபியில் நடைபெற்றது இந்நிகழ்வுகளை படத்தில் காணலாம்.

**தகவல் :**
**ஸ்பெல்மன் பர்னாந்து**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







## திருத்தூதர் பணிகள் 15-28 அதிகாரங்கள்

01. உங்களைப் பார்க்க வந்தேன் உங்கள் சமயப்பற்றைக் கண்டேன். உங்கள் தொழுகையைக் கண்டேன். சூப்பரான தலைப்பு ஒன்று கண்டேன். அது சும்மா கிடந்தது. அது என்ன?
02. இறைப் புகழ் பாட சிறைக் கதவு திறக்க கைதிகள் ஓடியிருப்பர் என்று நினைக்க பட்டயத்தை உருவி மாய்த்துக்கொள்ளப் பார்த்தானே இவன் யார்?
03. ஆசை வந்தது முன்னே பவுல் வணங்கும் இயேசுவின் பெயரை சொன்னார். பின்னே ஆவி தாக்கியது. பின்னே அலறி ஆடையின்றி ஓடினர் அண்ணே. யார் இவர்கள்?
04. பள்ளியில் தூங்கியவன். படிப்பை இழந்தான். கடையில் தூங்கியவன். காசை இழந்தான். ஜன்னலில் தூங்கியவன் உயிரை இழந்தான். இவன் யார்?
05. நான் மூன்றெழுத்து உடையவன். மூன்றெழுத்து ஊரைச் சார்ந்தவன். பவுலின் கச்சையைக் கட்டிக் கொண்டு கணப்பொழுதில் இறைவாக்குரைத்தேன். நான் யார்?

## தூய ஆவியார் நமக்கு என்ன நன்மைகள் தருகின்றார்?

- கடவுளின் மாபெரும் செயல்களைப் பற்றி நமக்கு எடுத்துரைப்பார்.
- இயேசுக்கிறிஸ்து ஆண்டவர் என்ற உண்மையை நமக்குச் சுட்டிக்காட்டுவார்.
- நமது மனத்திலிருந்தும் அச்சத்தை அகற்றி அமைதியை அளிப்பார்.



மாணவர்களே! உங்களது ஆக்கங்களை பின்வரும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.
ஆசிரியர், ஞான ஒளி,
கொழும்பு கத்தோலிக்க அச்சகம்,
இலக்கம் 02, ஞானார்த்த பிரதீப்பய
மாவத்தை, கொழும்பு - 08.

# 4. தனிச் செபப் பழக்கம்

### 04. இயேசுவோடு இணைந்து மன்றாடும்.

**(இயேசு கற்றுத்தந்த செபம்) புதிய மொழிபெயர்ப்பு**

விண்ணுலகில் இருக்கிற எங்கள் தந்தையே, உமது பெயர் தூயது எனப் போற்றப்பெறுக! உமது ஆட்சி வருக! உமது திருவுளம் விண்ணுலகில் நிறைவேறுவது போல மண்ணுலகிலும் நிறை வேறுக! எங்கள் அன்றாட உணவை இன்று எங்களுக்குத் தாரும். எங்களுக்கு எதிராக குற்றம் செய்வோரை நாங்கள் மன்னிப்பது போல, எங்கள் குற்றங்களை மன்னியும். எங்களைச் சோதனைக்கு உட்படுத்தாதேயும், தீயோனிடமிருந்து எங்களை விடுவித்தருளும். ஆமென்.

**குறிப்பு:**

ஒவ்வொரு வேளையும் இச்செபத்தைச் சொல்லும்போது, நீர் இயேசுவோடு சேர்ந்து செபிக்கிறீர் என்பதை நினைவில் கொள்ளும். இச்செபத்தில் ஏழு துணுக்குகள் உள்ளன. முதல் மூன்று துணுக்குகள் வானகத் தந்தையை மையப்படுத்துவதாகவும், எஞ்சிய நான்கு துணுக்குகள் உம் தேவைகளை மையப்படுத்துவதாகவும் இருக்கின்றன. மூன்று துணுக்குகளைக் கொண்ட முதல் பகுதியில், நீர் வானகத்தந்தையின் விருப்பம் நிறைவேற விரும்புகிறீர். ஏனைய நான்கு துணுக்குகளைக்கொண்ட இரண்டாம் பகுதியில், உம் தேவைகள் நிறைவேற நீர் அவரிடம் இரந்து கேட்கிறீர்.

### 05. அன்னை மரியாவிடம் மன்றாடும்.

**(மங்கள வார்த்தை செபம்) புதிய மொழிபெயர்ப்பு**

அருள் மிகப்பெற்ற மரியே வாழ்க! ஆண்டவர் உம்முடனே, பெண்களுக்குள் ஆசி பெற்றவர் நீரே, உம்முடைய திருவயிற்றின் கனியாகிய இயேசுவும் ஆசி பெற்றவரே. தூய மரியாயே! இறைவனின் தாயே! பாவிகளாய் இருக்கிற எங்களுக்காக இப்பொழுதும் எங்கள் இறப்பின் வேளையிலும், வேண்டிக்கொள்ளும். ஆமென்.

**குறிப்பு:**

ஒவ்வொரு வேளையும் இச்செபத்தைச் சொல்லும்போது, நீர் திருச்சபையோடு சேர்ந்து செபிக்கிறீர். இறை அன்னைக்கு மிகவும் பிடித்தமான இச்செபத்தின் முதல் பகுதி நற்செய்தியில் இருந்து எடுக்கப்பட்டுள்ளது. இச்செபத்தின் இரண்டாம் பகுதி திருச்சபையின் தொடக்க காலத்தில் இருந்தே இறைமக்களால் அன்னையிடம் வேண்டுதல் செய்யும் பகுதியாகச் சேர்க்கப்பட்டுள்ளது. இச்செபம் திருச்சபையின் பாரம்பரியச் சொத்து என்பதை மறவாதீர்.

### 06. தூய ஆவியாரிடம் மன்றாடும்.

நீர் என்னிடம் வாரும். உம் ஞான ஒளியால் என்னை நிரப்பும். அப்பொழுது நான் புதியவராக மாறுவேன். உம் தூண்டுதலால் நல்லதைச் செய்யவும், தீயவை விலகவும், எனக்குக் கற்றுத் தாரும். நான் வானகத் தந்தையோடும், இயேசுவோடும் தியாக அன்பில் நிலைத்திருக்கவும், இதன் பொருட்டு மற்றவர்களோடு அன்புறவில் வாழ்ந்து வளரவும் எனக்கு உதவி செய்யும். ஆமென்.

**குறிப்பு:**

திருமுழுக்கின்போது நீர் தூய ஆவியாரால் வானகத் தந்தையின் (மகனாக, மகளாக) பிறந்துள்ளீர். அப்போது அவர் உம் உடலைத் தன் இல்லமாக மாற்றிவிட்டார். உம் உடலில் குடிகொள்ளும் இவரை நீர் அழைக்கும் ஒவ்வொரு வேளையும், இவர் உம்மை வானகத் தந்தைக்கு ஏற்றவராகப் புதுப்பிக்கிறார். நீர் நல்லதைச் செய்யவும், தீயதை விலக்கவும் தன் ஞானத்தால் உம்மைத் தூண்டுகிறார். இவ்வாறு நீர் இயேசுவின் சாட்சியாக வாழ இவர் உமக்கு உதவி செய்கிறார்.

**தொடரும்**

**அருட்தந்தை அ. பிலிப் அடிகளார் (ivDei)**

# மூட நம்பிக்கை முட்டாள் தனமாக்கும்



நண்பர்கள் சிலர் ஒரு குழுவாகச் சுற்றுலாப் புறப்பட்டனர். ஒரு நாள் மாலை வேளையில் அவர்கள் வெளியே சென்றபொழுது பெருமழை பெய்யத் தொடங்கியது.

அந்தக் குழுவினர் ஒரு பாழடைந்த வீட்டில் தஞ்சம் புகுந்தனர். மழை விடுவதாக இல்லை. இடியும், மின்னலும் வலுத்தன.

அந்த நண்பர்கள் தங்களுக்குள் பேசிக்கொண்டனர்.

“நம்மில் யாரோ ஒரு மிகக்கொடிய பாவம் செய்தவன் இருக்க வேண்டும். அதனால் தான் இடியும், மின்னலும் தாக்குகின்றது. நாம் தப்பவேண்டும் எனில் அந்தப் பாவம் செய்தவனை நாம் உடனே துரத்த வேண்டும்” என்று கலந்தாலோசித்தனர்.

ஆளுக்கொரு யோசனை சொன்னார்கள். முடிவாக ஒருவன் “நாம் அனைவரும் நம் தொப்பிகளை வீசி வெளியே எறிவோம். யார் தொப்பியை மின்னல் வெட்டுகிறதோ அவனே பாவம் செய்தவன். அவனைத் துரத்தி விட்டால் நாம் அனைவரும் தப்பலாம்” என்று சொன்னான்.

அனைவரும் இதை ஆமோதிக்கவே, இந்தக் கருத்து ஏற்கப்பட்டு அனைவரும் தொப்பியைத் தூக்கி வெளியே எறிந்தனர்.

அதில் ஒருவனுடைய தொப்பி தாக்கப்பட்டுத் தீக்கிரையாகியது. உடனே எல்லோரும் சேர்ந்து அவனை வெளியேற்றினர்.

அவன் தயங்கிய வண்ணமே வெளியே வந்து நடக்கலானான். அவன் சற்று தூரம் சென்றதும் அந்த பாழடைந்த வீடு இடிந்து விழுந்தது. அந்த ஒருவன் நீங்கலாக மற்ற அனைவரும் இறந்தனர்.

**அறிவே ஒருவனின் உண்மையான பலம்**


# தெரிந்து கொள்வோம்

## ஞாயிற்றுக்கிழமையும் கடன்திருநாளும்

*இறைவார்த்தை (மாற்கு 16:1-8)*

- ஏன் ஞாயிற்றுக்கிழமைகளில் முழுத்திருப்பலி காணவேண்டும்?
  நமதாண்டவராகிய இயேசு கிறிஸ்து நம்மை பாவத்திலிருந்து மீட்டெடுத்தது வாரத்தின் முதல் நாளாகிய ஞாயிற்றுக்கிழமையில்தான்.
- கடன் திருநாட்கள் என்றால் என்ன?
  நம்முடைய திருமறையின் விசுவாசத்தை ஒரே குடும்பமாக கூடி உலகிற்கு பிரதிபலிக்கக்கூடிய நாட்களையே நாம் கடன் திருநாட்கள் என்கிறோம்.
- கடன் திருநாட்கள் எவை?
  1. கிறிஸ்மஸ் (மார்கழி 25)
  2. மரியாளின் விண்ணேற்பு (ஆவணி 15)
  3. உயிர்ப்புப் பெருவிழா
  4. இயேசுவின் விண்ணேற்பு
- கடன் திருநாளில் திருச்சபை நம்மிடம் என்ன எதிர்பார்க்கிறது?
  கடன் திருநாட்களில் முழு பூசையில் பங்கெற்றல் தியானத்திலும், செபத்திலும், பக்தியிலும் குடும்பமாகவோ, தனியாகவோ செலவிட திருச்சபை அழைப்புவிடுக்கிறது.

## வர்ணம் தீட்டுக.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறைவாக்கினர் எரேமியா

## இறைவாக்கினர் எரேமியாவின் வரலாற்றுப் பின்னணி

எரேமியா என்ற பெயருக்குக் கடவுள் நிலைநிறுத்துவார், அல்லது கடவுள் அடித்தளமிடுவார் என்பது பொருள். எரேமியா இலிக்கியாவின் மகன். கடவுள் அவருக்கு தாம் அவரிடம் கூறிய அனைத்தையும் ஏட்டுச் சுருளில் எழுதிவைக்க வேண்டும் எனக் கட்டளையிட்டார் (எரே. 36:1-3). எரேமியா தனக்கு உதவி செய்வதற்காக நேரியாவின் மகனான பாருக்கை நியமித்துக் கொண்டு அவர் கூறக்கூற அதை பாருக்கு எழுதிவைத்தார் (எரே. 36:4). அந்த சுருளோ யோயாக்கிம் அரசனின் முன்பாகப் படித்துக் காட்டப்பட்டது. அதை அந்த அரசன் கத்தியால் அறுத்து நெருப்புக் கனலில் போட்டு அழித்தான் (36:23). ஆயினும் அந்த ஏட்டுச் சுருள் மீண்டும் நேரியாவின் மகனான பாருக்கின் வாயிலாக மீண்டும் எழுதப்பட்டது (36:32). ஏனைய இறைவாக்கினருள் எரேமியாதான் அழுகையின் இறைவாக்கினர், தோல்வியின் இறைவாக்கினர் என அழைக்கப்படுகிறார். ஏனெனில் அவர் இறைவாக்குரைக்கும்போது இருந்த அரசியல், சமுதாய சூழலால் அவர் எப்போதும் மக்கள் மீது வரவிருக்கும் அழிவுகளை, தண்டனைகளைக் குறித்தே இறைவாக்குரைக்கும் நிலைமைக்குத் தள்ளப்பட்டார்.

## இறைவாக்கினர் எரேமியாவின் வாழ்க்கை

எரேமியாவின் வாழ்க்கை, மறைப்பணி ஆகியவற்றை கீழ்க்காணும் மூன்று காலக்கட்டங்கள் வாயிலாக அறிந்து கொள்ளலாம்.

### அ. அரசன் யோசியாவின் காலத்தில் இறைவாக்கினரின் பணி:

எரேமியா தனது 20ஆம் வயதில், யோசியா அரசன் பதவியேற்ற 13ஆம் ஆண்டில் அதாவது கி.மு 626ல் தனது பணியைத் தொடங்கினார். எரேமியா குருக்கள் குடும்பப் பின்னணிக் கொண்டவர். எருசலேமுக்கு வடகிழக்கே மூன்று கல் கொலைவிலிருந்த அனதோத்தைச் சார்ந்தவர். அவர் தனது உறவினரிடமிருந்து எவ்வித பொருளாதார சிரமமும் இன்றி நிலம் வாங்கியதை வைத்துப் பார்க்கும்போது எரேமியா பணவசதி மிக்கவராக இருந்திருக்கக் கூடும் எனக் கருதப்படுகிறது. யோசியா அரசருடன் நல்லுறவுடன் இருந்ததால் அந்த அரசன் இறைவாக்கினர் எரேமியாவுக்கு அனைத்து பாதுகாப்பையும் தந்து உதவினார்.

### ஆ. யோசியா அரசரின் மரணத்திற்குப்பின் இறைவாக்கினர் எரேமியாவின் மறைப்பணி:

அரசர் யோசியாவின் மரணத்திற்குப்பின் யூதா அரசில் இருந்த சிலைவழிப்பாட்டுக் குழுவினரால் கைது செய்யப்பட்டார். ஆயினும் அவர் யூதா சிலை வழிபாட்டிற்கும் அரசிற்கும் எதிராக அளித்த செய்தியை (அதி. 7-10) ஏற்றுக்கொண்ட கடவுளுக்கு பயந்த முதியோராலும், சில இளைஞர்களாலும் அவர் காப்பாற்றப்பட்டார். ஒரு கட்டத்தில் எரேமியா ஆலயத்திற்குள் சென்று போதிப்பதற்கும், பணி செய்வதற்கும் அனுமதி மறுக்கப்பட்டது. அச்சமயங்களில் அவர் தனது உதவியாளர் பாருக்கிற்கு ஆலயத்தில் உரைக்க வேண்டிய இறைவாக்குகளைக் கற்பித்து அவரை தனக்கு பதிலாக அனுப்பிவைத்தார். யோயாக்கிம் அரசன் எருசலேமின் இறைவாக்குகள் அனைத்தையும் அழித்துப்போட்டான்.

செதேக்கியா அரசன் எரேமியா யூத மக்களை பாபிலோனியரிடம் சரணடையத் தூண்டியதால் அவரை தேசதுரோகியாக அறிவித்து அவரை கைது செய்ய உத்தரவிட்டான். ஆயினும் இறைவாக்கினர் எரேமியா ஏற்கனவே கி.மு 598ல் நிகழ்ந்த கல்தேயரின் படையெடுப்பைக் குறித்து உரைத்த இறைவாக்கு அப்படியே நிறைவேறியதை நினைவுகூர்ந்து, அதனால் பயந்தவனாக, எரேமியாவைக் காப்பாற்றி, எருசலேமின் அழிவுக்காலம் வரை தன் பொறுப்பில் பாதுகாப்பான மறைவிடத்தில் தங்க வைத்தான்.






செல்லப்பட்டார். எகிப்தில் சில காலம் வாழ்ந்தபின் அங்கேயே இறந்தார்.

### ஈ. கி.மு 627 முதல் எருசலேம் அழிக்கப்பட்ட ஆண்டான கி.மு 586 வரையில் யூதா அரசில் நிலவிய சூழல்:

எரேமியாவுக்குக் கடவுள் கி.மு 605ல் யோசியாவின் மகனாகிய யோயாக்கிம் ஆட்சியின் நான்காம் ஆண்டில் தாம் பேசிய அனைத்தையும் எழுதுமாறுக் கட்டளையிட்டார் (எரே. 36:1-3). எரேமியா கி.மு 627-626ல், யோசியா அரசரின் 22ஆம் வயதில் (626) அழைக்கப்பட்டார். கி.மு 626ல் அசீரியாவை இறுதியாக ஆட்சிப்புரிந்த பேரரசன் அசூர்பனிபாலின் இறப்பிற்குப்பின் பாபிலோனிய அரசு தனிப்பெரும் அரசாக தன்னை நிலைநிறுத்திக் கொண்டது. அந்த அரசே பின்னர் யூதா அரசை மேற்கொண்டு யூதா அரசின் மக்களை வீழ்த்தவிருந்த அரசு.

அரசர் யோசியாவின் இறப்பிற்குப்பின் அவரது மகன்கள் அவர் கொண்டு வந்த சமய சீர்திருத்தத்தை முடிவுக்குக் கொண்டு வந்தனர். மேலும் பாபிலோனுக்கு எதிரான சதிகளில் ஈடுபட்டனர். இறுதியில் அவர்கள் கி.மு 586ல் எருசலேமின் அழிவின்போது தோற்கடிக்கப்பட்டனர். அடுத்த நாடுகடத்தல் கி.மு 597ல் யோக்கிம் நடத்திய கலகத்தின் போது நிகழ்ந்தது. அச்சமயத்தில் நாடுகடத்தப்பட்டோருள் யோயாக்கிமின் மகன் யோக்கின், இறைவாக்கினர் எசேக்கியேல் ஆகியோரும் அடங்குவர். மூன்றாம் நாடுகடத்தல் கி.மு 586ல் செதோக்கியா செய்த கலகத்தின்போது, எருசலேமின் வீழ்ச்சியுடன் நடைபெற்றது. இறைவாக்கினர் எரேமியா கி.மு 597-586 வரை கடவுளின் சினம், அதனால் மக்கள் மீது வரவிருக்கும் தண்டனைகள் குறித்த பல்வேறு இறைவாக்குகளை உரைத்து வந்தார். ஆயினும் மக்கள் அவரது இறைவாக்குகளை நம்பாமலும், கடவுளின் திட்டத்திற்குத் தங்களை ஒப்புக்கொடுக்க மறுத்தும் வாழ்ந்து வந்தனர்.

### இ. எருசலேம் அழிவிற்குப்பின் இறைவாக்கினரின் பணி:

பாபிலோனிய மக்கள் யூத இனத்தை தங்களுக்கு அடிப்பணியத் தூண்டியதற்காக இறைவாக்கினர் எரேமியாவுக்கு உயரியதொரு இடத்தை அவருக்கு அளிக்க விரும்பினாலும் அவர் பாபிலோனுக்குச் செல்ல மறுத்துவிட்டு பாலஸ்தீனாவில் தங்கிவிட்ட தம் இன மக்களிடையே பணி செய்வதையே விரும்பினார். கெதலியா கொலையுண்டபின் நெபுகத்நேசரின் பழிவாங்கலுக்கு அஞ்சி ஓடிஒளிய விரும்பிய எஞ்சியிருந்த யூத மக்களால் எரேமியா எகிப்துக்கு அழைத்துச் செல்லப்பட்டார்.

தொடர்ச்சி அடுத்த இதழில்...




## கனவு காணுங்கள்... கனவு காணுங்கள்...!

ஆண்ட்ருவின் காதுகளில் இறந்த பின்னும் ஓதிக் கொண்டிருக்கிறார் அப்துல் கலாம். கனவில் வந்துகூட!

நண்பன் ரகு தொழில்துறையில் நிறைய சம்பாதிக்கிறான். பெரும் புள்ளிகளுடன் நட்பு வைத்திருக்கிறான். வாழ்க்கையில் மேலும் உயர அவனுக்கு ஆசையிருக்கிறது. இன்னும் உழைக்கிறான், ஆனால், கனவு காண்பதில்லை. ஆண்ட்ருவும், ரகுவும் நண்பர்கள் தான். எப்போதாவது இருவரும் சந்திப்பதுண்டு. தன்னைப்போல நண்பனும் நல்ல நிலைக்கு வரவேண்டும் என்று ஆண்ட்ருவுக்கு அவன் சொன்ன ஆலோசனைகளுக்கு மதிப்பில்லாமல் போய்விட்டது.

"வாழ்ந்தால் நாலு பேர் அறிய வாழவேண்டும். எவரைக் கேட்டாலும் என் பெயரைச் சொல்ல வேண்டும்" என்பான் ஆண்ட்ரு.

"அதற்காக எதாவது முயற்சியெடுக்கிறாயா?" என்று ரகு கேட்டான்.

"எடுக்கிறேன். என் முகமும், குரலும் எல்லோருக்கும் தெரிந்திருக்க வேண்டும். டிவியில் முகமும், சி.டிக்களில் குரலும் பிரபலமாக வேண்டும்".

"உருப்பட்டாப்போலதான்! உனக்கு என்னடா தகுதி இருக்கு?"

"நண்பா! இந்த உலகமே வேறு. சாப்பிட வழியில்லாமல் தண்ணீரைக் குடித்து, பிளாட்பாரங்களில் தூங்கி, இன்றைக்கு டைரக்டர்களாக, நடிகர்களாக, முதல்வர்களாக பணமும், பெயரும் சம்பாதித்தவர்கள் பெயரைப் பட்டியலிடட்டுமா?

தன் நண்பன் இப்படி ஒரு மாறுபட்ட கனவுலகில் மிதப்பதை ரகு இப்போதுதான் அறிந்தான்.

"உன் முயற்சி வாழ்க. உன் கனவு பலிக்கட்டும். நீ பிரபலமானால் எனக்கும் பெருமைதான். கனவு காண்பதோடு நிறுத்திவிடாதே. உடனே களத்தில் இறங்கு" என்று வாழ்த்தி விடைபெற்றான் ரகு.

ஆண்ட்ரு ஆலய உதவிப் பங்குத் தந்தையைச் சந்தித்து ஆலோசனை கேட்டான்.

"பாடற்குழுவில் சேர்ந்து பாடவேண்டும். ஆலயம் வெளியிடுகிற சி.டி.யில் பாட வேண்டும். சி.டி.யில் குரலும், சி.டி.கவரில் புகைப்படமும் வரவேண்டும். இது என் கனவு".

"இனி பாடகர் குழுவை கலைத்து விடுவதாக இருக்கிறோம். சி.டி.வெளியிடுவதாகவும் இல்லை. காலத்திற்கேற்ப மாற்றங்கள் செய்ய வேண்டாமா? நல்ல சீடிக்களை வாங்கி ஆலயத்தில் பாட வைப்போம். ஆசைப்படுகிறவர்கள் இணைந்து பாடலாம்" என்றார் உதவிக் குரு. ஆண்ட்ருவின் இந்த முயற்சி தோல்வி!

இரண்டாவதாக, கிறிஸ்தவத் தொலைக்காட்சி நிலையங்களுக்குப் போனான். வாசகம் வாசிப்பதில், நிகழ்ச்சிகளில் பங்கேற்று திறமையை, முகத்தைக் காட்டலாம். அதைப் பதிவு செய்து திரையுலகத்தில் உள்ளவர்களுக்குக் காட்டி, சின்னத் திரையில், அப்புறம் சினிமாவில்... அப்புறம் அரசியலில்...!!!

"நம்ம ஆட்களே நம் டி.வி.யைப் பார்க்கிறதில்லை. விளம்பரங்கள் கிடைப்பதில்லை. நன்கொடைகளும் குறைந்துவிட்டன. ஸ்டுடியோவை வாடகைக்கு விடலாமா? நேர்ஸரி ஸ்கூல் நடத்தலாமா? என்று யோசிக்கிறோம்" என்றார்கள் ஒரு கிறிஸ்தவத் தொலைக்காட்சியில்!

தன் முயற்சியில் மனம் தளரவில்லை 'விக்கிரமாதித்தன்' ஆண்ட்ரூ. அன்று காலை பத்திரிகையின் தலைப்புச் செய்தி. தேர்வை எதிர்த்து மாணவர்கள் போராட்டம்! ஆண்ட்ரூவுக்கு மின்னலாகப் பளிச்சிட்டது ஒரு யோசனை. கனவு கண்டு கொண்டிருந்தான். அவன் கனவில் நாளை போராட்டத்தில் கலந்து கொள்கிறேன். டி.வி.காரர்கள் வருவார்கள். முண்டியடித்து முன்னேறி டி.வி. காமெராவில் முகம் காட்ட வேண்டும். நாளை மாலை அனைத்துத் தொலைக்காட்சிகளிலும், மாலைப் பத்திரிக்கையிலும் என் முகம், என் சிம்மக் குரல், என் வீர உரை...! ஆகா புகழ் ஏணியின் முதல் படியில் காலை வச்சிட்டாண்டா இந்த ஆண்ட்ரு!

தொலைக்காட்சிக் கேமெராவை சுமக்கும் வேனின் மேல் பாய்ந்து ஏறிய ஆண்ட்ரூ, தொலைக்காட்சி மைக்கைப் பிடுங்கி காமெரா முன் பேசிக்கொண்டிருந்தபோது உலக்கையால் முதுகில் அடித்த மாதிரி இருந்தது. அது அடி அல்ல.. இடி.. பீரங்கித் தாக்குதல்!

அடிபட்ட சிங்கம் சிலிப் ஆகி, வேன் உச்சியில் இருந்து கீழே விழுந்தது. காவலர்கள் அடித்தார்கள், மூர்ச்சை ஆகும்வரை.

கனவுக் கண்டு விழித்தபோது அரசு மருத்துவமனையில் பழங்கள், சத்து மாவுப் பொட்டலங்களுடன் சந்திக்க வந்திருந்தான் ரகு. கண்களை மூடிப் படுத்திருந்தான் ஆண்ட்ரூ.

ஆறுதலாகக் கைகளைப் பற்றினான் ரகு. "கையைப்பிடிக்காதே, மூட்டுகளை நொருக்கிவிட்டார்கள். குணமானாலும் கை வளைந்து தானிருக்குமாம். டாக்டர் சொன்னார்."

"கம்ப்யூட்டரில் வேலை செய்ய முடியுமானு டாக்டரிடம் கேள்.. என் கம்பெனியில் வேலை போட்டுத் தருகிறேன். இனி கனவு கண்டு பிரயோசனமில்லை. ஒருவேளை கனவு நனவாகி சினிமா கதாநாயன் ஆகிவிட்டாலும் வில்லன்களை அடித்து வீழ்த்தவும், காதலியைக் கட்டிப்பிடித்து டான்ஸ் ஆடவும் இந்த வளைந்த கை சரிப்படாது"

கனவு நாயகனால் வடியும் கண்ணீரைத் துடைக்கவும் முடியவில்லையே...!

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org





# வாழ்வு மாண்பு குறித்த மதங்களின் கண்ணோட்டங்கள்

ஜோர்டன் நாட்டில் பல்சமய ஆய்வுகளுக்கென உருவாக்கப்பட்டுள்ள அரசு நிறுவனத்திற்கும், பல்சமய கலந்துரையாடல் திருப்பீட அவைக்கும் இடையே ஜோர்டனின் அம்மானில் அண்மையில் இடம்பெற்ற ஐந்தாவது கூட்டம் குறித்த விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன.

"மதங்களும் வாழ்வின் மாண்பும்: கிறிஸ்தவ மற்றும் இஸ்லாமிய கண்ணோட்டங்கள்" என்ற தலைப்பில் இடம்பெற்ற இரண்டு நாள் கலந்துரையாடலில், முதலில் இவ்விரு கண்ணோட்டங்களில் நிலவும் சவால்கள் குறித்தும், இரண்டாவது, கலந்துரையாடல் வழங்கும் வாய்ப்புகள் குறித்தும், மூன்றாவது, "அதன் ஏனைய கோணங்கள்" என்பது குறித்தும் விவாதிக்கப்பட்டன.

இறைவனின் கொடையான வாழ்வு என்பது, அதன் தொடக்கம் முதல், இயற்கையான முடிவு வரை பாதுகாக்கப்பட வேண்டும், ஒவ்வொரு மனிதனின் மாண்பும் உரிமைகளும் மதிக்கப்பட வேண்டும், ஏனெனில் உரிமைகளும் மாண்பும் மதிக்கப்படுவது நாட்டின் வளர்ச்சிக்கு உதவுகிறது எனவும் பரிந்துரைகள் இக்கூட்டத்தில் முன்வைக்கப்பட்டன.



மேலும், குடியேற்றதாரர், புலம்பெயர்ந்தோர் ஆகியோர் மதிக்கப்படுதல், இளைய தலைமுறைக்கு நல்ல கல்வி வழங்குதல் போன்ற பரிந்துரைகளும் முன்வைக்கப்பட்டு, இருதரப்பினராலும் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஒவ்வொரு தரப்பிலிருந்தும், 12 பிரதிநிதிகளும் மூன்று பார்வையாளர்களும் இக்கூட்டத்தில் பங்குபெற்றனர்.

# முன்னாள் திருத்தந்தையின் "விடுதலைக்கு விடுதலையளித்தல்"



விசுவாசத்திற்கும் அரசியலுக்கும் இடையே நிலவும் தொடர்பு குறித்து ஆய்வுசெய்வது, முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் விருப்பமான விடயங்களுள் ஒன்று என, திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்களின் அண்மை நூல் ஒன்றுக்கு எழுதியுள்ள முன்னுரையில் குறிப்பிட்டுள்ளார், திருத்தந்தை.

"விடுதலைக்கு விடுதலையளித்தல். மூவாயிரமாம் இக்காலக்கட்டத்தில் விசுவாசமும் அரசியலும்" என்ற தலைப்பில் முன்னாள் திருத்தந்தை எழுதியுள்ள அண்மை நூலுக்கு முன்னுரை எழுதியுள்ள திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தன் இளவயதில் நாத்ஸி ஆட்சியாளர்களின் கீழ் வாழ்ந்த திருத்தந்தை பெனடிக்ட் அவர்கள், அரசுக்கு எவ்வளவு தூரம் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும், இறைவனுக்கு எவ்வளவு தூரம் கீழ்ப்படிய வேண்டும் என்பதையும் தெளிவாகத் தெரிந்திருந்தார் என்று அதில் குறிப்பிட்டுள்ளார்.

பெரிய அறிவாளியாகவும், மனிதாபிமானமிக்கவராகவும் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் எப்போதும் செயல்பட்டார் என கூறும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஏழைகளுக்கும், பணக்காரர்களுக்கும், ஏழை நாடுகளுக்கும் பணக்கார நாடுகளுக்கும் இடையே காணப்படும் இடைவெளி குறித்து முன்னாள் திருத்தந்தை தன் எழுத்துக்களில் பலமுறை சுட்டிக்காட்டியுள்ளார் என்பதையும் குறிப்பிட்டுள்ளார்.

சுயநலப்போக்குகள் இன்றியும், தவறான கொள்கைகளால் மனசான்று ஆக்ரமிக்கப்படுவதை தவிர்த்தும், வாழவேண்டியதன் தேவையை முன்னாள் திருத்தந்தை 16ம் பெனடிக்ட் அவர்கள் வலியுறுத்தி வருவதை மீண்டும் காணமுடிகிறது என தன் முன்னுரையில் குறிப்பிடும் திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முன்னாள் திருத்தந்தையின் எழுத்துக்களில், மனித உரிமைகள் மதிக்கப்படுவதன் முக்கியத்துவம் குறித்தும், வருங்கால சமுதாயம் குடும்பங்கள் வழியே கடந்து செல்கின்றன என்பது குறித்தும் வலியுறுத்தியுள்ளதை சுட்டிக்காட்டியுள்ளார்.

# நல்ல ஆயர் தன் மந்தை மீது எப்போதும் கவனமுடன் இருப்பார்



ஆயர்கள், தங்களின் மறைமாவட்ட மக்களின் வாழ்வில் ஈடுபட்டு, அவர்களுக்கு நெருக்கமாக இருந்து, அம்மக்களை ஓநாய்களிடமிருந்து பாதுகாப்பதற்கு எப்போதும் விழிப்பாய் இருக்குமாறு, 5.5.2018 காலையில் மறையுரையாற்றினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

சாந்தா மார்த்தா இல்லச் சிற்றாலயத்தில் திருப்பலி நிறைவேற்றிய திருத்தந்தை, அந்தியோக்கிய கிறிஸ்தவ சமூகத்தில் ஏற்பட்ட இன்னலான தருணம் குறித்து விளக்கும், இந்நாளைய திருப்பலியின் முதல் வாசகத்தை மையப்படுத்தி மறையுரைச் சிந்தனைகளை வழங்கினார்.

தன் மறைமாவட்ட மக்களின் விசுவாசத்தைக் காத்து, அதில் அவர்களை உறுதிப்படுத்தும் பொறுப்பைக் கொண்டுள்ள ஆயர்களின் பணி பற்றி விளக்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், திருஅவையில், ஆடுகளின் பாதுகாவலர்கள் குறையாமல் இருக்க வேண்டும் என்று கூறினார்.

"எங்களுள் சிலர் அங்கு வந்து தங்களுடைய பேச்சால், உங்களது மனதைக் குழப்பி கலக்கமுறச் செய்தனர் எனக் கேள்விப்பட்டோம்" என்று, திருத்தூதர்கள் கூறியதை முதல் வாசகத்தில் வாசித்தோம் என்றுரைத்த திருத்தந்தை, தங்களை உண்மையான கிறிஸ்தவ இறையியலாளர் என நம்புவோர், இறைமக்களைக் குழப்பி விடுகின்றனர் என்று கூறினார்.

ஆயர்கள் மிகவும் கவனமுடன் இருந்து, ஓநாய்களிடமிருந்து தங்களின் மந்தைகளைக் காக்க வேண்டும் என்றும், ஓர் உண்மையான ஆயர், தன் ஒவ்வோர் ஆட்டின் பெயரையும் அறிந்துள்ளார் என்றும், இவ்வாறு இயேசு ஆயராக இருந்தார் என்றும், மறையுரையில் கூறினார் திருத்தந்தை.

தங்கள் ஆடுகளைப் பாதுகாக்கும் நல்ல மேய்ப்பர்களை ஆண்டவர் எப்போதும் நமக்கு அருளுமாறு செபிப்போம், நல்ல ஆயர்கள் இன்றி நாம் முன்னோக்கிச் செல்ல இயலாது என்று கூறி, மறையுரையை நிறைவு செய்தார்.

# ஒன்றிப்பை நோக்கிய பயணத்தில் மனம் தளராதிருப்போம்

கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே ஒன்றிப்பு என்பது, ஒரேமாதிரியான தன்மையுடன் விளங்குவதல்ல, மாறாக, தூய ஆவியாரில், பன்மைத்தன்மையில் ஒப்புரவுடன் இருத்தல் ஆகும் என, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபை தலைவர் ஒருவரிடம் கூறினார்.

செக் மற்றும் சுலோவாக்கிய பகுதியின், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபை தலைவரான, பிரேசோவ் (Presov) பேராயர் இராட்டிஸ்லாவ் (Rastislav) அவர்களை, 11.05.2018 காலையில் வத்திக்கானில் சந்தித்து உரையாற்றிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆகிய இருவரின் நற்செய்திப் பணி பற்றி எடுத்துரைத்தார்.

இவ்விரு புனிதர்களும், பல்வேறு கலாச்சாரங்கள் மற்றும் மரபுகளைக் கொண்ட கிறிஸ்தவ சமூகங்களுக்கிடையே பிரிவினைகள் ஏற்படாமல் இருப்பதில் வெற்றி கண்டவர்கள் என்றும், இவ்வாறு இவ்விரு புனிதர்களும், கிறிஸ்தவ ஒன்றிப்பின் உண்மையான முன்னோடிகளாக உள்ளனர் என்றும் கூறினார்.

ஆர்த்தடாக்ஸ் பேராயர் இராட்டிஸ்லாவ் அவர்களின் வருகை, இரு கிறிஸ்தவ சபைகளுக்கு இடையே, ஆன்மீகப் பிணைப்பையும், நட்பையும் வளர்க்கும் என்றும், புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆகியோரின் பரிந்துரை, நாம் முழு ஒன்றிப்பை நோக்கி நடக்க உதவும் என்றும் கூறினார், திருத்தந்தை.

கத்தோலிக்கருக்கும், ஆர்த்தடாக்ஸ் சபைகளுக்கும் இடையே அமைந்துள்ள, பன்னாட்டு இறையியல் உரையாடல் குழுவில், செக் மற்றும் சுலோவாக்கிய பகுதியின், ஆர்த்தடாக்ஸ் கிறிஸ்தவ சபையும் இணைந்துள்ளதற்கு நன்றி தெரிவித்தார்.



உடன்பிறப்புக்களான புனிதர்கள் சிரில், மெத்தோடியஸ் ஆகிய இருவரும், ஸ்லாவ் இனத்தவரின் திருத்தூதர்கள் என்றழைக்கப்படுகின்றனர். இவ்விருவரும், பைசான்டைன் வழிபாட்டுமுறை கிறிஸ்தவ இறையியலாளர்கள் மற்றும் மறைப்பணியாளர்கள்.

# உயிரை அன்புகூர்ந்து பாதுகாக்க முன்வருவதே உண்மை அன்பு



நம் ஒவ்வொருவரின் அன்பும், தனக்கேயுரிய சுவையையும் துணிச்சலையும் இழக்காதிருக்க வேண்டுமெனில், நாம் இயேசுவின் அன்போடு நிலைத்திருக்க வேண்டியது அவசியம் என உரைத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

உரோம் நகரின் தூய பேதுரு பேராலய வளாகத்தில் கூடியிருந்த விசுவாசிகளுக்கு அல்லேலூயா வாழ்த்தொலி உரையை, திருப்பலி வாசகத்தின் அடிப்படையில் வழங்கிய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், தந்தையாம் இறைவனிலிருந்து நமக்கு வரும் அன்பில் நாம் என்றென்றும் நிலைத்திருக்க வேண்டுமெனில், நம் சுயநலப்போக்குகளையும், பாவங்களையும், விட்டு விலகவேண்டும் என அழைப்பு விடுத்தார்.

அன்பு என்பது, நம் ஒவ்வொரு நாள் வாழ்வு, நடவடிக்கைகள் மற்றும் மனப்போக்குகள் வழியாக பெறப்படுகிறது, இல்லையெனில், அது வெறும் மாயையாகிவிடும் என உரைத்த திருத்தந்தை, "நான் உங்களை அன்புகூர்ந்தது போல், நீங்கள் ஒருவரையொருவர் அன்புகூர-வேண்டும்" என்ற இயேசுவின் கட்டளைப் பின்பற்றப்பட வேண்டும் என்றார்.

நம் பயணத்தில், நம்மோடு உடன் வர விரும்பும் அனைவரையும் நாம் அன்புகூர்ந்து, நம் அன்பை அவர்களோடு பகிர்ந்து, ...

15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




தொகுப்பு : ஓய்வு பெற்ற பேராயர்
அதிமேதகு ஒஸ்வல்ட் கோமிஸ் ஆண்டகை
கொழும்பு உயர் மறைமாவட்டம்



கத்தோலிக்க குடும்ப மறைக்கல்வி
Catholic Family Catechism

**96. கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு ஒன்றாயிருக்கிறது?**

கத்தோலிக்க திருச்சபை ஒன்றாயிருக்கிறது. ஏனென்றால் அதன் அங்கத்தவர்கள் கிறிஸ்துவின் சித்தப்படி, ஒரே விசுவாசம், ஒரே பலியில் பங்கு கொள்பவர்கள். ஒரே அருட்சாதனங்களில் பங்கு கொள்பவர்கள் இன்னும் ஒரு தலைவரான திருத்தந்தையின் தலைமையின் கீழ் ஒன்றிணைந்து இருக்கிறார்கள்.

“எல்லாரும் ஒன்றாய் இருப்பார்களாக! தந்தையே, நீர் என்னுள்ளும் நான் உம்முள்ளும் இருப்பதுபோல் அவர்களும் ஒன்றாய் இருப்பார்களாக! இதனால் நீரே என்னை அனுப்பினீர் என்று உலகம் நம்பும்” (யோவா 17:21)

“நீங்கள் ஒரே எதிர்நோக்கு கொண்டு வாழ அழைக்கப்பட்டிருக்கிறீர்கள். ஒரே எதிர்நோக்கு இருப்பது போல, உடலும் ஒன்றே; தூய ஆவியும் ஒன்றே. அவ்வாறே ஆண்டவர் ஒருவரே; நாம் கொண்டுள்ள நம்பிக்கை ஒன்றே; திருமுழுக்கு ஒன்றே. எல்லாருக்கும் கடவுளும் தந்தையுமானவர் ஒருவரே; அவர் எல்லாருக்கும் மேலானவர் எல்லார் மூலமாகவும் செயலாற்றுபவர் எல்லாருக்குள்ளும் இருப்பவர். (எபேசியர் 4:4-6)

**97. கத்தோலிக்க திருச்சபை எவ்வாறு பரிசுத்தமாயிருக்கிறது?**

கத்தோலிக்க திருச்சபை பரிசுத்தமாய் இருக்கின்றது. ஏனெனில் தூயவரான இயேசுக்கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டு, கிறிஸ்துவின் தூய கோட்பாடுகளை கற்பிக்கின்றது. மனிதரை கிறிஸ்துவின் படிப்பினையின் படி தூய வாழ்வுக்கு அழைத்துச் செல்கிறது.

கத்தோலிக்க திருச்சபையானது, அதனது ஆரம்பம், நோக்கம், வழிகள், பணிகளில் பரிசுத்தமானது. இவை மூலமாக அவளது அங்கத்தவர்கள் பரிசுத்தமாக்கப்படுகின்றார்கள். சில அங்கத்தவர்கள் அதன் குறிக்கோள்களிலிருந்து விலகி, பாவ வாழ்க்கையில் வாழ்கிறார்கள் என்பது உண்மை. இந்த மக்கள் திருச்சபையின் புனித படிப்பினைகளைப் பின்பற்றாதவர்கள்.

திருமணமான ஆண்களே, கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தியது போல நீங்களும் உங்கள் மனைவியரிடம் அன்பு செலுத்துங்கள். ஏனெனில் கிறிஸ்து திருச்சபைமீது அன்பு செலுத்தி, அதற்காகத் தம்மையே ஒப்புவித்தார். வார்த்தையாலும் நீரினாலும் அதனைக் கழுவித் தூயதாக்குமாறு இவ்வாறு செய்தார். (எபே 5:25-26)

நீங்கள் தூயோராவதே கடவுளுடைய திருவுளம் பரத்தைமையை நீங்கள் தவிர்க்க வேண்டும். (1தெச 4:3)

**98. திருச்சபை எவ்வாறு கத்தோலிக்கமாய் அல்லது பொதுவாயுள்ளது?**

கத்தோலிக்க திருச்சபை கத்தோலிக்கமாய் அல்லது பொதுவாயுள்ளது. ஏனெனில் அது எல்லா மக்களுக்கும், முழு உலகுக்கும், எல்லா நேரத்திலும் முன்கூட்டியே ஏற்பாடு செய்யப்பட்டது. கத்தோலிக்க திருச்சபையானது, தனி ஒரு இனத்திற்கோ, நாட்டிற்கோ, தனிச் சொத்துரிமை கொண்டதல்ல, சாதி, இன அல்லது மனித வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டது. அது அனைவரின் பொது ஈடேற்றத்திற்காகவும் பணி ஆற்றுகின்றது.

தம் இனத்திற்காக மட்டுமின்றி, சிதறி வாழ்ந்த கடவுளின் பிள்ளைகளை ஒன்றாய்ச் சேர்க்கும் நோக்குடன் அவர்களுக்காகவும் இறக்கப்போகிறார் என்று இறைவாக்காகச் சொன்னார். (யோவா 11:52)

**99. திருச்சபை எவ்வாறு அப்போஸ்தலிக்கமாயுள்ளது?**

கத்தோலிக்க திருச்சபை அப்போஸ்தலிக்கமாயிருக்கின்றது. ஏனெனில் அது தனது படிப்பினைகள், பணி, ஆளுகை என்பவற்றை அப்போஸ்தலர்களைத் தொடர்ந்து வருகிறது. இயேசுநாதர் தமது திருச்சபை அப்போஸ்தலர் மேல் கட்டியெழுப்பியுள்ளார். இயேசுக்கிறிஸ்துவின் படிப்பினைகள் தவறின்றி கத்தோலிக்க திருச்சபையால் பாதுகாக்கப்பட்டு வருகிறது. அப்படிப்பினைகள் எமக்கு கிறிஸ்துநாதரால் நியமிக்கப்பட்ட அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்களான ஆயர்கள் வழியாக எமக்கு வெளிப்படுத்தப்படுகின்றன.

நற்செய்தி அல்லது நல்ல செய்தியை உலகுக்கு அறிவிக்கும் பணி கத்தோலிக்க திருச்சபைக்கே உரித்தானது. ஏனெனில் அதுவே அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்.

“எனவே நீங்கள் போய் எல்லா மக்களினத்தாரையும் சீடராக்குங்கள் தந்தை, மகன், தூய ஆவியார் பெயரால் திருமுழுக்குக் கொடுங்கள். நான் உங்களுக்குக் கட்டளையிட்ட யாவையும் அவர்களும் கடைப்பிடிக்கும்படி கற்பியுங்கள். இதோ! உலக முடிவுவரை எந்நாளும் நான் உங்களுடன் இருக்கிறேன்” என்று கூறினார். (மத் 28:19-20)

எனவே இனி நீங்கள் அன்னியர் அல்ல, வேற்று நாட்டினரும் அல்ல. இறைமக்கள் சமுதாயத்தின் உடன் குடிமக்கள் கடவுளின் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். திருத்தூதர்கள், இறைவாக்கினர்கள் ஆகியோர்களை அடித்தளமாகவும், கிறிஸ்து இயேசுவையே மூலைக்கல்லாகவும் கொண்டு அமைக்கப்பட்ட கட்டடமாய் இருக்கிறீர்கள். கிறிஸ்துவின் உறவில் கட்டடம் முழுவதும் இசைவாகப் பொருந்தி, ஆண்டவருக்கென்று தூய கோவிலாக வளர்ச்சி பெறுகிறது. (எபே 2:19-21)

**100. கத்தோலிக்க திருச்சபையே இயேசுக்கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்ட உண்மையான திருச்சபை என்பதற்கு மேலான ஆதாரம் எது எனக் காட்டுக?**

கத்தோலிக்க திருச்சபையானது கிறிஸ்துவினால் ஏற்படுத்தப்பட்டது என்பதற்கு மேலான அத்தாட்சி, திருச்சபையின் தலைவர்கள் பேதுருவைத் தொடர்ந்து கண்காணக்கூடிய இயேசுவினால் நியமிக்கப்பட்டவர்கள் என்பதே.

“சீமோன் யோனாவின் மகனே, நான் உனக்குச் சொல்லுகிறேன் நீ பாறை (பேதுரு) இப்பாறையின் மேல் என் திருச்சபையைக் கட்டுவேன்” (மத் 16:18) இதுவே இயேசுநாதர் தெளிவாக பேதுருவை தமது திருச்சபைக்கு தலைவராக நியமித்தார் என்று சுட்டிக்காட்டுகிறது. பேதுருவே அப்போஸ்தலர்களின் தலைவராக உரோம் நகரின் முதல் ஆயராக செயற்பட்டார்.

பேதுருவைத் தொடர்ந்து வந்த ஆயர்கள் கத்தோலிக்க சபையின் உரோமாபுரி ஆயர்களாக தொடர்ந்து தெரியப்பட்டனர். திருத்தந்தை பிரான்சிஸ் பேதுருவின் 266வது வழித்தோன்றல். திருச்சபையில் வேறு எந்த அப்போஸ்தலர்களின் வழித்தோன்றல்கள் இல்லை. அனைவரும் பிந்திய தோற்றமே.

**பாடங்கள் தொடரும்...**

# ருவான்வெல்ல புனித அன்னம்மாள் ஆலயத்துக்கான மூன்றுமாடி கட்டிடம்.






இரத்தினபுரி மறைமாவட்டத்தில் ருவான்வெல்ல நகரத்தில் அமைந்துள்ளது புனித அன்னம்மாள் ஆலயம். இந்த ஆலயம் எழுப்பப்பட்டது 1907ஆம் ஆண்டு புரட்டாதி மாதத்திலாகும். எட்டியாந்தோட்டை பின்னர் தெஹியோவிற்ற பங்குகளால் நிர்வாகிக்கப்பட்ட இப்பங்கு 2013ம் ஆண்டு தை மாதம் உபபங்காகப் பிரகடனப்படுத்தப்பட்டு 2015ம் ஆண்டு ஆவணி மாதத்தில் தனிப்பங்காக இரத்தினபுரி ஆயர் அவர்களால் பிரகடனப்படுத்தப்பட்டது. பங்குத் தந்தையாக அருட்பணி. விக்பர்க் கிளிப்பட் ஷெர்வின் அடிகளார் நியமிக்கப்பட்டார்.

ஆலயம் பல அடிப்படை வசதிகளற்று காணப்பட்டது. ஒரு குருமனை இருக்கவில்லை. பங்குத்தந்தை ஒரு சிறிய அறையை தமது அலுவலகமாகப் பயன்படுத்தினார். சமையல்காரருக்கென்று தனி அறை இல்லாததால் அவர் வெளியிலிருந்தே உணவைப் பெற்றுக்கொண்டார். தம்மைக் காண வருபவர்களுக்கு உட்கார வசதியிருக்கவில்லை. இதுபற்றியெல்லாம் எண்ணிய பங்குத்தந்தை இப்பிரச்சினைகளுக்கான தீர்வு, ஒரு புதிய ஆலயம் அமைப்பதே என்று முடிவெடுத்தார். ஆனால் அவரிடம் அதற்கான நிதி வசதி இருக்கவில்லை. ஆயராலும் அவ்வாறான உதவியை வழங்க முடியாது என்பதை உணர்ந்தார். கர்த்தரின் மேல் பாரத்தைப் போட்டு நிதிதிரட்டும் பணியில் ஈடுபடலானார். பங்குமக்களிடம் உதவி கேட்க முடியாது. காரணம் மொத்தம் 97 குடும்பங்களில் 92 குடும்பங்கள் ஏழைத் தோட்டத் தொழிலாளர்களைக் கொண்டதாகும். நாட்டின் பல ஆலயங்களுக்கும் சென்று திருப்பலி ஒப்புக்கொடுத்தும், மறையுரை ஆற்றியும் நிதி சேர்க்கலானார். கர்த்தரின் பேரில் வைத்திருந்த நம்பிக்கை காரணமாய் போதிய நிதி திரட்டப்பட்டது. மூன்று மாடிகளைக் கொண்ட புதிய ஆலயத்துக்கான அடிக்கல் இரத்தினபுரி ஆயர் மேதகு. கிளீட்டஸ் சந்திரசிறி பெரேரா ஆண்டகையால் நாட்டப்பட்டது. தற்போது 60 சதவீத கட்டுமானப் பணிகள் நிறைவடைந்த நிலையில் மிகுதி வேலைக்கான நிதி பற்றாக்குறையாயுள்ளது. தமக்கு உதவிசெய்யுமாறு நல்ல உள்ளம் படைத்த கத்தோலிக்கக் கொடையாளர்களைக் கேட்டுக்கொள்கிறார். அவருக்கான தொலைபேசி எண் 072-2948419 ஆகும். அவருடன் தொடர்பு கொண்டு மேலதிக தகவல்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

ஆலயம், குருமனை, அவைக்களம், ஏழு அறைகள் போன்றவை இக்கட்டடத்துக்குள் அமையும். எல்லை நெடுகிலும்...

தொடர்ச்சி 15ம் பக்கம்..

# நல்லாயன்



ஆண்டவர்
நல்லாயரானார்.
ஆடுகளை அன்போடு
அரவணைத்தார்.

பரிசுத்தர் - அவர்
பாவிகளின்
பாவம் கழுவியவர்.
சீடரின் பாதம்
கழுவியவர்.
பாவிகள் மீது
பரிவுள்ளவர்.
பரிந்து பேசுபவர்.
பணிவிடை பெற
அல்ல,
பணிவிடை புரியவே
பாரினில் பிறந்தவர்.
இயேசு அவர்.

நற்கருணையில்
நாளும் நம்மோடு
பேசும் நல்லாயர்
அவர்.
தாழ்ச்சியோடு தம்
உயிர் தந்தவர்.
மாட்சியோடு உயிர்த்து
வந்தவர்.
மனுக்குலம் மீட்கும்
மனுமகன் - இயேசு
அவர்.


நாமும் நன்றியோடு
நல்லாயர் தந்த
நற்செய்தியை
நமது
வாழ்வாக்குவோம்.

ஆக்கம்: பென்ஜமின் சோமநாதர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







# இம்மாத புனிதர்கள்

## உயிர் வாழா கவரிமான் - தோமினிக் சாவியோ

**"தந்தையே விண்ணிற்கும் மண்ணிற்கும் ஆண்டவரே, ஞானிகளுக்கும் விவேகிகளுக்கும் இவற்றை மறைத்துச் சிறுவர்களுக்கு வெளிப்படுத்தியதால் உம்மைப் புகழ்கிறேன்" மத்தேயு 11:25.**

வட இத்தாலியாவின் முரியோல்டாவில் சார்லஸ் சாவியோ, பிரிட்ஜி என்போரின் மகனாக 1842ல் பிறந்தார். மூத்தவன் இறந்ததால் இவ் இளைய மகனாகிய இவர்மேல் அசாதாரணமான அன்பைப் பெற்றோர் பொழிந்தனர். கிறிஸ்தவக் கடமைகளை தாயிடமிருந்தும் மரியன்னை பக்தியைப் பங்கு குருவிடமிருந்தும் கற்றார் சாவியோ.

குளிர்கொட்டும் அதிகாலையில் எழுந்து தந்தை வயலுக்குச் செல்வார். 5 வயது தனயன் தேவாலயம் செல்வார். செக்ரீஸ்தன் கதவு திறக்கும்வரை வாசலில் குளிரில் நடுங்கிக்கொண்டிருப்பார்.

உரிய பருவத்தில் தகுந்த தயாரிப்புடன் புதுநன்மை உட்கொண்டார். இவரைக்குறித்து தாயும், பங்கு குருவும் செக்ரீஸ்தியில் உரையாடிக்கொண்டிருக்கும்போது திடீரென அவர்கள் மத்தியில் வந்து நின்று, "சாமி இயேசுவைத் தந்த உங்களுக்கு நன்றி, இயேசுவும் மரியன்னையும் இனி என் பாதுகாப்பாளர்கள். பாவத்தைவிட சாவை ஏற்கிறேன் என்று இயேசுவிடம் தீர்மானம் கொடுத்தேன்" என்றெல்லாம் கூற அவர்கள் மனம் மகிழ்ந்தனர்.

ஒரு சமயம் மதிய உணவுண்ண மறுத்தார். காரணம் கேட்டதற்கு மிருகங்களைவிட கேவலமானவர்கள்போல செபம் செய்யாது உணவுண்பவர்களுடன் சேர்ந்து உணவு உண்ண எனக்கு விருப்பமில்லை என்றார்.

சக மாணவர்களுடன் ஒரு சமயம் குளிக்கச் சென்றார். கெட்ட வார்த்தைகள் தண்ணீர்போல பரிமாறப்பட்டன. சாவியோ வெறுப்பைக் காட்டினார். 'நாம் வளர்ந்த பிள்ளைகள், குழந்தைகளல்ல, இவ்வாறாக பேசுவதால் ஒன்றும் கெட்டுப்போகவில்லை' என்று ஒருவன் கூறினான். 'உங்கள் கெட்ட வார்த்தைகள் எனக்குப் பிடிக்கவில்லை' என்று கோபத்துடன் கூறி சரியாகக்கூட குளிக்காமல் வீட்டிற்கு ஓடி வந்துவிட்டார். மனத்துயரை அன்னையிடம் வெளியிட, 'நீ பாவம் செய்யவில்லை. இதனால்தான் ஓடி வந்துவிட்டாயே' என்று தாய் ஆறுதல் கூறினாள். பாவத்தைவிட சாவேமேல் என்ற விருதுவாக்கை அனுசரித்துவருவது குறித்து தாய் மகிழ்ந்தாள்.

புனித போஸ்கோவின் ஒரட்டரியில் சேருமுன் சோதனைக்காக ஒரு மனப்பாடப் பகுதி சாவியோவுக்கு வழங்கப்பட்டது. அடிபிறழாமல் அதனை ஒப்புவித்து போஸ்கோவின் பாராட்டைப் பெற்று ஒரட்டரியில் சேர்த்துக் கொள்ளப்பட்டார். போஸ்கோவின் கண்காணிப்பில் வந்தபின் 'தந்தையே, என் ஆன்மாவைக் காத்து விரைவில் என்னைப் புனிதராக்குங்கள்' என்று அடிக்கடி கேட்டு செபிப்பார்.

ஒரட்டரியில் வாழ்ந்த வேளையில் மரியன்னையின் புண்ணியங்களைப் பின்பற்ற அமல உற்பவக்குழு ஒன்றை மாணவர்களுக்கு ஏற்படுத்தி அதற்குரிய ஒழுங்குமுறைகளுக்கு போஸ்கோவின் இசைவையும் பெற்றார். இக்குழு வழியாக மரியாள் பக்தி, சலேசிய சபையில் இன்றும் வளர்ந்துகொண்டே வருகிறது.

தன் இறுதி நாட்களில் அநேக பரவசக் காட்சிகள் இவருக்கு அருளப்பட்டன. ஒரு சமயம் தொடர்ந்து 6 மணி நேரம் நற்கருணை பேழைமுன் பரவசத்தில் மூழ்கினார்.

காது, நாக்கு, சிந்தனை போன்றவற்றை தன்னடக்கத்துக்குள் கொண்டு வாழ்வதே புனித வழி என்று புனித போஸ்கோ கூற அதன்படியும் அதற்கு மேல் ஒறுத்தல்கள், விரதம், கடின உடல் உபாதைகள் இவற்றை மேற்கொண்டும் புனித நிலையை விரைவில் எட்டிப்பிடிக்க முயன்றார். மிதமிஞ்சிய ஒறுத்தல் வாழ்வினால் இவரை நோய் பற்றியது. வீட்டில் தங்கினால் ஆரோக்கியம் கிடைக்கும் என்று போஸ்கோ அனுப்பி வைத்தார்.

ஒன்பது நாட்கள் படுக்கையில் கிடந்தார். பாவசங்கீர்த்தனம் செய்து இறுதி நற்கருணை உட்கொண்டார். என் கால்கள் மரித்து எனக்கு மரண வேளையை நினைவுறுத்தும்போது இரக்கமுள்ள இயேசுவே என்மேல் இரங்கும் என்ற செபம் வாசிக்கப்பட்டது. இச்செபத்தை அமைதியில் ஆழ்ந்து தன்மயமாக்கினார்.

இறுதியில் 1857 பங்குனி 9ல் தந்தை, ஒரட்டரி அனைத்திற்கும் விடை அளித்து விண்ணகம் சென்றார்.

1954 பங்குனி 5ல் திருத்தந்தை 12ம் பத்திநாதரால் புனித நிலைக்கு உயர்த்தப்பட்டார்.

**சின்னஞ்சிறிய வயதினிலே**
**சிறந்த புனிதர் ஆனவரே**
**சாவியோ எனப் பெயர் பெற்றவரே**
**இயேசுவின் வழி எமை நடத்திடுமே.**

**சாவான ஒரு பாவத்தினை**
**செய்திடும் நிலைமை வந்தாலே**
**சாவினை அதற்குப் பதிலாக**
**சந்திப்பேன் எனச் சூளுரைத்தீர்.**

**பக்தி வாழ்வின் மாதிரியாய்**
**பாரில் யாம் வாழ்ந்திட மன்றாடும்**
**பிரிவினை விதைக்கும் பேய் தனையே**
**போரிட்டு ஜெயிக்க மன்றாடும்.**




# புனித கன்னி மரியாள்

## எலிசபெத்தம்மாளைச் சந்தித்தல்


இப் பெருவிழா மகிழ்ச்சியான விழா. இயேசுவுடன் தொடர்பு கொண்ட இரு பெண்களுமே சாமான்யர்களே. அசாதாரணமானப் பெண்களாக இறைவனால் உயர்த்தப்பட்டவர்கள். அவர்கள் இருவரும் சந்தித்துக் கொண்டபோது அவர்களும் எலிசபெத்தின் கருவிலிருந்த யோவானும் ஆவியாரால் நிரம்பினர். இயேசுவின் பிறப்பை முன்னறிவித்த தூதர் எலிசபெத்து கருவுற்றிருந்ததை மரியாவுக்குக் கூறியதால் மரியா மலைநாடான அயின்கரீமிலுள்ள எலிசபெத்தின் இல்லத்திற்குச் சென்று அவரை வாழ்த்தினார். மரியா வாழ்ந்தது நாசரேத்து. எலிசபேத்து வாழ்ந்தது யூதேவிலுள்ள மலைநாடான அயின்கரீம். நாசரேத்திலிருந்து 80-100 மைல் தூரத்திலிருந்தது. நடைப்பயணமாகச் சென்றால் ஒருவர் ஒருநாளில் 20 மைல்கள் நடக்க முடியும் என வைத்துக் கொண்டாலும், மரியா 4-5 நாள்கள் நடத்திருப்பார். கோவேறு கழுதைப் போன்ற விலங்கின் மீதேறிச் சென்றிருந்தால் 3 நாள் பிடித்திருக்கும். அந்தப் பகுதியில் சரியான பாதைகளோ, இன்று உள்ளதுபோன்ற வசதிகளோ கிடையாது. இரவில் விளக்கு வசதிகள் இல்லை. பாதுகாப்பற்ற பயணம் (லூக்.10:30-33). ஆயினும் மரியா துணிவுடன் பயணம் செய்தார். இவ்விழா 1265ல் புனித பொனவெந்தூரால் தொடங்கிவைக்கப்பட்டு 1389லிருந்து உலகின் அனைத்து கத்தோலிக்கராலும் கொண்டாடப்பட்டு வருகிறது. இவ்விழாவில் அநேக ஆலயங்களில் மரியன்னைக்கு முடிசூட்டுதலும் நிகழ்வதுண்டு.

### சிந்திப்போம்

சிரமம் பாராமல் அடுத்தவருக்கு உதவும் மனம் என்னில் உள்ளதா?

தங்பெருமையின்றி பிறருடன் சமமாக பழகுகிறேனா?

### செபம்



அருள் மிகப் பெற்ற மரியே நாங்களும் எங்களை இறைவனுக்கு அடிமைகளாக அர்ப்பணித்து, வாழ்ந்திடவும் எங்களை சந்திப்போருக்கு ஆறுதலாக விளங்கிடவும் அருள் புரியும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 03 உலக தொடர்பாடல்...

இது எல்லோருடைய கடமையாகும். ஆனால் இதில் இருந்து இலகுவில் தப்பிக்க முடியாது. இதற்கு நாம் சில யுத்திகளைக் கையாளவேண்டும். இதனை "Snake - Taltics" பாம்பு - யுக்தி என்றழைப்பர். இதுதான் தொடாக்கநூலில் பயன்படுத்தப்பட்டது. சாத்தானினால் உலக வரலாற்றில் முதலாவது பொய்யானை செய்தியாக கருதப்படுவது (தொ.நூ 3:1-15) மேற்கூறப்பட்ட பகுதியாகும். இதுதான் மனித வரலாற்றின் வீழ்ச்சிக்குக் காரணமாகும். இதனால்தான் பாவவீழ்ச்சிகள் தொடர்ந்தும் இடம்பெற்றது. இதனால் கடவுளுக்கு எதிராகவும், அயலானுக்கு எதிராகவும், சமூகத்திற்கு எதிராகவும் தீமை நுழைந்தது. இதற்கான அணுகுமுறையை நாம் "பொய்யின் தந்தையிடம்" இருந்து பெற்றுக்கொண்டோம் (யோவா 8:44) எவ்வாறு சாத்தான் ஆகிய பாம்பு பொய்யான செய்தியை தெரிவித்த போது ஆசையின் காரணமாக சரியானது எது என்பதை தெரிந்து கொள்ளாமல் தானும் கடவுளாகும் எண்ணத்துடன் செயற்பட்டு கடவுளுக்கு கீழ்ப்படிய மறுத்ததினால் அனைத்து விபரீதங்களும் உலகில் நுழையத் தொடங்கியது. இதுதான் இன்றும் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது. இதனை இலகுவில் தடைசெய்ய முடியாது.

### 3. உண்மை உங்களை விடுதலையாக்கும் (யோவா 8:32)

எனவே நாம் உண்மையைக் கூறுபவர்களாக மாறவேண்டும். "எப்பொருள் யார் யார் வாய்கேட்பினும், அப்பொருள் மெய்பொருள் காண்பது அறிவு" எனவே பகுத்தறிவுள்ளவர்கள் என்று எம்மை கருதிக் கொள்ளும் நாம் அறிவுள்ளவர்களாகச் செயற்படவேண்டும் என்றால் மெய்பொருள் என்ன என்பதை கண்டறிய வேண்டும். இதற்காக எம்மை அர்ப்பணிக்க வேண்டும். இதனால் தான் இயேசு சொன்னார் "நானே உண்மையும் வழியும்" என்று (யோவா 14:6) அவரைப் பின்பற்றும் நாமும் உண்மையை எடுத்துக் கூறுபவர்களாக மாறவேண்டும்.

### 4. உண்மையான செய்தி அல்லது தகவல் சமாதானம் நிறைந்தது.

உண்மையான செய்தியை தெரிந்துகொள்ள செவிமடுக்க வேண்டும். அத்தோடு நேர்மையான உரையாடலில் ஈடுபடும் போது உண்மைத் தன்மையை அறிந்துகொள்ளலாம். இதைத்தான் இதழியலாளர் செய்ய வேண்டும். அவர்களின் பொறுப்பும் கடமையும் இதுதான் இதைச் செய்யவே எல்லோரும் அழைக்கப்பட்டிருக்கின்றோம்.

எனவே இவ்வாண்டின் உலக தொடர்பாடல் தினத்தில் சிறப்பாக நாம் புனித அசிசியாரின் செபத்தை நினைவுகூர்ந்து அடிக்கடிச் சொல்லி வருவோம். அப்போது நாம் சமாதானத்தின் கருவியாக மட்டும் அல்ல சமாதானம் நிறைந்த மனிதனாக மாறுவோம். இதற்காக அனைவரும் பொறுப்புணர்வோடு செயற்பட அழைத்து நிற்கின்றோம்.

**தொகுப்பு :**

**அருட்சகோ. R. ஜோசப் ஜெயகாந்தன்.**

## 07 தாயன்பு

"தென்னையைப் பெத்தா இளநீரு, பிள்ளையைப் பெத்தா கண்ணீரு"

என்று தனிமையில் புலம்புகிறாள். கண்ணை மூடுகிற வேளையில் ஆறுதலாக இரண்டு வார்த்தைகளைப் பேசவும் பிள்ளைகள் அருகில் இல்லாத நிலை ஏற்படுகிறது. ஒரு விதவைத் தாய் கூலி வேலை செய்து மகனைப் படிக்க வைத்து பெரிய மனிதனாக்கினாள். அவன் தாயைவிட பணத்தை அதிகமாக மதித்தான். வெளிநாட்டு வேலைவாய்ப்பு வந்தது. தாயைத் தனியாக விட்டு விட்டு அவன் வெளிநாட்டிற்குச் சென்றுவிட்டான்.

மாதங்கள் சில கடந்தன. தாய்க்குப் பார்வைக் கோளாறு ஏற்பட்டது. தனிமை வாட்டியது. உடல் நலக்குறைவு ஏற்பட்டு படுக்கையில் விழுந்தாள். வெளியே ஆள்நடமாட்டம் இல்லையே என்று அக்கம் பக்கத்திலுள்ளவர்கள் எட்டிப் பார்த்தனர். "மகனிடமிருந்து கடிதம் ஏதாவது வருகிறதா? செலவுக்குப் பணம் அனுப்புகிறானா?" என்று கேட்டனர். "ஏதோ மாதம் ஒரு கடிதம் அனுப்புகிறான். சின்னச் சின்னப் படங்களையும் அனுப்புகிறான். பத்திரமாக வைத்திருக்கிறேன்" என்று சுருக்குப் பையை அவிழ்த்துக் காட்டினாள். பார்த்தவர்கள் வியப்பில் ஆழ்ந்தனர். அரை வயிறும், கால் வயிறுமாக பிழைப்பு நடத்திக் கொண்டிருந்த அவள் பத்திரப்படுத்தி வைத்திருந்தது படங்கள் அல்ல, டாலர் நோட்டுக்கள்! அவளுக்கு இப்போது தேவைப்படுவது ஆறுதலா? அரவணைப்பா? டாலரா?

**அன்னையர் தினத்தை நாம், நமது தாயை எந்த நிலையில் வைத்திருக்கிறோம்?**

**எனச் சிந்திப்போம்.**

## 01 குருத்துவம்...

என்ற கிறிஸ்துவின் குரலுக்கு செவிகொடுத்து, புனித பவுலைப்போல் அவருடைய பணியினை எடுத்துச் செல்ல அழைக்கப்பட்டுள்ளீர்கள்.

பழைய ஏற்பாடு தொடக்கம் குருக்களின் தலைமீது கைவைத்து செபித்து அபிஷேகம் செய்வது என்பது, கடவுளின் பராமரிப்பில் இருப்பதற்கும், அவருடைய மந்தையை மேய்ப்பதற்கு தெரிவு செய்யப்பட்டு அனுப்பப்படும் நிகழ்வாக இருக்கின்றது. ஆகவே கடவுளுடன் மட்டும் ஒன்றித்திருங்கள் என்றார்.

தொடர்ந்து குருக்களின் பணியினை பற்றி விபரித்த கர்தினால் ஆண்டகை புனித ஜோன் மேரி வியான்னி மற்றும் திருத்தந்தை புனித 2ம் அருளப்பர் சின்னப்பர் ஆகியோர் குருத்துவத்தின் மேன்மை பற்றிய கருத்துக்களை விளக்கி கூறினார். எனவே குருக்களாக அபிஷேகம் செய்யப்படவிருக்கின்ற நீங்கள் கீழ்ப்படிவு, ஏழ்மை, தாழ்ச்சி போன்ற உயரிய பண்புகளை கொண்டு வாழ்வை நடத்துங்கள். உங்கள் வாழ்வை முழுவதுமாக கடவுளுக்கு ஒப்புக்கொடுங்கள். உங்களது நாளாந்த இரகசியங்களை அவருக்கு சொல்லுங்கள். உங்கள் விருப்பு வெறுப்புக்களை அன்றி கடவுளின் திட்டத்திற்கு செவிகொடுத்து வாழுங்கள். நீங்கள் இறந்தபின் ஒருநாள் கடவுளுடைய அந்த திருப்பொழிவை விண்ணகத்திலே கண்டு மகிழ்வீர்கள்" என்று குறிப்பிட்டார்.

அன்றைய திருப்பலியினை உயர்மறைமாவட்ட துணை ஆயர் மேதகு மெக்ஸ்வல் சில்வா ஆண்டகை, புதிய ஆயராக தெரிவு செய்யப்பட்டுள்ள அதிவண. J.D. அந்தனி ஜயக்கொடி, கண்டி தேசிய குருமட அதிபர் அதிவண. எக்ஸ்டிடஸ் ஜயக்கொடி மற்றும் அதிவண. பிளசிடஸ் டி சில்வா ஆகியோருடன் உயர்மறைமாவட்ட குருக்கள் இணைந்து ஒப்புக்கொடுத்தனர்.

**தமிழில் :**

**அருட்சகோ. டிலோய்ட்சன் பர்னாந்து**

## 13 ருவான்வெல்ல...

சிலுவைப்பாதை ஸ்தலங்கள் அமைக்கப்படும். இவை அனைத்தும் பூர்த்தியானால் மறைமாவட்டத்திலேயே புனித அன்னம்மாள் ஆலயம் ஓர் எடுத்துக்காட்டான ஆலயமாகத் திகழும். ருவான்வெல்ல புனித அன்னம்மாள் ஆலயம் புதுமைகளுக்குப் பிரசித்தமானதால் இது ஒரு யாத்திரை ஸ்தலமாகவும் மாற வாய்ப்புண்டு.

**தகவல் மற்றும் படங்கள் : ஜே. அந்தனி.**

## XIX மாலிபொட பங்கு...

திகல தோட்டத்தில் பிறந்து, வளர்ந்து இன்று இயேசு சபையில் சேர்ந்து குருவானவராக திருநிலைப்படுத்தப்பட்ட அருட்பணி ரிச்சர்ட் அடிகளாருக்கு பொன்னாடை போர்த்தி வரவேற்கப்பட்டது.

திருநாள் பணிகளை இளைஞர்கள் மன்றம் சிரேமேற் கொண்டு வெகு சிறப்பாக நடத்தியமைக்கு பங்குத்தந்தை ஜேம்ஸ் அடிகளார் கவிதை வரிகளால் நன்றி கூறி பாராட்டினார். இந்த காலகட்டத்தில் இளைஞர் குழாம் முன்வந்து செய்த அருமையான காரியத்தையும் நானும் பாராட்டுகிறேன்,

## 12 உயிரை அன்புகூர்ந்து...

இயேசுவின் அன்பில் அவர்களை கொண்டுவந்து இணைக்க வேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்தார், திருத்தந்தை.

நம் இவ்வுலக வாழ்வின் முக்கியக்கூறாக, அடுத்தவர் மீது நாம் காட்டும் அன்பு இருக்கவேண்டும் என்ற அழைப்பையும் முன்வைத்த திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், முதியோர், நோயாளிகள், கருவில் வளரும் குழந்தைகள் என ஒவ்வொருவரும் அன்பு கூரப்பட்டு பாதுகாக்கப்படுவதே உண்மையான அன்பு... எனவும் கூறினார்.

தன் அல்லேலூயா வாழ்த்தொலி உரையின் இறுதியில், மத்திய ஆப்ரிக்க நாட்டிற்காக செபிக்குமாறு அழைப்பு ஒன்றையும் விடுத்தார், திருத்தந்தை பிரான்சிஸ்.

**"ஒருவனை அவனுடைய மன்னிக்கும் குணத்துக்காகப் புகழும் முன், அவனுக்குப் பழிவாங்கும் குணம் உள்ளதா என்பதையும் சிந்திக்க வேண்டும்!**

**நீதிக்கும், அநீதிக்கும் வெகு தூரமில்லை.**
**புலியை மனிதன் கொன்றால் அது வீரம், வேட்டை,**
**மனிதனைப் புலி கொன்றால் அது இரத்தவெறி!**
**என்ன நியாயம் சார் இது?!**

GUIDING STAR HOLIDAYS
Superior Quality Pilgrimages only from
GUIDING STAR HOLIDAYS

05 நாட்கள்
வேளாங்கன்னி மற்றும் சென்னை
◢ புனித தோமையர் மலை
◢ புனித தோமையர் பேராலயம்
◢ விடிவெள்ளி பேராலயம்
◢ தி.நகர் பொருள் கொள்வனவு

▶ Luxury Accommodation (A/C)
▶ Meals ▶ A/C Luxury Transport
ரூ. 58,500/- மட்டுமே
புறப்படுதல்: 2018 ஆவணி 10, ஆவணி 25

03 நாட்கள்
புனித யோசப் வாஸ் சுற்றுலா -இலங்கை
◢ மடு திருத்தலம்
◢ தலவில புனித. அன்னாள் திருத்தலம்
◢ தலைமன்னார் / மன்னார்
◢ அற்புதர் புனித. ஜோசப் வாஸ் திருத்தலம்
◢ கல்கமுவ தேசிய திருத்தலம்

▶ Luxury Accommodation ▶ Meals ▶ A/C Luxury Transport
ரூ. 13,500/- மட்டுமே
புறப்படுதல்: 2018 ஆடி 27, ஆவணி 24, மார்கழி 7

07 நாட்கள்
லூர்து
160வது ஜீபிலி ஆண்டு
◢ பரிஸ் ஐபில் கோபுரம்
◢ அற்புத பதக்க திருத்தலம்
◢ புனித. வின்சன்ற் டீ போல் திருத்தலம்
◢ புனித. பெனடிற்றின் தூய கல்லறை.

விஷேட சலுகை
~~Rs.210,000/-~~
ரூ. 196,000/- மட்டுமே
புறப்படுதல்: 2018 புரட்டாதி 5, ஐப்பசி 8

No.349/2, Koralawella Road, Moratuwa.
+94(0)11 5737352 / +94(0)11 2657156 / +94 (0)71 9098098
info@guidingstarholidays.com
www.guidingstarholidays.com
(Q18N 1197)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# ஆரோக்கிய உணவும் ஒத்துப் போவதில்லை...!

### கூடாதது நன்மையாகலாம், நல்லது தீமையும் தரலாம்!

ஆரோக்கியமாக சாப்பிட வேண்டும் என்று நாம் படாதபாடு பட்டு இதை அதை வாங்கி சாப்பிடுகிறோம்.. நமக்கு பிடித்தமான உணவுகளையும் விட்டு விடுகிறோம்.. இவ்வாறு செய்வது எல்லாம் நாம் ஆரோக்கியமாக இருக்க வேண்டும் என்பதற்காகத் தானே..?

ஆனால் நாம் ஆரோக்கியம் என்று நினைத்து சாப்பிடும் ஒரு சில பொருட்கள் ஆரோக்கியமற்றது என்று தெரிந்தால்...?

சாப்பிடும் விதம் மனித உடலை பொறுத்தவரை, ஒவ்வொருவருடைய உடலும் வெவ்வேறு மாதிரி.. ஒரு சிலருக்கு ஆரோக்கியமான உணவாகவே இருந்தாலும் கூட அது உடலுக்கு ஒத்து வராது.
அதே போல் தான், ஒவ்வொருவரும் அவரவர் உடலுக்கு தகுந்தது போல் உணவின் அளவை நிர்ணயித்துக் கொள்ள வேண்டியதும் அவசியம்.

## ஆரோக்கிய உணவு

ஆரோக்கியமான உணவு முறைகளை கடைப்பிடிக்க வேண்டியது அவசியம். உங்களது உணவு முறையானது உங்களது ஆரோக்கியம் சார்ந்த ஒன்றாக இருப்பது நல்லது. உங்களது உடலுக்கு ஒவ்வாமையை உண்டாக்கும் உணவுகளை சாப்பிடுவதை தடுப்பது நல்லது.

குளிரூட்டப்பட்ட காய்கறிகள் பதப்படுத்தப்பட்ட காய்கறிகளைச் சாப்பிடுவது ஆபத்தானது என்று கூறுகின்றனர். ஆனால் ஃபிரஷ்ஷான காய்கறிகள் மற்றும் பழங்களை அதிகபட்சமாக மூன்று நாட்கள் ஃபிரிட்ஜில் வைப்பது என்பது அந்த அளவுக்கு ஆபத்தை விளைவிக்காது.

எனவே பிரஷ்ஷான காய்கறிகள் மற்றும் பழங்களை மூன்று நாளைக்கு மேல் குளிர்சாதனப் பெட்டியில் வைத்து சாப்பிடுவதை தவிர்க்கலாம்.

## சைவத்துக்கு மாறுதல்

அசைவத்திலிருந்து சைவத்துக்கு மாறுவது என்பது மிக நல்ல முடிவு தான்.. ஆனால் இதனை மிக சரியான முறையில் செய்தால் தான் ஆரோக்கியம் கிடைக்கும். அசைவத்தில் இருந்து சைவத்திற்கு மாறுபவர்கள் கண்டிப்பாக அசைவத்திற்கு நிகரான சத்துள்ள சைவ உணவுகளை சாப்பிட வேண்டியது அவசியம்.

பருப்பு வகைகள், நட்ஸ் மற்றும் பிற ஊட்டச்சத்து உணவுகள், கீரை வகைகள், தானியங்கள் போன்றவற்றை எடுத்துக் கொள்வது என்பது சிறந்ததாகும். கார்போஹைட்ரைடுகள் கார்போஹைட்ரைடுகள் உங்களது உணவு பட்டியலில் கண்டிப்பாக இருக்க வேண்டியது அவசியம். இன்று பலர் கார்போஹைட்ரைடுகள் என்றாலே வெறுத்து ஒதுக்குகிறார்கள்..

வெள்ளை பிரட், பிஸ்கட்டுகள் போன்றவற்றில் இருக்கும் கார்போஹைட்ரைடுகளைக் காட்டிலும், கோதுமை பிரட், காய்கறிகள், பழங்கள், பீன்ஸ் மற்றும் நட்ஸ் ஆகியவற்றில் இருக்கும் கார்போஹைட்ரைடுகள் மிகச்சிறந்த உணவுகளாக இருக்கும்.

## வெண்ணெய்

வெண்ணெய் உடலுக்கு தீங்கு விளைக்க கூடியது என்பது பலரது கருத்து. ஆனால் மார்கரைன் (Margarine) என்று அழைக்கப்படும் இந்த தாவர வெண்ணெய் ஆனது வெண்ணெய் சாப்பிட முடியாதவர்கள் சாப்பிடலாம் எனப்படுகிறது. அதாவது இது வெண்ணெய்க்கு மாற்று உணவாக உள்ளது.. வெண்ணெய் மற்றும் செயற்கை வெண்ணெய் இவற்றில் எது சிறந்தது என்று பார்த்தால், செயற்கை வெண்ணெய்யில் டிரான்ஸ் கொழுப்புகள் உள்ளன. எனவே இதனை சிலர் எடுத்துக் கொள்வது கூடாது.

எனவே அதில் என்னென்ன உள்ளது, அது உங்களது உடலுக்கு தகுந்ததா என்பதை முதலில் கண்டறியுங்கள்.

## சுவையூட்டிகள்

வெள்ளை சர்க்கரை ஆரோக்கியமற்றது என்று தான் பலர் சுவையூட்டிகளுக்கு மாறுகின்றனர்.. ஆனால் அந்த சுவையூட்டிகள் கூட ஆரோக்கியமற்ற உணவு தான்.. இதில் ஆபத்தை விளைவிக்கும் நச்சுக்கள் அடங்கியுள்ளன. எனவே நீங்கள் வெளியில் காபி, டீ சாப்பிடுவது என்றாலும் கூட அங்கு எந்த வகை சுவையூட்டிகள் பயன்படுத்தப்படுகின்றன என்பதை கேட்டறிவது நல்லது.

ஏனெனில் நீங்கள் என்ன தான் ஆரோக்கியம் தரும் டீயை குடித்தாலும் கூட அதில் சேர்க்கப்பட்டுள்ள சுவையூட்டிகள் எத்தகையது என்பதை அறிந்துகொள்ள வேண்டும்.

கல்லீரல், சிறுநீரகம் போன்ற உறுப்புகள் தினமும் உங்களது உடலைச் சுத்தம் செய்து கொண்டு தான் இருக்கின்றன. எனவே நீங்கள் உடலை சுத்தம் செய்ய போகிறேன் என்று தனியாக நேரம் எடுத்துக் கொள்ள வேண்டியதில்லை..



## கொழுப்பு உணவு ஆகாது!

கொழுப்பு உணவுகளை சாப்பிடவே மாட்டேன் என்று சிலர் இருப்பார்கள். ஆனால் நமது உடலுக்கு ஓரளவுக்காவது கொழுப்பு சத்து தேவைப்படுகிறது. இந்த கொழுப்பானது நீங்கள் சாப்பிடும் உணவில் உள்ள ஊட்டச்சத்துக்களை ஊறிஞ்ச தேவைப்படுகிறது அவோகேடா, நட்ஸ், விதைகள், ஆலிவ் ஆயில்கள் போன்றவை ஆரோக்கியமான கொழுப்பு நிறைந்த உணவுகளாகும்.

## சாலட்டுகள்

சாலட்டுகள் சாப்பிடுவது என்பது மிகவும் ஆரோக்கியமான ஒன்று நினைத்து, ஓட்டல்களில் ஆரோக்கியமான உணவு சாப்பிடலாம் என்று சாலட்டுகளை ஆடர் செய்வீர்கள்.. ஆனால் இந்த சாலட்டுகள் என்பது ஃபிரஷ் ஆனதாக இருக்க வேண்டும். தயார் செய்யப்பட்டு மிக நீண்ட நேரமான சாலாட்டுகளை சாப்பிடக் கூடாது.

## சாக்லேட் சாப்பிட கூடாதா?

சாக்லேட் சாப்பிட கூடாது என்று நாம் பிள்ளைகளைக் கண்டிக்கிறோம். ஆனால் நீங்கள் சாக்லேட்டில் எத்தனை நன்மைகள் இருக்கிறது என்பது பற்றி உங்களுக்கு தெரியுமா? சாக்லேட்டுகள் உங்களது உடலில் உள்ள மன அழுத்தம் தரக் கூடிய ஹார்மோன்களைக் கட்டுப்படுத்த உதவுகிறது என்றால் நம்புவீர்களா?

---




ஒவ்வொரு மனிதருக்கும் இரண்டு சிறுநீரகங்கள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் 150 கிராம் எடை உடையது. அவரை விதை வடிவத்தில் உள்ள சிறுநீரகமானது உடலின் பின்பகுதியில் அமைந்துள்ளது. இரத்தத்தை பெறுவதும் வெளி அனுப்புவதும் இதன் முக்கியப் பணிகள்.

## சீறுநீரகத்தின் செயல்பாடுகள்

உடலில் உற்பத்தி ஆகும் நச்சுப் பொருட்களை பிரித்தல்
நீர்நிலை சமப்படுத்துதல்
உப்பைச் சமப்படுத்துதல்
அமிலத்தன்மையை சமப்படுத்துதல்
இரத்தக் கொதிப்பை சீர் செய்தல்
சிறுநீரகத்தில் சுரக்கும் ஒருவித ஹார்மோன் இரத்த உற்பத்திக்கு காரணமாகிறது.
வைட்டமின் "டி"யின் உதவியால் எலும்புகளை உறுதிப்படுத்துகிறது

## சிறுநீரகக் கோளாறின் அறிகுறிகள்

* முகத்தில் வீக்கம்
* சிறுநீர்க் குறைவு
* கால்களில் வீக்கம்
* சிறுநீரில் இரத்தம்
* சிறுநீர் கழிப்பதில் சிரமம்
* பசியின்மை
* வாந்தி
* உடல் அழற்சி
* தூக்கமின்மை
* அரிப்பு
* சிறுநீர் கழிக்கும் போது எரிச்சல்

## பரிசோதனைகள்

மேற்சொன்ன அறிகுறிகளில் ஏதேனும் சில உங்களுக்கு இருக்குமாயின் உடனடியாக மருத்துவரை அணுகி முதலில் ஆலோசனைகளைப் பெறுங்கள். இரத்தம் மற்றும் சிறுநீர் பரிசோதனைகளை மருத்துவரின் பரிந்துரையின் படி மேற்கொள்ளுங்கள். இதற்கான பரிசோதனைகள் சுலபமானவை. குறைந்த செலவில் செய்து கொள்ள முடியும்.

## யாரை அதிகம் பாதிக்கும்?

சர்க்கரை நோய் இருப்பவர்கள் கவனமாக இருக்க வேண்டும். அதிக இரத்த கொதிப்பு உள்ளவர்களுக்கும் இது வரும் வாய்ப்பு அதிகமுள்ளது.

## தற்காப்பு

சீரான உணவு முறை சிறுநீரகப் பராமரிப்புக்கு அனுகூலமானது. புகை பிடிப்பதை நிறுத்த வேண்டும். மது அருந்துவதைத் தவிர்க்க வேண்டும்.
சுய மருத்துவம் ஒருபோதும் செய்யாதீர்கள். குறிப்பாக வலி நிவாரணிகளை உட்கொள்வதைத் தவிர்த்துவிடுங்கள்.
உணவில் உப்பை குறைத்துச் சாப்பிடுங்கள்.
தினமும் நடப்பதோ அல்லது உடற்பயிற்சியோ செய்ய வேண்டும்.
நிறைய தண்ணீர் குடியுங்கள்.

## உங்கள் கவனத்துக்கு...

இரத்த கொதிப்பு 120 / 180 இருக்க வேண்டும் வெறும் வயிற்றில் இரத்தத்தில் சர்க்கரை 110 mg/dlக்கு குறைவாக இருக்க வேண்டும் இரத்தத்தில் கிரியாடினின் அளவு 0.6 - 1.2 mg/dl இருக்க வேண்டும்.

---

## நெற்றியில் வரும் பருக்கள்



அளவுக்கதிகமாக சாப்பிடுவதால் அல்லது உண்ட உணவு ஜீரணமாகாமல் இருந்தால், குறிப்பிட்ட சம்பவத்தை எப்போதும் நினைத்து வருத்தப்பட்டால், அல்லது ஏதாவது ஒன்றை நினைத்துப் பயந்து கொண்டே இருந்தால் நெற்றியில் பருக்கள் வரும்.

தோலில் உள்ள துளைகள் அடைபடுவதால் பருக்கள் ஏற்படும். தோலில் அதிகமாக எண்ணெய் சுரந்து அது வெளியேறா-விட்டால் பருக்கள் வரும். தலையில் பொடுகு தோன்றுவதற்கு முன், சிறு சிறு பருக்கள் ஏற்படும். தலைமுடியை சரியாகப் பராமரிக்காமலிருந்தால், தோல் வறட்சி அல்லது அதிக எண்ணைய் இருந்தால் நெற்றியில் பருக்கள் வரும்.
சில மனப் பிரச்சனைகளால் மன அழுத்தம் ஏற்படும்போது ஹார்மோன் சுரப்பில் உடல் நலக்குறைவு ஏற்படும்.

அலர்ஜியை ஏற்படுத்தும் ஷாம்பூ, எண்ணைய், ஹேர் ஸ்ப்ரே போன்ற-வற்றாலும் முகத்தில் பருக்கள் ஏற்படும்.

பருக்களைத் தடுக்க நிறையத் தண்ணீர் குடிக்கலாம் காய்கறிகள், பழங்கள் நிறைய சாப்பிடலாம். மனச்சிக்கல்கள் தீர தியானம், யோகா போன்ற பயிற்சிகளைத் தொடர வேண்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# தென் ஆப்ரிக்க மசூதி தாக்குதலுக்கு ஆயர்கள் கண்டனம்

தென் ஆப்ரிக்காவின் வெருலாம் (Verulam) பகுதியில் உள்ள இஸ்லாமிய மசூதி ஒன்றில் இடம்பெற்ற தாக்குதல் குறித்து தங்கள் வன்மையான கண்டனத்தை வெளியிட்டுள்ளனர் அந்நாட்டு ஆயர்கள்.

தென் ஆப்ரிக்க கத்தோலிக்க ஆயர்களின் சார்பில் செய்தியொன்றை வெளியிட்டுள்ள தென் ஆப்ரிக்க ஆயர் பேரவைத் தலைவர் பேராயர் Stephen Brislin அவர்கள், இத்தாக்குதலில் ஒருவர் கொல்லப்பட்டுள்ளது மற்றும் இருவர் படுகாயமுற்றுள்ளது குறித்து கவலையையும் கண்டனத்தையும் தெரிவித்துள்ளார்.

இமாம் ஹுசைன் மசூதியில் இடம்பெற்ற இந்த தாக்குதலில் உயிரிழந்தவரின் குடும்பத்திற்கு ஆறுதலையும், காயமடைந்தோர் விரைவில் குணமடைவதற்கு செப உறுதியையும் வழங்குவதாக கூறியுள்ள பேராயர் Brislin அவர்கள், இத்தாக்குதலுக்கு காரணமானவர்கள், விரைவில், நீதியின் முன் கொணரப்பட, காவல்துறை உழைக்க வேண்டும் என்ற விண்ணப்பத்தையும் முன்வைத்துள்ளார்.

தொடர்ந்து பல காலமாக, மத சகிப்புத்தன்மையுடன் வாழும் தென் ஆப்ரிக்காவில், ஒரு மதத்திற்கு எதிராக இன்னொரு மதத்தைத் தூண்டிவிடும் முயற்சிகள் முறியடிக்கப்பட வேண்டும் என்ற அழைப்பையும் விடுத்தார், தென் ஆப்ரிக்க ஆயர் பேரவைத் தலைவர்.

ஒவ்வொருவரின் உரிமைகளையும், மாண்பையும், மதிப்பதை அடிப்படையாகக் கொண்டு பெறப்படும் அமைதிக்காக தென் ஆப்ரிக்க திருஅவை தொடர்ந்து செபிக்கும் என மேலும் எடுத்துரைத்தார் பேராயர் Brislin.

வியாழனன்று பிற்பகல் உள்ளூர் நேரம் 2.30 மணியளவில் டர்பன் நகருக்கருகேயுள்ள வெருலாம் என்ற இடத்தின் இமாம் ஹுசைன் மசூதிக்குள் நுழைந்த மூன்று ஆயுதம் தாங்கிய மனிதர்கள், அங்கு தொழுகையில் ஈடுபட்டிருந்த இருவரை கழுத்தில் கத்தியால் அறுத்தும், ஒருவரை வயிற்றில் கத்தியால் குத்தியும் தாக்கியுள்ளனர், இதில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.



## திருத்தந்தையின் டுவிட்டர் செய்தி...

“இயேசுவுக்கு நீங்கள் வழங்கும் பதிலுரை, தற்காலிக கணக்கீடுகளாலும், உங்கள் வசதி வாய்ப்புகளாலும் கட்டுப்படுத்தப்பட்டதாக இருக்கக்கூடாது. வாழ்நாள் முழுவதும் தொடரும் ஆம் என்பதாக இருக்க வேண்டும்“

“உயிர்த்த இயேசுவின் விண்ணேற்றம், இறைவனுடன் வாழும் வாழ்வின் நிறைவில் நாமும் பங்கேற்போம் என்ற உறுதியை வழங்குகிறது”

““உலகில் அன்பு பரவும் பொருட்டு இறைவா, எங்கள் இதயங்களை மாற்றியமைத்தருளும்“

”இறைவன் ஒருவரே நமக்கு உண்மையான மகிழ்வை வழங்கமுடியும். செல்வம், இன்பம், அதிகாரம் என்ற பிற இடங்களில் மகிழ்வைத் தேடி, நேரத்தை வீணாக்குவது, பயனற்றது”

“நீங்கள் செபிக்கும்போது, இயேசுவோடு ஒன்றித்திருங்கள், அதேவேளை, அமைதிக்காக உழைப்பதுடன், ஏழை எளியோருடன் அக்கறையுள்ளவர்களாக செயல்படுங்கள்”

“தூய ஆவியாரால் நாம் வழிநடத்தப்பட்டு அவர் விரும்பும் இடங்களுக்கு அழைத்துச் செல்லப்பட அனுமதிப்பதைவிட, மேலான சுதந்திரம் எதுவும் இல்லை”

“பாத்திமா அன்னை மரியாவே, எம்மை நோக்கியும், எம் குடும்பங்களை நோக்கியும், எம் நாடுகளை நோக்கியும், இவ்வுலகை நோக்கியும் உமது பார்வையைத் திருப்பியருளும்”

# வைகாசி 12, உலக செவிலியர் தினம்



உலகில் மருத்துவச் சிகிச்சைகளுக்கு, முதுகெலும்பாகவும், ஒருங்கிணைந்த அங்கமாகவும் செயல்படுகின்ற செவிலியர்களுக்கு தன் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளது, MSF எனப்படும் எல்லைகளற்ற மருத்துவர்கள் அமைப்பு.

வைகாசி 12, சனிக்கிழமையன்று உலக செவிலியர் தினம் கடைப்பிடிக்கப்பட்டதை முன்னிட்டு செய்தி வெளியிட்டுள்ள MSF அமைப்பு, இந்த அமைப்பில் 72 நாடுகளில் பணியாற்றும் 8,843 செவிலியர்களும், எல்லா நேரங்களிலும் தரமான பணிகளை ஆற்றி வருகின்றனர் எனப் பாராட்டியுள்ளது.

MSF அமைப்பின் பணியாளர்களில், 90 விழுக்காட்டினர் செவிலியர் எனவும், இவர்கள் பணியாற்றும் நாடுகளில், பாகுபாடு பாராமல், நோயுற்றோரைப் பராமரிக்கின்றனர் எனவும் கூறியுள்ள இந்த அமைப்பு, இவ்வாண்டு செவிலியர் தினத்தில், தென்னாப்ரிக்காவில் ஆளுகு அமைப்பின் பல்வேறு திட்டங்களில் சிறப்பாய் பணியாற்றும் நான்கு செவிலியரைக் கௌரவிக்க உள்ளதாகவும் கூறியுள்ளது.

பிளாரன்ஸ் நைட்டிங்கேல் (FlorenceNightingale) அவர்களின் பிறந்த நாளான வைகாசி 12ம் தேதி, உலக செவிலியர் தினம் கடைப்பிடிக்கப்பட்டது.

# திருஅவைக்கு களங்கம் வருவிக்கின்ற போலிக் கடிதத்திற்கு கண்டனம்



இந்தியாவின் கர்நாடக மாநிலத்தில் சிறுபான்மை சமூகத்தினர் மத்தியில் மதமாற்றங்களை நடத்துவதற்கு, இந்தியத் திருஅவை திருப்பீடத்துடன் சேர்ந்து சதித்திட்டத்தில் ஈடுபட்டுள்ளது என்று வெளியிடப்பட்டுள்ள கடிதம், தீயநோக்கம் கொண்ட போலி கடிதம் என்று சொல்லி, அக்கடிதத்திற்கு எதிரான தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளது, தலத்திருஅவை.

இப்போலிக் கடிதம் குறித்து அறிக்கை வெளியிட்டுள்ள, இந்திய ஆயர் பேரவையின் பொதுச் செயலர் ஆயர் தியோடர் மஸ்கரீனஸ் அவர்கள், இப்போலிக் கடிதம், கத்தோலிக்கத் திருஅவையின் பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் நோக்கத்தில் எழுதப்பட்டுள்ளது என்று கூறியுள்ளார்,

வைகாசி 12, சனிக்கிழமையன்று கர்நாடக மாநிலத்தில் சட்டமன்ற தேர்தல்கள் இடம்பெறவுள்ளவேளை, அரசியல் இலாப நோக்குடன் வகுப்புவாத பதட்டநிலையை உருவாக்கும் நோக்கத்தையும், இக்கடிதம் கொண்டுள்ளது எனவும் குறிப்பிட்டுள்ளார், ஆயர் மஸ்கரீனஸ்.

இப்போலிக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது போன்று, இந்திய ஆயர் பேரவையோ, கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்களோ, பிரிவினைகளை ஏற்படுத்தும் இத்தகைய யுக்திகளில் ஒருபோதும் ஈடுபடமாட்டார்கள் என்றும், ஆயர் மஸ்கரீனஸ் அவர்கள் கூறியுள்ளார்.

கர்தினால் ஆசுவால்டு கிரேசியஸ் அவர்கள், பெங்களூரு பேராயர் பெர்னார்டு மொராஸ் அவர்களுக்கு எழுதியதாக, இந்தப் போலிக் கடிதம் கூறுகிறது. இக்கடிதத்தில், மொழிப் பிழைகள் உள்ளன. மேலும், நபர்களின் பெயர்களும் தவறாகக் குறிப்பிடப்பட்டுள்ளன.

# சிரியா, உலகின் அமைதிக்காக செபமாலை செபியுங்கள்

இறைவனின் அன்னைக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த வைகாசி மாதத்தில், ஒவ்வொரு நாளும் செபமாலை செபித்து, சிரியாவிலும், உலகமனைத்திலும் அமைதி நிலவுவதற்காக ஒப்புக்கொடுக்குமாறு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இப்புதன்கிழமையன்று அழைப்பு விடுத்தார்.

வத்திக்கான் தூய பேதுரு வளாகத்தில், ஆரம்பித்த பொது மறைக்கல்வியுரையில், அரபு மொழி பேசும், சிறப்பாக, மத்திய கிழக்குப் பகுதியிலிருந்து வந்திருந்த திருப்பயணிகளை வாழ்த்திய திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், இவ்வாறு அழைப்பு விடுத்தார்.

அன்னை மரியாவுக்கு அர்ப்பணிக்கப்பட்ட இந்த வைகாசி மாதத்தில், ஒவ்வொரு நாளும் செபமாலை செபிக்கும் பழக்கத்தை வளர்த்துக்கொள்ளுமாறும், குறிப்பாக, அச்செபத்தை, சிரியாவிலும், உலகமனைத்திலும்



அமைதி நிலவுவதற்காக ஒப்புக்கொடுக்குமாறும் திருப்பயணிகளிடம் கூறினார், திருத்தந்தை பிரான்சிஸ்.

மேலும், நாம் எந்த அளவுக்கு கிறிஸ்தவர்களாய் இருக்கின்றோமோ, அந்த அளவுக்கு, கிறிஸ்துவை நம்மில் வாழ அனுமதிக்கின்றோம் என்ற சொற்கள், திருத்தந்தையின் டுவிட்டரில், வெளியிடப்பட்டுள்ளன.

இன்னும், திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், வைகாசி 11, இவ்வெள்ளியன்று, ருமேனிய நாட்டு பிரதமர், Viorica Dancila அவர்களையும், செக் மற்றும் சுலோவாக்கியாவின் ஆர்த்தடாக்ஸ் சபைத் தலைவர், பேராயர் Rastislav அவர்களையும், வத்திக்கானில் சந்திப்பார் என, திருப்பீடம் அறிவித்துள்ளது.

இதற்கிடையே, உலகின் ஆயர்கள் ஐந்தாண்டுக்கு ஒருமுறை திருத்தந்தையரைச் சந்திக்கும் அத் லிமினா எனப்படும் சந்திப்பில், வைகாசி 08, செவ்வாய் மாலை ஆறு மணிக்கு, திருத்தந்தை பிரான்சிஸ் அவர்கள், மியான்மார் நாட்டின் ஆயர்களைச் சந்தித்து கலந்துரையாடினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாழ்த்துகின்றோம்



**துசார பர்னாந்து**

**டியூலின் மிறால்**

**06.05.2018**

கொழும்பு கத்தோலிக்க அச்சகத்தின் கணனிப் பிரிவில் பணியாற்றிய செல்வி. டியூலின் மிறால் அவர்கள், கட்டுநேரிய பங்கைச் சேர்ந்த துசார பர்னாந்து அவர்களுடன் கடந்த 05.06.2018 அன்று ஏதுக்கால புனித.சில்வெஸ்டர் ஆலயத்தில் திருமண பந்தத்தில் இணைந்து கொண்டார். இத்தம்பதியர் சகல சௌபாக்கியங்களையும் பெற்று பல்லாண்டு காலம் வாழ கத்தோலிக்க அச்சகத்தின் இயக்குனர், பத்தரிகைகளின் ஆசிரியர்கள் உட்பட அனைவரும் வாழ்த்துகின்றோம்.

## கருக்கலைப்புப் பற்றி கருத்தமர்வு



புதுச்செட்டித்தெரு புனித வியாகுல மாதா பங்கின் மறைபாடசாலை மாணவர்களுக்கு 13.05.2018 அன்று கொழும்பு உயர் மறைமாவட்ட குடும்ப நல அப்போஸ்தலிக்க பணியகத்தினால் கருக்கலைப்புப் பற்றிய கருத்தமர்வு இடம்பெற்றது. கருத்தமர்வு நடத்தியவர்களையும் மறைபாடசாலை மாணவர்களையும் படத்தில் காணலாம்.

**தகவல் – திரு பீட்டர் ரொபின்சன்**

## இரத்தினபுரி புனித இராயப்பர் – சின்னப்பர் பேராலயத்தில் கொண்டாடிய மேதினம்



ஞாயிறு (06-05-2018) சகல தொழிலாளர்களும் இணைந்து விசேடமான முறையில் திருப்பலிஏற்பாடு செய்திருந்தார்கள். தொழிலாளர்ளை கௌரவிக்கும் முகமாக அவர்களை மங்கள விளக்கேற்றச் செய்து - பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. திருப்பலியில் - பங்குத்தந்தை - அருட்பணி என்ஸ்லி சுரஸ்க அடிகளாரும் - உதவி பங்கு தந்தை அருட்பணி சம்பத் விஜயரட்ண அடிகளாரும் நிறைவேற்றினார்கள்.

## வின்சந்தியர்கள் (புனித வின்சன் டீ போல் சபை) தனது அருங்கொடையின் 400 வது அகவையினை கொண்டாடுகின்றது.

**"அன்னியனாக இருந்தேன், என்னை ஏற்றுக் கொண்டீர்கள்"**

**வாருங்கள் இந்நிகழ்வை இணைந்து கொண்டாடுவோம்!**

புனித வின்சன் டீ போல் தேசிய சபை இந்நிகழ்வை முன்னிட்டு திறந்த சித்திர போட்டி ஒன்றினை ஒழுங்கு செய்கின்றது.

**போட்டியாளர்களின் சித்திரங்கள் பின்வரும் அம்சங்களை கொண்டு மதிப்பிடப்படும்.**

✷ சித்திரத்தில் புலப்படும் தெளிவும் விளக்கமும்
✷ கருப்பொருளுக்கேற்ற படைப்பாற்றலும் தற்படைப்பு திறமையும்
✷ கருப்பொருளின் தன்மையும், கருப்பொருளுக்கேற்ற ஒட்டுமொத்த வடிவமைப்பும்
✷ சித்திரத்தின் ஒட்டுமொத்த ஈர்ப்புத்தன்மை

**கருப்பொருள் :** எனது அயலான் யார்? (லூக்.10:25-37)

**உங்கள் சித்திரங்களை கீழ்க்காணும் முகவரிக்கு பதிவு தபால் மூலம் அனுப்பிவைக்கவும்**

**தேசிய இயக்குனர்,**
**புனித வின்சன் டீ பவுல் சங்கம்**
**பொதுநிலையினர் மற்றும் குடும்ப அப்போஸ்தலிக்க பணியகம், 658, பேராதனை வீதி, கண்டி.**

**வயது எல்லை :** A பிரிவு - வயது 12-15
B பிரிவு - வயது 16-18

**சித்திரத்திற்கு பயன்படுத்த வேண்டிய பொருட்கள்:**
சித்திரத்தாளின் அளவு - A3

**சித்திரத்திற்கு பயன்படுத்த வேண்டிய நிறப்பூச்சுக்கள்:**
பெஸ்டல், நீர்ச்சாயம் (water Color), எண்ணெய் பெஸ்டல் (Oil Pastel)

**ஒப்படைகக் வேண்டிய இறுதித் திகதி :**
2018 ஆடி மாதம் 15ம் திகதி ஞாயிற்றுக்கிழமை

★ **எல்லா சித்திரங்களும் பங்குத் தந்தையினால் உறுதிப்படுத்தப்பட வேண்டும்.**

**National Chaplain**
**Socity of St. Vincent De Paul**
**Lay Apostolate Centre**
**658, Peradeniya Road, Kandy.**

## அம்பிட்டிய புனித மரியா ஆலயத்திற்கு புதிய உதவி பங்குத்தந்தையின் வருகை



அம்பிட்டிய புனித மரியா ஆலயத்தின் புதிய உதவி பங்குத்தந்தையாக அருட்பணி வொன்பட் பிரான்சிஸ் (கிளரேசியன் சபை) அவர்களை பங்கு குருவும், பங்கு மக்களும் வெகு விமரிசையாக வரவேற்றனர்.

அன்றைய தினம் திருப்பலி அருட்பணி றோய் கிளரென்ஸ் (கிளரேசியன் சபை) அவர்கள் நிறைவேற்றியதோடு, பங்குத்தந்தை அருட்பணி றோய் கிளரென்ஸ் அவர்களாலும், பங்கு மக்களின் உதவியாலும் அந்நிகழ்வு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

**தகவல்: அருட்சகோதரர் லக்சான் பர்னாந்து (O.M.I)**

## அருட்பணி. லெனால்ட் ரணசிங்க (பு.ஆ.ச) அவர்களின் 5ம் ஆண்டு நினைவு திருப்பலி




திரு இருதயநாதர் இராஜகிரிய முன்னால் பங்குத் தந்தையாகிய இறைபதம் அடைந்த அருட்பணி லெனால்ட் ரணசிங்க (பு.ஆ.ச) அவர்களின் 5ம் ஆண்டு நினைவு திருப்பலி 2018-04-21 அன்று திரு இருதயநாதர் இராஜகிரிய ஆலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்டது.

அன்றைய திருப்பலியை புனித ஆசீர்வாதப்பர் சபை குரு முதல்வர் அருட்பணி. சமின்ர ஜயவர்தன அடிகளாரும் எமது ஆலய பங்குத்தந்தை அருட்பணி அன்சலம் பொன்சேக்கா, உதவி பங்குத்தந்தை அருட்பணி மைக்கல் சந்தனம், மற்றும் அருட்பணி வூல்ஸ்டன் ஆகியோர் சிறப்பித்தனர்.

அன்று முக்கிய நிகழ்வாக அன்னாரின் முழு முயற்ச்சி, உழைப்பினால் உருவாக்கப்பட்ட நான்கு மாடி கட்டிடத்தில் மூன்றாம் மாடிக்கு அருட்பணி லெனால்ட் ரணசிங்க நினைவு மண்டபம் என பெயரிடப்பட்டது குறிப்பிடத்தக்கது.

**தகவல்: A. கிறிஸ்டினா – இராஜகிரிய**

## மாலிபொட பங்கு திகல தோட்டத்தில் புனித சூசையப்பரின் திருவிழா





கடந்த 27-04-2018 அன்று மாலிபொட பங்கு திகல தோட்டத்தில் அருட்பணி ஜேம்ஸ் சுரேஸ் (இயேசு சபை) அடிகளாரினால் கொடியேற்றத்துடன் புனித சூசையப்பர் திருவிழா ஆரம்பமாகியது. தொடர்ந்து நவநாளும் திருப்பலியும் இடம்பெற்றது. 30ம் திகதி அருட்பணி கேப்ரியல் நிக்கலஸ் அடிகளால் மாலை ஆராதனையை மேற்கொண்டார். தொழிலாளர்களின் பாதுகாவலரான புனித சூசையப்பரின் திருநாள் திருப்பலி அருட்பணி சவேரியார் (காமலைட் சபை) அடிகளார் நிறைவேற்றினார். அவரோடு இணைந்து மறைப்பணி நிலைய இயக்குனர் அருட்பணி. என்டன் மொரிஸ் அடிகளார், அருட்பணி ரிச்சர்ட் அடிகளார் (யேசு சபை), பங்கு அருட்பணி ஜேம்ஸ் சுரேஷ் அடிகளார் (யேசு சபை) ஆகியோரும் திருப்பலியை நிறைவேற்றினார்கள். விசேடமாக...

15ம் பக்கம்

## இரத்தினபுரி பேராலயத்திற்கு புதிய அருட்சகோதரியின் வருகை







"அன்பின் சகோதரிகள் சபை"யைச் சேர்ந்த அருட்சகோதரி ஜெனிற்றா இராகல் அவர்கள் இரத்திரனபுரி பங்கிற்கு வருகை தந்துள்ளார்கள். அருட்சகோதரி அவர்கள் அரச நியமனம் பெற்றவரும் - கத்தோலிக்க சமயபாடம் பயிற்றப்பட்டவரும். இவர் வவுனியா அ.த.க பாடசாலையில் சேவை புரிந்தவருமாவார். அருட்சகோதரி அவர்கள் 23-04-2018 தொடக்கம் இரத்தினபுரி தமிழ் மகா வித்தியாலயத்துக்கு இடமாற்றம் பெற்று வந்துள்ளார்.

கடந்த 29-04-2018 அன்று பேராலயத்திற்கு வரவேற்கப்பட்டதுடன் எமது பேராலயத்தில் சமய - சமூக பணிபுரிய இணைந்துக்கொண்டார். மலையக மக்களுக்கும் - பிள்ளைகளுக்கும் - அரும்பணி புரியவும் தம்மை அர்ப்பணித்துக் கொண்டார். பேராலய வழிபாட்டு - ஆராதனை பணிகள் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதும் குறிப்பிடத்தக்கது.

அருட்சகோதரி அவர்களை 06-05-2018 அன்று மறைப்பாடசாலைக்கு மாணவர்கள் மலர்ச்செண்டு கொடுத்து, வாழ்த்தி வரவேற்றனர். மறையாசிரியர்கள் ஆரத்தி எடுத்து அன்புடன் வரவேற்றனர். நிகழ்வுகளை படத்தில் காண்கின்றோம்.

**தகவல் – படங்கள்: மேரி இருதயநாதன் (மறையாசிரியர்), பேரலயாம், இரத்தினபுரி**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரிவின் மன்றாட்டு

# “மிகவும் இரக்கமுள்ள தாயே”

அன்னை மரியாவை நோக்கிக் காலம் காலமாக பல மரபு செபங்களைச் செபித்து வருகிறது திருச்சபை. இந்தச் செபங்களின் வியத்தகு பின்னணியையும், வரலாற்றையும் அறிந்துகொண்டால், இன்னும் அதிக ஆர்வமுடனும், ஈடுபாட்டுடனும் அவற்றை செபிக்க இயலும் என்று நம்புகிறேன்.

மரியன்னை மன்றாட்டுகளில் எல்லாம் மிகவும் புகழ் பெற்றது **“மிகவும் இரக்கமுள்ள தாயே”** என்னும் செபம்தான் என்று துணிந்து சொல்லலாம். ஏனெனில், இந்தச் செபத்தை செபிக்காத அல்லது தெரியாத கத்தோலிக்கர் எவரும் இலர் எனக் கூறலாம்.

**“மெமொராரே”** (Memorare) என்ற இலத்தீன் முதல் சொல்லால் அறியப்படும் இந்தச் செபம் மிகவும் பிரபலமானது. **“உமது அடைக்கலமாக ஓடிவந்து உம்முடைய உபகார சகாயங்களை இரந்து, உமது மன்றாட்டுக்களின் உதவியைக் கேட்ட ஒருவராகிலும் உம்மால் கைவிடப்பட்டதாக ஒருபோதும் உலகில் சொல்லக் கேள்விப்பட்டதில்லை என்று நினைத்தருளும்”** என்று மிகவும் துணிந்து நாம் அறிக்கையிடுகின்றோம்.

ஆற்றல் மிக்க இந்தச் செபத்தை இயற்றியவர் பன்னிரெண்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த புனித கிளேர்வா நகர பெர்னார்ட் என்று பரவலாகச் சொல்லப்பட்டாலும், அது வரலாற்று உண்மை அல்ல. இந்தச் செபம் 15ம் நூ-ற்றாண்டைச் சேர்ந்தது என்று நம்பப்படுகிறது. இந்தச் செபம் புனித பெர்னந்தின் செபம் என்று அறியப்படுவதற்குக் காரணம் புனித பெர்னந்தின் பெயர் கொண்ட இன்னொரு குருவானவரே. இந்தச் செபத்தை மிகவும் பிரபலப்படுத்திய பெருமை கிளாட் பெர்னார்ட் (Fr. Claude Bernard - 1588 - 1641) என்னும் பெயர் கொண்ட 17ம் நூற்றாண்டு பிரான்ஸ் நாட்டு குருவானவரையே சாரும்.

இந்தச் சொத்தைத் தமது தந்தையிடமிருந்து கற்றுக்கொண்டதாக அவர் குறிப்பிட்டுள்ளார். அவர் ஒருமுறை நோய்வாய்ப்பட்டு, சாகுந் தறுவாயிலிருந்தபோது, இந்தச் செபத்தை மன்றாடியதால், அற்புதமாக நலம் பெற்றெழுந்தார். அந்த அற்புத அனுபவத்திற்குப் பிறகு, இந்தச் செபத்தை பிரபலப்படுத்துவதில் அதிக ஆர்வம் காட்டினார். சிறைக் கைதிகள், குற்றவாளிகளுக்கு நற்செய்தி அறிவிப்பதையே முதன்மை அருள்பணியாக ஆற்றிய கிளார்ட் பெர்னார்ட் இந்தச் செபத்தைப் பயன்படுத்தியே தமது பணியில் பல வெற்றிகளைப் பெற்றார். இந்தச் செபத்தைப் பயன்படுத்தியதால், கடின குற்றவாளிகள் கூட மனந்திரும்பியதை அவர் கண்டார்.

எனவே, இந்தச் செபத்தைப் பிரபலப்படுத்துவதில் முனைந்தார். அருள்பணியாளர் பெர்னார்ட். அவர் அந்தக் காலத்திலேயே இந்தச் செபத்தை இரண்டு இலட்சம் படிகள் அச்சிட்டு ஊர், ஊராகச் சென்று மாதா பக்தியைப் பரப்பினார் என வரலாறு சொல்கிறது. இந்தச் செபத்தால் எண்ணிலடங்கா அற்புதங்கள் நடந்தன என்று அவர் பதிவுசெய்துள்ளார்.

இந்தச் செபத்தைப் பயன்படுத்திப் பலன் கண்டோர் எண்ணிலடங்கார். அவர்களில் பிரபலமான ஒரு புனிதர் புனித பிரான்சிஸ் டி சேல்ஸ். அருள்பணி. கிளாட் பெர்னார்டைவிட 21 வயது மூத்தவரான புனித பிரான்சிஸ் டி சேல்ஸ் சம காலத்தவர். அவரும் பிரான்ஸ் நாட்டவரே. அவர் இந்தச் செபத்தைப் பயன்படுத்திப் பலன் அடைந்ததாக புனித அல்போன்ஸ் லிகோரியார் பதிவு செய்துள்ளார்.

புனித பிரான்சிஸ் சேல்ஸ் 17 வயதில் இறைவனுக்குத் தம்மையே அர்ப்பணிக்க முன் வந்தார். ஆனால், அலகை அவருக்கு அவநம்பிக்கை என்னும் சோதனையைத் தந்து கொண்டேயிருந்தான். குறிப்பாக, கால்வினியன் தப்பறையான **“முன்குறித்தல்”** (Predestination) கொள்கைப்படி தாம் நரகத்திற்கு முன் குறிக்கப்பட்டுவிட்டதாக அவர் நம்பினார். தாம் பெரிய பாவி என்றும், தாம் இறைப்பணிக்குத் தகுதியுள்ளவர் அல்லர் என்றும் பிரான்சிஸ் சேல்ஸ் எப்போதும் சிந்தித்து வந்தார். இதனால், குழப்பமும், மன உளைச்சலும் அடைந்தார். இதன் விளைவாக அவரால் தூங்க முடியவில்லை, சாப்பிட முடியவில்லை. மெலிந்து உருக்குலைந்து போனார்.

ஒரு நாள் மாலை வேளை ஒரு கோவிலுக்குள் நுழைந்தார். அங்கே அன்னை மரியாவின் படத்தையும், அந்தப் படத்தின் கீழே **“மிகவும் இரக்கமுள்ள தாயே”** செபத்தையும் கண்டார் பிரான்சிஸ். அந்தச் செபத்தை உருக்கத்துடன் மன்றாடி அன்னை



## 1846ம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இந்தச் செபத்தை செபிக்கிறவர்களுக்குப் பேறு பலன் கிடைக்கும் என்று அறிவித்தார்.

மரியாவிடம் தன்னை ஒப்படைத்தார். என்ன வியப்பு! அக்கணமே அவநம்பிக்கை என்னும் மிகப் பெரும் சோதனையிலிருந்து உடனடி விடுதலை பெற்றார். இதன் விளைவாக உடல் நலமும் பெற்றார். அதன்பின் நடந்ததெல்லாம் வரலாறு. பிரான்சிஸ் டி சேல்ஸ் ஆயராகி, நாற்பதாயிரம் கால்வின் கிறிஸ்தவர்களைக் கத்தோலிக்கர்கள் ஆக்கினார். திருச்சபையின் மறைநூல் அறிஞர் எனப் புகழ் பெற்றார். அவர் நாள்தோறும் **“மிகவும் இரக்கமுள்ள தாயே”** வேண்டுதலைச் செபித்ததாகவும், மரியன்னை தம்மை ஒருபோதும் கைவிட்டதில்லை என்றும் எழுதியுள்ளார்.

இந்தச் செபத்தை அதிகம் பயன்படுத்திய இன்னொரு பிரபல புனிதர் அன்னை தெரசா. எப்போதெல்லாம் அவசரத் தேவைகள் இருந்தனவோ, அப்போதெல்லாம் அன்னை தெரசா இந்தச் செபத்தை வேண்டினார் என்றும், தமது சபையின் சகோதரிகளுக்கும் அப்படிச் செய்யச் சொல்லி அறிவுறுத்தினார் என்றும் அவரது வாழ்க்கை வரலாற்றில் பதிவு செய்யப்பட்டிருக்கிறது.

குறிப்பாக, அவசரத் தேவைகளில் மிகவும் இரக்கமுள்ள தாயே செபத்தை ஒன்பது முறை செபிக்கின்ற பழக்கத்தை அவர் தமது சகோதரிகளிடம் அறிமுகப்படுத்தினார். இப்பழக்கம் **“விரைவு நவநாள்”** (Express Novena) என்று அழைக்கப்பட்டது. ஒருமுறை ஜெர்மனி நாட்டில் பணிபுரிய ஒரு சகோதரிக்கு அந்நாட்டு விசா அவசரமாகத் தேவைப்பட்டது. அன்னை தெரசாவின் அறிவுரைப்படி சகோதரிகள் விரைவு நவநாளில் ஈடுபட்டு, ஒன்பது முறை மிகவும் இரக்கமுள்ள தாயே செபத்தைச் செபிக்கத் தொடங்கினார்கள். எட்டாவது முறை செபித்துக் கொண்டிருந்தபோதே, “விசா தயாராகிவிட்டது” என்று தொலைபேசி வந்ததாம்.

அறுநூறு ஆண்டுகளாக இந்தச் செபம் உலகெங்கும் உள்ள கத்தோலிக்கர்களால் செபிக்கப்பட்டு வருகிறது. 1846ம் ஆண்டு திருத்தந்தை ஒன்பதாம் பத்திநாதர் இந்தச் செபத்தை செபிக்கிறவர்களுக்குப் பேறு பலன் கிடைக்கும் என்று அறிவித்தார். இன்றளவும் கத்தோலிக்கர்களின் மனம் கவர்ந்த ஒரு மன்றாட்டு இது என்பதில் ஐயமில்லை. நாமும் இந்த வலிமையான மன்றாட்டை நாள்தோறும் செபித்து, அன்னையின் அன்பையும், ஆற்றலையும் அனுபவிப்போமாக!

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# புனித அந்தோனியார் திருவிழா - 2018
## கொச்சிக்கடை, கொழும்பு 13.



"ஆண்டவரின் இதயத்திற்கு உகந்த மேய்ப்பாளரான புனித அந்தோனியாரே எங்களுக்காக வேண்டிக்கொள்ளும்".

**2018 ஆனி மாதம் 03ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.30 மணிக்கு**

**(தமிழ், சிங்கள திருப்பலியைத் தொடர்ந்து கொடியேற்றம் இடம்பெறும்.)**

நவநாட்கள் : ஆனி மாதம் 3ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை தொடக்கம் 11ஆம் திகதி திங்கட்கிழமை வரை தினமும், மாலை 06.00 மணிக்கு.

**மறையுரையாளர்கள் :** அருட்பணி என்டன் தினேஸ் அடிகள் - சிங்கள மொழியில்
அருட்பணி. ஜெ. ரமேஸ் அடிகள் - தமிழ் மொழியில

### மாலை ஆராதனை (வெஸ்பர்ஸ்)

ஆனி மாதம் 12ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு கொழும்பு உயர் மறைமாவட்ட **பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித்** ஆண்டகையின் தலைமையில் இடம்பெறும்.

**ஆனி மாதம் 13ஆம் திகதி திருவிழா தினத்தன்று திருப்பலிகள் பின்வருமாறு**

| | |
|---|---|
| அதிகாலை 4.00 மணி | (தமிழ்) ஆலய பரிபாலகர் |
| அதிகாலை 5.00 மணி | (சிங்களம்) மறைமாவட்ட பிரதான பொருளாளர் |
| காலை 6.00 மணி | (தமிழ்) அருட்பணி. ஜோய் மரியரட்ணம் அடிகள் (கிளேரசியன் சபை) |
| காலை 7.00 மணி | (சிங்களம்) 2018ஆம் ஆண்டில் புதிதாக குருப்பட்டம் பெற்ற |

அருட்பணியாளர்களால் ஒப்புக்கொடுக்கப்படும்.

**திருநாள் சிறப்புத் திருப்பலி காலை 8.00 மணிக்கு [தமிழ்]**

திருகோணமலை மறைமாவட்ட ஆயர் மேதகு நொயல் இம்மானுவேல் ஆண்டகையின் தலைமையில் ஒப்புக்கொடுக்கப்படும்.

**திருநாள் சிறப்புத் திருப்பலி காலை 10.00 மணிக்கு [சிங்களம்]**


கொழும்பு உயர் மறைமாவட்ட துணை ஆயர் மேதகு. மெக்ஸ்வல் சில்வா ஆண்டகையால் ஒப்புக்கொடுக்கப்படும்.

**திருநாள் சிறப்புத் திருப்பலி நண்பகல் 12.00 மணிக்கு [ஆங்கிலம்]**

திருத்தந்தையின் இலங்கைக்கான வத்திக்கான் தூதுவர் மேதகு. பியார் வான் டொட் ஆண்டகையின் தலைமையில் இடம்பெறும்.

திருச்சுரூப பவனியானது ஆனி மாதம் 13ஆம் திகதி மாலை 5.00 மணிக்கு ஆரம்பமாகி இறுதி ஆசீர்வாதம் இரவு 8.00 மணியளவில் கொழும்பு பேராயர் அதிமேதகு மெல்கம் கர்தினால் ரஞ்சித் ஆண்டகையால் வழங்கப்படும்

Q18N1194)


அனைத்து விதமான அச்சுப்பதிப்பு தேவைகளையும் சிறப்பான முறையில் செய்துகொள்ள...

மிகக் குறைந்த விலையில் கூடிய சேவைகளைப் பெற்றுக்கொள்ள...

# கொழும்பு கத்தோலிக்க அச்சகம்




## உங்களுக்கான பல்வேறு விதமான சேவைகள்

- நவீன தொழிற்நுட்ப ரீதியில் [ஓப்செட் முறையில்]
- நவீன பிரதியாக்கம் [டுப்ளோ],
- வர்ண போட்டோ பிரதிகள் எடுத்தல் மற்றும் ஸ்கேன் எடுத்தல் பல வணர்ணங்களில் டுப்ளோ பிரதிகள் எடுத்தல்

- பாடற்தாள்கள்
- நினைவு மலர்கள்
- செபப் புத்தகங்கள்
- நவநாள் புத்தகங்கள்
- சிறுகதை புத்தகங்கள்
- பில் புத்தகங்கள்
- ரிசிட் புத்தகங்கள்
- சஞ்சிகைகள்
- சான்றிதழ்கள்
- லெட்டர் ஹெட்ஸ்
- விசிடிங் கார்ட்ஸ்
- ஞாயிறு வழிபாடுகள்
- திருமணம் மற்றும் ஆலயத் திருவிழாக்கள், இறந்தோருக்கான திருப்பலியில் பாடப்படும் பாடற்தாள்கள் ஆகியவையும் அச்சிடப்படும்.

**தொடர்புகொள்ளுங்கள்**

இயக்குனர் அருட்தந்தை, கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இலக்கம் 02, ஞானார்த்த ப்ரதீப்பய மாவத்தை கொழும்பு - 08.

தொ.பே இல. 0112695984, 0112678106, 0114614927 பெக்ஸ் - 0112692586

E-mail : cgnanaoli@yahoo.com / www.colomboarchdiocesancatholicpress.com


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அச்சுப்பதிப்பும் வெளியீடும், அருட்தந்தை K.P. கெமிலஸ் N. பர்னாந்து, இயக்குனர். கொழும்பு கத்தோலிக்க அச்சகம், இல. 02 ஞானார்த்த பிரதீப மாவத்தை, கொழும்பு - 08. ஆசிரியர் அருட்தந்தை. மனோகுமாரன் நாகரட்ணம்